**Rathy Jewellers**
**Rathy Silk House**
*22ct Gold Wedding Jewellery*
Ratail & Wholesale
Open 7days a Week
Mon - Sat . 10.00am - 6.30pm
Sun . 12.00Noon - 6.30pm
28, Ealing Road, Wembley,
Middx HAD 4TL
Tel . 020 8903 3063
Fax . 020 8903 9711

இலவசம் * சிறப்பிதழ் * பிரித்தானியா

# ஈழமுரசு
ஐரோப்பா

POOBALAM WEEKLY

25 Novembre - 01 Décembre 2004

MITHUS Jewellery
322-324
London Road,
Croydon
020 8683 1756
76 Tooting High
Street, London
020 8767 5333
DIAMONDS PALACE
MITHUS Jewellery

சவுத்கோல் மாநகரில் நாடவேண்டிய இடம்
துவாரகா
குளிரூட்டிய மீன்கள் அனைத்து இறைச்சிவகைகள், மரக்கறி வகைகள், இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், தொலைபேசி அட்டைகள், Audio CD, DVD, VCD & Video மற்றும் அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
நல்ல தரம் உத்தரவாதம் இவையே எமது குறிக்கோள்.
DUVARAKA CASH & CARRY
199 The Broadway Southall
Middx UB1 1LZ
Tel: 020 8813 9126
Fax: 020 8574 2899

AA ExPRESS
இது வடக்கு இலண்டனிலுள்ள முதல்தர வாடகை மோட்டார் நிறுவனம்.
Cab ஐ உள்நாட்டு சர்வதேச கூரியர் சேவை நிபுணர்கள்.
020 8902 0123
உங்களது சகலபொதிகள்,பயணிகள் தேவைகளுக்கு.
புதிதாய்ச் சேர்வதற்கு:
Hotline 020 8903 8586
www aaexpress.co.uk யில் உங்களைப் பதிவுசெய்யுங்கள்.
Fax: 020 8903 1771
தொடர்பு: ContactUs@aaexpress.co.uk
நீங்கள் www.aaexpress.co.uk மூலம் கட்டணம் செலுத்தலாம்.
நிறுவப்பட்டது 1972
VISA

ATN Jewellery
மங்கையர் மனங்கவர் நகைகளோ மாற்றுக்குறையாத தங்கம்.
தரம்,சேவை, நாணயம்....
அனைத்தும் இங்கே தங்கம்...
வாரத்தில் 7நாட்களும் காலை 11.30 முதல் இரவு 7.00மணிவரை திறந்திருக்கும்.
37 Palmerston Road, Walthamstow
London E17 6PR
Tel : 020 8521 9767 Fax :020 852 11281

New Kannan Stores
தரமான இலங்கை உணவுப்பொருட்கள், கடலுணவு வகைகள், மரக்கறி வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
251 B Fore Street Edmonton
London N18 2TY
Tel - 020 8884 4979



அகவை 50

## வாழ்த்துகின்றோம்

கொட்டடா ! முரசு; எங்கே
கொம்பது எடுத்து ஊது.
தட்டடா ! கைகள்; எங்கள்
தலைவனைப் பாடு; எம்மை
முட்டிய துயரம் யாவும்
முடிந்திடும்; புலிகள் சேனை
எட்டிய வரையும் பாய்ந்து
எழுந்திடும்; தலைவன் வாழி !

TAMILINI CASH & CARRY
இலங்கை,இந்தியா,பாகிஸ்தான்,இறக்குமதிப் பொருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.தினசரி,வாராந்த,மாதாந்த சஞ்சிகைகள்,திரைப்பட,தொடர்நாடக ஒளிநாடாக்கள் என்பனவற்றையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
195-197 The Broadway, Southall,
Middlesex UBI 1LZ
Tel : 020 8606 9900
Fax : 020 8843 9429
309-311 London Road, Croydon
Surrey CR0 3TA
Tel : 020 8683 4040
Fax : 0208 8683 0066

Southharrow Food & Wines
SOUTH HARROW FOOD & WINES
234 - 236 Northolt Rd,
south harrow HA2 8DU
Tel- 020 84236321

உண்மையின் முன்னால் நடுநிலமை என்பது இல்லை - கப்டன் கஜன்



சமாதானத்தை நான் ஆத்ம பூர்வமாக விரும்புகிறேன். எமது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது ஆன்மீக இலட்சியம்.

# தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்




அகவை 50

# COGEST S.A.R.L

**CENTRE DU SERVICE TRADUCTION, DE LA GESTION DES ENTREPRISES ET DU CONSEIL**

**SECTION <<A>> : SERVICE TRADUCTION** (மொழிபெயர்ப்பு சேவைப்பிரிவு)

- அனுபவம், தகுந்த தகமை படைத்தோரினால் தரமான, விரைவான மொழிபெயர்புச்சேவை.
- OFPRA, COMMISSION, வீட்டுரிமை, அகதி உரிமை, பிரஜாவுரிமை, குடியுரிமை சார்ந்த பத்திரங்களின் மொழிபெயர்ப்புகள்.

**SECTION <<B>> : GESTION DES ENTREPRISES** (நிறுவனங்களின் முகாமை சேவைப்பிரிவு)

- வர்தகநிறுவனங்களின் உருவாக்கம்.
- கணக்கியல், முகாமை செயற்பாடுகள்.
- மாதாந்த, வருடாந்த வரி, சம்பள, ஏனைய பத்திரங்களை பிரெஞ்சு சட்டதிட்டங்களுக்கமைய தயாரித்தல்.

**SECTION <<C>> : CONSEIL** (ஆலோசனைப்பிரிவு)

- அகதிஉரிமை, பிரஜாவுரிமை, குடியுரிமை கோரிக்கைகளுக்கான ஆலோசனைகள்.
- வர்த்தக நிறுவனங்களின் உருவாக்கம், இயக்கம், கணக்கியல், முகாமைசெயற்பாடுகளுக்கான ஆலோசனைகள்.
- வர்த்தக நிறுவனங்களின் கணனி (Computer) தேவைகள், வன்பொருள்-மென்பொருள் (Hardware-Software) தெரிவுகள், இணையவலைத்தொடுப்புகள், (Internet Connection) சார்ந்த ஆலோசனைகள்.
- தொழில் சார்ந்த பிணக்குகளுக்கான தீர்வுஆலோசனைகள்.
- தனிப்பட்ட பிரச்சனைகளுக்காக சட்டஆலோசனைகள்
- கல்வித்தெரிவுகள் சார்ந்த ஆலோசனைகள்.

Siége social :
25, Rue Philippe de Girard
75010 PARIS.
M°:La Chapelle ou Gard du Nord.

அனைத்து தொடர்புகளுக்கும் – S.நந்தகுமார்.
Ouvert du Lundi au Samedi
De 10h00 à 13h 00 et 14h00 à 19h30

Tél : 01 40 36 17 22
Portable : 06 22 16 67 18
Fax : 01 40 36 17 29
E-Mail: cogest4@wanadoo.fr

# நல்லூர் கந்தன் களஞ்சியம்

## NALLAI KUMARAN TRADERS sarl

இலங்கை - இந்திய
மளிகைப் பொருட்கள்



காலை 10.00 மணி தொடக்கம் 19.00 மணிவரை தொலைபேசி மூலம், உங்களுக்குத் தேவையான அனைத்து மளிகைப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் வீடுதேடி கொண்டுவந்து தரப்படும்.



191, Rue du Fg. St. Denis,
75010 Paris.
Tél : 01 42 09 06 82
06 23 71 35 96
RER/M° : Gare du Nord/ La chapelle
Bus : 350, 302, 65, 48

# மாவீரர் வார நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

## பிரித்தானியா, டென்மார்க், சுவிஸ், நோர்வே மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் நேரடி நிகழ்ச்சி

(22.11.04)

தமிழீழ மாவீரர் நாளுக்கு முன்னேற்பாடாகத் தமிழர் தாயகமெங்கும் தமிழீழ மாவீரர் எழுச்சிவார நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. நேற்று காலை 9 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் தமிழீழ மாவீரர் வார நிகழ்வுகள் ஆரம்பமாகின. 24ம் திகதி வரை மாவீரர் வார நிகழ்வுகள் நடைபெற்று பின்னர் மூன்று தினங்களும் மாவீரர் எழுச்சி நாட்களாக அனுஷ்டிக்கப்பட்டு இறுதி நாளான 27ம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படும்.

மாவீரர் வார நிகழ்வுகளில் பொது இடங்கள், பாடசாலைகள், மாவீரர் துயிலும் இல்லங்கள் ஆகியவற்றில் சிரமதானப் பணிகள் இடம்பெறும். நேற்று ஆரம்பமாகிய மாவீரர் வாரத்தை முன்னிட்டு வீதிகள், சந்திகள் என்[illegible] சிவப்பு - மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு மாவீரரின் தியாகங்களைக் குறிக்கும் வகையிலான வாசகங்கள் அடங்கிய பதாதைகள் என்பன வீதிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ளன. அத்துடன் முக்கிய சந்திகளில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 26ம் திகதி தமிழீழத் தேசியத் தலைவரின் 50வது பிறந்த தினத்தை முன்னிட்டு அன்று காலை நல்லூர் கந்தசாமி கோவிலில் விசேட ஆராதனைகள் நடத்தப்பட்டுப் பொங்கல் நிகழ்வு நடத்தப்படும். அத்துடன் யாழ்.குடாநாட்டின் பல இடங்களிலும் மக்களுக்கான வைத்திய சேவைகள் நடத்தப்படவுள்ளதுடன், இரத்ததான நிகழ்வுகளும் இடம்பெறும். மேலும் வறிய மக்களுக்குப் பொது அமைப்புக்கள், மற்றும் தமிழீழ எழுச்சிப் பேரவையினால் உதவிப் பொருட்கள் வழங்கப்படும்.

பின்னர், மறுநாள் 27ம் திகதி தமிழீழ மாவீரர் நாள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படும். அன்று மாலை 5.45 மணிக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர்நாள் நினைவுரை இடம்பெறும் இதனைத் தொடர்ந்து 6.05 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் வழிபாட்டிடங்கள் என்பவற்றில் மணி ஒலி எழுப்பப்படும். இதனைத் தொடர்ந்து 6.07 க்கு மாவீரர்களுக்கு ஒருமணித்துளி நேரம் அகவணக்கம் செலுத்தப்படும். இந் நேரத்தில் உயிர் காப்புப் பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர, ஏனைய அனைத்து ஊர்திகளும் அந்தந்த இடத்திலேயே நின்று அமைதி பேணப்படும். அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07க்கு பிரதான ஈகைச்சுடர் ஏற்றப்படும். மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் என்வற்றிற்கு முன் மாவீரரின்பெற்றோர் குடும்பத்தினர் ஈகைச் சுடர் ஏற்றுவார்கள்.

இதேவேளை, தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இம்முறை மாவீரர்தின நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரித்தானியா, டென்மார்க், சுவிஸ், நோர்வே மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இம்முறை தாயகத்தில் மாவீரர் தினம் நடைபெறும் அன்றைய தினம், அதே நேரத்தில் நடைபெறவுள்ளதுடன், தேசியத் தலைவரின் மாவீரர்தின உரை நேரடியாக ஒலிபரப்பப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, பிரான்ஸ் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் தொடர்ந்து வரும் நாட்களில் மாவீரர்தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.



யாழ். கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த 21ம் திகதி ஆரம்பமான முதல்நாள் நிகழ்வில் இருந்து...

# `ஒரு குரலில் சமாதான அக்கறையை வெளிப்படுத்துங்கள்' இதுவே தலைவரின் செய்தி

(21.11.04)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன் ஊடாக விடுதலைப் புலிகளினால் சிறீலங்கா ஜனாதிபதிக்கு இறுதியாக அனுப்பி வைக்கப்பட்ட தகவல் பற்றிய விபரங்களை அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் வெளியிட்டுள்ளார். கிளிநொச்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர்கள் இது பற்றி கேட்டபோது இந்த விபரங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

எவ்வித நிபந்தனைகளுமின்றி தன்னாட்சியுள்ள இடைக்கால நிரவாக வரைபு அடிப்படையில் பேசுவதற்கு தயாராகவிருக்கின்றோம். அதற்கு முன்னதாக அரசாங்கம் தனது கூட்டு கட்சிகளை சமாதான முன்னெடுப்பிற்கு முழு ஆதரவையும் வழங்கும் வகையில் ஒன்றிணைத்து ஒருமுகப்படுத்தி ஒரு தீர்மானத்தை அறிவிக்க வேண்டும். இதுதான் அந்த தகவல் என சு.ப. தமிழ்செல்வன் விபரங்களை வெளியிட்டார்..

ஜனாதிபதி பேச்சுவார்த்தை தொடர்பாக தனது ஈடுபாட்டை காட்டினாலும், ஜே.வி.பி.யும் ஏனைய கட்சிகளும் பகிரங்கமாக எதிர்க்கின்றன. இந்நிலையில் ஜனாதிபதியை மட்டும் நம்பிக்கொண்டு செல்ல முடியாது என்றும் குறிப்பிட்டார். நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சனுக்கும் தமிழீழ தேசிய தலைவர் வேலுபிள்ளை பிரபாகரனுக்குமிடையில் இடம் பெற்ற சந்திப்பு, ஜப்பானிய விசேட பிரதிநதி யசூசி அகாசிக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பு, அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான குழுவினரின் ஐரோப்பிய விஜயம் போன்ற விடயங்கள் குறித்தும் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கருத்துக்கள் பரிமாறியதாகவும் கூறினார்.

# விடுதலைப் புலிகளுக்கு சந்திரிகா காலக்கெடு!

விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக தமது இறுதி நிலைப்பாட்டை இம்மாதத்திற்குள் அறிவிக்க வேண்டும் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கூறியுள்ளார். சுயாதீன தொலைக்காட்சிக்கு கடந்தவாரம் அளித்திருந்த விசேட செவ்வி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்த சில விடயங்கள் வருமாறு, விடுதலைப் புலிகள் அடிக்கடி பல்வேறு காரணங்களைக் கூறி பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு பின் நிற்காமல் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும்.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் செய்யப்பட்டுள்ளது. எனவே பேச்சுவார்த்தைக்கு வரவேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகளை சார்ந்தது. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விருப்பமா? இல்லையா? என்பதை இம்மாதத்தில் விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும். இனப்பிரச்சினை தொடர்பாக நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் முதல் தடவையாக ஒரு இணக்கப்பாட்டை எட்டியுள்ளன. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே உடன்பாடு இல்லை என்று விடுதலைப் புலிகளினால் தெரிவிக்கப்பட்டு வருவது ஏற்கக் கூடியது அல்ல. சகல கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நான் தயாராகவிருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

Errances Travels

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# சிறீலங்கா கடற்படைக்கு நாம் வழங்கும் பயிற்சியை குறைத்து மதிப்பிட முடியாது

## – பாகிஸ்தான் கப்பல் கப்டன் தெரிவிப்பு –

(21.11.04)

சிறீலங்கா கடற்படையினருக்கு பயிற்சி வழங்குவதில் பாகிஸ்தான் கடற்படை ஆற்றிவரும் பணிகளை யாராலும் குறைவாக மதிப்பிட முடியாதென கொழும்பு துறைமுகம் வந்த பாகிஸ்தானின் பீ.என்.எஸ். நசர் என்ற போர்க் கப்பலின் கப்டன் கமடோர் முகம்மட் அனிப் சன்டிலா தெரிவித்தார். பாகிஸ்தானின் மூன்றாவது பெரிய யுத்தக் கப்பலான நசர் கப்பலுடன் டரிக் என்ற துணை யுத்தக், கப்பலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு குயீன் எலிசபெத் இறங்குதுறைக்கு வந்தது.

இந்த யுத்தக் கப்பல்கள் இரண்டையும் பார்வையிடுவதற்கு சிறீலங்காவிற்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய ஏற்பாட்டில் தூதரக அதிகாரியான சஹார் அஹமட், பர்லாஸ் தலைமையில் ஊடகவியலாளர்கள் குழு ஒன்றும் அழைத்துச் செல்லப்பட்டது.

பி.என்.எஸ். நசர் போர்க் கப்பலானது தெற்காசியாவின் சில நாடுகளுக்கு கடற்போர் பயிற்சிகளை வழங்கி வந்துள்ளது. இதுவரை 15ற்கும் மேற்பட்ட, நாடுகளுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது. அதில் சிறீலங்காவிற்கே அதிகளவான பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, போர் நடவடிக்கைகள் எதிலும் இதுவரை ஈடுபடாத இக்கப்பல், போரில் கலந்து கொண்டுள்ள கப்பல் ஒன்றை விட அதிகளவான நடைமுறை அனுபவங்களை பெற்றுக் கொண்டு, ஆயிரக் கணக்கான கடற்படை மாலுமிகளுக்கு கடலுக்கு மேலான மற்றும் நீருக்கு அடியிலான கடினமான பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

மறுபக்கம் கடலில் ஏற்படும் இடர்களின் போதும் ஆபத்தில் சிக்கியுள்ள போதும் ஏனைய கப்பல்கள், படகுகள் ஆகியவற்றில் பயணம் செய்பவர்களை காப்பாற்றும் நடவடிக்கைகள் மற்றும் சோமாலியாவில் ஏற்பட்டுள்ள யுத்த அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கைக்கு அமைய சேவை செய்துள்ளது. நசர் கப்பலானது இரண்டு உலங்குவானூர்திகளைக் கொண்ட விமானத் தாங்கியாகவும் உள்ளது. இதில் 350ற்கும் மேற்பட்ட மாலுமிகள் கடமையாற்றுகின்றனர்.

இவர்கள் படைகளை ஏற்றி இறக்கும் பணிகளுடன் யுத்த தளபாடங்களைக் கையாளும் மற்றும் கப்பல் முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 50ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நட்புறவுப் பயணங்களை மேற்கொண்டுள்ள இக்கப்பல் அந்தந்த நாடுகளின் கடற்படைகளுடன் இராணுவ ரீதியிலான ஒத்துழைப்புகளையும் வழங்கி வந்துள்ளது. கடந்த புதன்கிழமை கொழும்பில் இருந்து புறப்பட்ட இக்கப்பல் பர்மாவிற்கு சென்றுள்ளது.

---

தமிழீழத்தின் தேசிய வானொலி!
தமிழ்மக்களின் உரிமைக்குரல்!

## புலிகளின் குரல்

இணையத்தில்..

தமிழீழத்தின் தேசியக் குரலாக ஒலித்துவரும், விடுதலைப் புலிகளின், 'புலிகளின் குரல் வானொலி' இம் மாதம் 21ம் திகதியுடன் 14 ஆண்டு கால சேவையை நிறைவு செய்து 15ம் ஆண்டில் காலடி எடுத்து வைக்



கவுள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக தாயக வானலைகளில் சவால்களுக்கு மத்தியில் ஒலித்துவரும் புலிகளின் குரல் வானொலி புதிய ஆண்டில் இணையத் தளத்திலும் வலம் வரவுள்ளது.

www.pulikalinkural.com என்ற இணையத்தள முகவரி ஊடாக புலிகளின் குரலை கேட்கலாம் என்பதை மகிழ்வுடன் புலிகளின் குரல் வானொலியினர் அறியத் தந்துள்ளனர். இதேவேளை, புலிகளின்குரல் வானொலியின் 14 ஆண்டு நிறைவு விழா புலிகளின் குரலின் அமலன் அரங்கில் நடைபெற்றது. அத்துடன் விழாவில் சிறப்பு உரைகளும் இடம்பெற்றன.

---

# யுத்தத்திற்கான முனைப்புடன் வரவு செலவுத் திட்டம்

## - எதிர்த்து வாக்களிக்கப் போவதாக தமிழ் கூட்டமைப்பு அறிவிப்பு -

(21.11.04)

சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் நேரடியாகவும் மறைமுகமாகவும் யுத்தத்தை மீண்டும் திணிக்க தயாரிக்கப்பட்டதொன்றென சாடியிருக்கும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டு சட்டமூலப் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக அறிவித்துள்ளது. இது தொடர்பாக, தமிழ் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில் கூறியதாவது, இந்த வரவு - செலவுத் திட்டம் மூலம் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமன்றி, ஏனைய சிறுபான்மை சமூகங்களுக்கு கூட எந்தவொரு விமோசனமும் கிடைக்கப் போவதில்லை என்பது தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மீண்டுமோர் யுத்தத்தை இந்த நாட்டில் திணிக்கும் மறைமுகத் திட்டங்களே இந்த வரவுசெலவுத் திட்டத்தின் மறைமுகமாகவும் நேரடியாகவும் அதிகளவில் காணப்படுகின்றது. அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யின் நலன்களையும் அபிலாசைகளையும் பாதுகாக்கும் விடயங்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. யின் அபிலாசைகளை பாதுகாத்துக் கொள்வதன் மூலமே ஜனாதிபதி சந்திரிகா தனது எதிர்கால அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ளலாமென்ற நிலைப்பாட்டில் உள்ளாரே தவிர, நாட்டில் நிரந்தர அமைதியை உருவாக்க வேண்டுமென்பது இரண்டாம் பட்சம் என்பதையே இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளார். இரு தசாப்த காலத்திற்கும் மேலாக யுத்தத்தினால் அழிந்து போயுள்ள வடக்கு, கிழக்கு புனரமைப்பு பணிகளுக்கென 500 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இரு தசாப்த காலத்திற்கும் மேலான யுத்தத்தினால் வடக்கு, கிழக்கின் இயல்பு நிலையும் அடிப்படை வாழ்க்கையும் அழிந்து போய்க் கிடக்கின்றது. மீள் குடியேற்றம், அழிக்கப்பட்ட குடியிருப்புகள், தேவாலயங்கள், வீதிகள் புனரமைப்பு, மின்சாரம் உட்பட பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்கும் எந்தவொரு வகையிலும் இந்த நிதி போதுமானதாகவில்லை. வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து பெருமளவு நிதியுதவியை பெற்றுக் கொண்டு [illegible]டும் தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு நடவடிக்கையே இதுவாகும்.

சமாதானத்துக்கான எந்த முன்னெடுப்பையும் இதுவரை மேற்கொள்ளாமல் யுத்தத்திற்கான சகல நடவடிக்கைகளையுமே ஜனாதிபதி மேற்கொண்டுவருகின்றார். சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தாம் எப்போதும் தயாராகவுள்ளதாக விடுதலைப் புலிகள் நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் அறிவித்துள்ள நிலையில், அதற்கு எந்தவொரு பதிலுமளிக்காமல் இம்மாத இறுதிக்குள் புலிகள் தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டுமென்று எச்சரிக்கை விடுக்கும் ஜனாதிபதியின் கடும்போக்கு இந்த வரவு - செலவுத் திட்டத்திலும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களு[illegible] எந்தவொரு விமோசனமுமில்லாத இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்ப்பதைத் தவிர எந்தவொரு வழியுமில்லை என அவர் தெரிவித்தார்.

---

# வவுனியாவில் பொதுமக்கள் மீது புளொட் தாக்குதல்

## விடுதலைப் புலிகள் தலையிட்டு தடுத்து நிறுத்தினர்

(21.11.04)

வவுனியாவில் பொது மக்கள் மீது புளொட் குழுவினர் தாக்குதல் நடத்தியதில் இருவர் காயமடைந்தனர். பின்னர் இவ்விடயத்தில் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல், துறையினர் தலையிட்டதையடுத்து நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கோவில்குளத்தில் தண்ணீர் எடுப்பதில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக புளொட் குழுவைச் சேர்ந்த சுமன், சதாசிவம் ஆகியோர் பொது மக்களுடன் முரண்பட்டதுடன் பொது மக்களை தாக்கவும் முற்பட்டுள்ளனர். இதன்போது இரு தரப்பினருக்கும் இடையே முறுகல்நிலை முற்றவே, மேலும் பல புளொட் குழுவினர் தடிகள், கத்திகள், பொல்லுகள் சகிதம் அங்கு வந்ததாகவும், இதன்போது ஏற்பட்ட கைகலப்பில் கோவில்குளத்தைச் சேர்ந்த அன்னராசா, செந்தூரன் ஆகியோர் இவர்களால் தாக்கப்பட்டு காயமடைந்தனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறையிடம் மக்கள் முறையிட்டதையடுத்து, அப்பகுதிக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் சென்று நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் தி.ஞானவேல் இச்சம்பவம் தொடர்பாக வவுனியா சிறீலங்காப் பொலிசாருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

---

# இராணுவம் வீட்டை கையளிக்காததால் மனநிலை பாதிக்கப்பட்ட ஆசிரியை

(21.11.04)

சிறீலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியுள்ள தனது வீட்டைப் பற்றி எண்ணிய ஓய்வுபெற்ற ஆசிரியையொருவர் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உசனைச் சேர்ந்த திருமதி எஸ்.முத்துப்பிள்ளை என்ற ஆசிரியையே யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள இவரது வீடு சிறீலங்கா இராணுவத்தின் 533வது படைப்பிரிவின் பாவனையிலுள்ளது. இவ் வீட்டை மீள ஒப்படைக்கமாறு பல்வேறு தரப்பினர் ஊடாக அவர் முயற்சிகளை மேற்கொண்டு வந்த போதிலும் அது சாத்தியப்படவில்லை. இந்நிலையில் உள ரீதியாக பாதிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர், எனது வீட்டை இராணுவம் இன்னமும் விடவில்லை. பெற்றுத் தாருங்கள் என அடிக்கடி புலம்புகின்றார். இந்நிலையில், இவரது உடல் நலத்தை மேம்படுத்தும் நோக்குடன் இராணுவம் வீட்டை விட்டு விட்டு விட்டது என அவரது உறவினர்கள் கூறி வருகின்றார்கள்.

---

# தமிழகத்தில் இருந்து நான்கு கட்டங்களாக ஈழ அகதிகள் நாடு திரும்புகின்றனர்

(21.11.04)

ஈழத் தமிழர்களை தாயகம் திருப்பி அனுப்பும் பணியை 'அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் நிறுவனம்' (யு.என்.எச்.சி.ஆர்.) மேற்கொண்டு வருகிறது. முதல் கட்டமாக கடந்த 17ம் திகதி எதிர்வரும் 24ம் திகதி வரை நான்கு கட்டமாக திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் தாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை போன்ற பகுதிகளில் இருந்து அகதிகளாக தமிழகம் சென்ற இவர்கள், அங்கு அமைக்கப்பட்ட 104 இலங்கை தமிழர்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டனர். இந்நிலையில் கடந்த யூன் முதல் அக்டோபர் வரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர். இம்மாதத்தில் நான்கு கட்டமாக அனுப்பப்பட உள்ளனர். ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் நிறுவனம் தங்கள் சொந்த செலவில் (விமானப் பயணச்சீட்டு) தாயகம் அனுப்பி வைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. தாயகம் செல்ல விருப்பம் தெரிவித்தவர்கள் தேர்வு செய்யப்பட்டு, குடும்பம் குடும்பமாக பிரிக்கப்பட்டு, 17, 19, 23 மற்றும் 24ம் திகதி ஆகிய நான்கு நாட்களில் இலங்கைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

ஈழமுரசு
POOBALAM WEEKLY

# வரலாற்றின் கொடை

1983 - யூலை, யாழ்குடாவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டனர். தமிழ் மக்களின் மீது பாரிய இன அழிப்பை மேற்கொள்ள காத்திருந்த சிங்களத் தலைமைகளுக்கு இது வரப்பிரசாதமாக அமைந்தது. கொல்லப்பட்ட 13 படையினரின் உடல்களை 'பெட்டிகளில் கூட வைக்காமல்', கொழும்புக்கு கொண்டு சென்று தமிழின விரோதத்தை தூண்டிவிட்டு, இனப்படுகொலையை கட்டவிழ்த்துவிட்டது. அதனால் உருவானது 1983 யூலைக் கலவரம்.

தமிழன் நாயை விடக் கேவலமாக சுடப்பட்டான். தமிழன் என்றால் கண்ட இடத்தில் யாரும் துன்புறுத்தலாம், படுகொலை செய்யலாம் என்ற மனநிலையை சிங்கள இனவெறியாளர்கள் மத்தியில் தோற்றுவித்தது இந்த நிகழ்வு.

ஆனால் அவை எல்லாமே ஓரிரு வருடங்களுக்குள் மாறிப்போயின. அதன்பின் எத்தனையோ சம்பவங்கள். படையினர் நூற்றுக்கணக்கில் உயிரிழந்தனர். தலைநகர் கொழும்பிலேயே கூட படையினர் கொல்லப்பட்டனர்.

ஆனால், சிங்கள இனவாதம் கொதித்தெழவில்லை! தமிழனை வேட்டையாட துணியவில்லை. இன்று வரை அவ்வாறான ஒரு பெரும் கலவரத்தை தோற்றுவிக்க சிங்களத் தலைமைகளால் முடியவில்லை.

காரணம், 'பலம்'. விடுதலைப் புலிகளின் பலம். தமிழனை அடித்தால், விடுதலைப் புலிகள் திருப்பி அடிப்பார்கள் என்ற பயம். அந்தப் பயத்தை சிங்கள இனவாதத்திற்கும், அடித்தால் திருப்பியடிக்கும் துணிவைத் தமிழினத்திற்கும் தந்தவர் தமிழினத்தின் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

தமிழர்களுக்கு தலைமைதாங்க எத்தனையோ தலைவர்கள் முண்டியடித்து முன்வந்தார்கள். எந்தப்பயனுமில்லை. 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் காட்டு' என்ற தத்துவ வாக்கைக் காப்பாற்றுபவர்கள் போன்று, அகிம்சை வழியில் போராடி அடிமேல் அடி வாங்கி அடங்கிப்போகத்தான் முடிந்தது.

'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதான'மெனஎகத்தாளமிட்டன சிங்களத் தலைமைகள். அன்று அவர்கள் அவ்வாறு சொன்னபோது தமிழினம் அதிர்ச்சியடைந்தது என்னவோ உண்மைதான். இன்று நிலைமை அப்படியல்ல. போரா, சமாதானமா? எதுவென்றாலும் அதனை எதிர்கொள்ள நாங்களும் தயார், என்று 'நெஞ்சை நிமிர்த்தி', உறுதியோடு பதிலளிக்கின்ற துணிவை தமிழினத்திற்கு உருவாக்கித் தந்தவர் எங்கள் தலைவர்.

உலகத்தின் ஒட்டுமொத்த பலத்தையும் ஒன்றுதிரண்டி தலைவரை அழிக்க சிங்களத் தலைமைகள் பல்வேறு வழிகளிலும் முனைந்தது. மரணம் தலைவரின் வாசல் வரை வந்ததுண்டு. ஆனால் தலைவன் பயந்தோடவில்லை. மரணமே தோற்றோடியது.

எத்தனை இழப்புகள், எவ்வளவு பெரிய துன்பங்கள், எத்தனை நெருக்கடிகள், எவ்வளவு பெரிய ஆபத்துக்கள். எத்தனை துரோகத்தனங்கள்... அத்தனை சோதனைகளையும், தடைகளையும் எதிர்கொண்டு இன்றுவரை உறுதியோடு போராடுகின்ற தலைவர் நம்பியது, தன் சொந்த மக்களை மட்டும் தான்.

இப்போது போர் ஓய்ந்துள்ளது. போரிடுவதில் மட்டுமல்ல சமாதானத்தை பேணுவதில் உறுதியாக இருக்கும் தலைவரைப் பார்த்து சிங்களத் தலைமைகள் அதிர்ச்சியடைந்து நிற்கின்றன. அமைதியைச் சீர்குலைத்து புலிகளை போருக்கு தள்ளிவிட பல்வேறு வழிகளிலும் முயற்சிகள் தொடர்கின்றன.

உலக நாடுகளின் படைத்தளபதிகள் முன்னரங்க நிலைகள் வரை சென்று ஆய்வுசெய்து வருகின்றார்கள். சிறீலங்காப் படைத்தளபதிகளும் வடக்கு, கிழக்கு படைமுகாம்களுக்கு அவசர பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் இந்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் உலகமே மாவீரர் நாளை எதிர்பார்த்து காத்திருக்கின்றது. அன்றைய தினம், தேசியத் தலைவர் என்ன கூறப்போகின்றார் என்பதை முழு உலகமுமே உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறன ஒரு தலைவர் தமிழினத்திற்கு கிடைத்தது வரலாற்றின் கொடை. அந்நியர்களை எதிர்த்துநின்று போராடிய சங்கிலி மன்னனின், யாருக்கும் அடியாத பண்டாவன்னியனின் வரலாறுகளை பலமுறை நாங்கள் படித்திருக்கின்றோம். ஆனால், இப்படியான ஒரு தலைவரின் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பதே எமக்குப் பெருமைதான். அந்த தலைவரின் கரத்தை மேலும் பலப்படுத்துவதன் மூலமே, தமிழினத்தின் எதிர்காலத்தை உறுதியாகத் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

அதற்காக உழைப்பதே அந்தத் தலைவரின் பொன்விழா ஆண்டில் நாம் எடுக்கின்ற உறுதியாக இருக்கவேண்டும்.

# சிறீலங்கா இராணுவ புலானாய்வு பிரிவும் புலனாய்வு யூகங்களும்

சிறீலங்கா புனாய்வு வரலாற்றின் படி இராணுவப் புலனாயவுப்பிரிவு (Military Intelligence Corps - MIC) 90 ஆண்டளவில் உருவாக்கப்பட்டது. இது படிப்படியாக புலனாய்வுப் பணிகளை விருத்தி செய்து காலக்கிரமத்தில் புதிய உத்வேகம் பெற்றுள்ளது. இந்தப் பிரிவு பாதுகாப்புக்குழு, விசாரணைக்குழு, இலத்திரனியல் குழு, புகைப்படக்குழு. நடவடிக்கைக்குழு, முறியடிப்புக்குழு, வேவு விமானங்கள் மூலம் எடுக்கப்படுகின்ற புகைப்படங்களை பகுப்பாய்வு செய்யும் குழு போன்ற அடுக்குகளை தன்னகத்தே கொண்டு இயங்குகின்றது.

எம்.ஐ.சியின் பணிப்பாளராக கடமையாற்றிய பிரிகேடியர் கபில ஹெந்த விதாரணை தற்போது மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு பெற்று பணிப்பாளர் நாயகம் என்கின்ற புதிய பதவிக்கு நியமனமாகியுள்ளார். (Director General Military Intelligence - DGMI) இவர் இனிவரும் காலங்களில் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்துடன் (JOH) இணைந்து இயங்குவார். அதாவது கடற்படை, விமானப்படை, இராணுவம் உள்ளிட்ட முப்படைகளின் புலானாய்வுப் பிரிவுகளை ஒருங்கிணைத்து செயலாற்றும் அதிகாரமுடையவராக இயங்குவார்.

**முப்படைகளிலும் இராணுவமே வலுவானதும் பெரியதென்ற நிலையில் இராணுவ அதிகாரிகளே கூட்டுப்படைத் தளபதியாகப் பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்து இராணுவ அதிகாரிகள் மத்தியில் இருந்து வந்தது. ஆனால் ஜனாதிபதி சந்திரிகா தனக்கு நெருக்கமானவரான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்து, தன் மூலம் இராணுவ அதிகாரிகள் மத்தியில் வெறுப்பைத் தேடிக் கொண்டார்.**

இவர் முன்னர் வகித்த பணிப்பாளர் பதவி நிலைக்கு பிரிகேடியர் அப்துல் றிஸ்வி ஸக்கி நியமிக்கப்பட்டள்ளார். ஸக்கி மட்டக்களப்பில் சில ஆண்டுகள் MIC க்கு பொறுப்பாக செயலாற்றியவர். அதன் பின்னர் அவர் பாகிஸ்தானிலுள்ள சிறீலங்கா தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோகராக இருந்து இரகசிய புலனாய்வு சேவையில் பணியாற்றி வந்தவராவர்.

எம்.ஐ.சி தமது பணிகளை முக்கியத்துவத்திற்கு ஏற்பவும், தேவைக் ஏற்பவும் நாடு பூராகவும் மேற்கொள்கின்றது. அது தமிழர் தாயகத்திலும் சிறீலங்கா தலைநகர் கொழும்பிலும் அதிமுக்கியத்துவம் கொடுத்து புலனாய்வு வேலைகளை முன்னெடுத்துவருகின்றது. வவுனியா யோசேப் இராணுவ முகாம், மன்னார் தள்ளாடி இராணுவ முகாம், திருமலை பிளாண்டன் பொயின்ட் இராணுவ முகாம், யாழ்ப்பாணம் பலாலி இராணுவ முகாம், மட்டக்களப்பு வாவி வீதியிலுள்ள முகாம், கொழும்பு முத்தையா வீதியிலுள்ள அமைந்துள்ள தலைமையகம் ஆகியன அதன் பணிகளை முன்னெடுத்து வழிநடத்தும் மையங்களாக இயங்குகின்றன.

இங்கு பணியாற்றுகின்ற அதிகாரிகள், புலனாய்வாளர்கள் அனைவரது மூளைகளும் சுறுசுறுப்பாக இயங்கி புலனாய்வுத் தந்திரங்களை, உத்திகளை, மற்றும் வியூகங்களை வகுத்து வருகின்றன. அதாவது தமிழர்களிடத்தில் காணப்படுகின்ற சகலவகையான முரண்பாடுகளையும் எவ்வாறு பயன்படுத்தி தமிழ் தேசிய ஒருமைப்பாட்டை அழித்துவிடலாம் என்பதில் அந்த மூளைகள் சளைக்காது சிந்திக்கின்றன. அதற்கு அப்பாலும் அவர்கள் உலக புலனாய்வு நிபுணத்துவம் வாய்ந்த மூளைகளின் உதவிகளையும் பெற்று வருகின்றன.

இவ்வாறாக தமிழர் உரிமைப்போருக்கு எதிராக புலனாய்வு யுத்த வியூகங்களை ஒரு புறம் ஒரு புறம் வகுத்துக் கொண்டு, மறுபுறம் தமிழர் உணர்வுகளில் ஆழமாக ஊடுருவி அவர்களின் சிந்தனையில் குழப்பங்களை ஏற்படுத்தும் பிரசார யுத்தத்தையும் முன்னெடுத்துள்ளது. அதாவது சூழ்சிப்பொறிகளை தமிழர்களுக்குள் விதைக்கும் விதைகளை உற்பத்தி செய்து கொண்டிருப்பதில் அவர்களின் மூளைகள் தொழிற்படுகின்றன.

எம்.ஐ.சி யினரைப் பொறுத்தவரை புலிகளுக்கு எதிராக இயங்கும் தமிழ் விரோதக் குழுக்களையும் புலிகள் இயக்கத்திலிருந்து ஒதுங்கிக்கொண்டவர்களையும் தமிழர் மற்றும் முஸ்லிம் பொதுமக்களையும் தங்கள் புலனாய்வு வேலைகளுக்காக பல்வேறு பகுதிகளாக பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் அவ்வாறானவர்களை எவ்வாறு கைக்கொண்டு பிரயோகித்து வருவது பற்றி சற்று நோக்குவோம்.

– இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் முழுமையாக இணைந்தியங்கும் புலனாய்வாளர்கள்.

– புலிகள் நடவடிக்கைகள் பற்றிய இரகசியத் தகவல்களை அறிய புலிகளின் இரகசிய அடுக்குகளுள் ஊடுருவும் இரகசிய உளவாளிகள்.

– புலிகளுடன் அல்லது அவர்களின் ஆதரவாளர்களுடன் நெருங்கிப்பழகியும் அவர்களை அவதானித்தம் தகவல்களை வழங்கும் தகவலாளர்கள்.

– தாயகப் பகுதியினுள் ஆழ ஊடுருவித் தாக்குதல்களை மேற்கொள்ளும் விசேட இராணுவ அணிக்கு உதவிபுரியும் நடவடிக்கையாளர்கள்.

– தமிழர் தாயகப் பகுதிகளில் ஆங்காங்கே குண்டுகளை வெடிக்கச் செய்தும், குண்டுகளை வீசி வெடிக்கச் செய்தும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தவைக்கும் நாச வேலையாட்கள்.

– தமிழர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவும் அவர்களின் சிந்தனையில் குழப்பங்களை உண்டுபண்ணவும் பொய்த் தகவல்களைச் காவிச்சென்று பரப்புவோர்கள்.



இப்படியானவர்களை எம்.ஐ.சியினர் தம் இரகசியப் பணிகளில் ஈடுபடுத்தி வரும் அதேசமயம், ஊடக வளங்களையும் இரு புலனாய்வு நோக்கங்களுக்காக பயன்பட்டுத்துகின்றனர். ஊடகங்களை தகவல்கள் பெறும் மூலங்களாக தினமும் ஆர்வத்துடன் பயன்படுத்தி வருவது ஒன்று. அது Open Source Intelligence என்கின்ற புலனாய்வு வடிவத்தினுள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக

→ 26

# அகவை 50 வாழ்த்துகள்

## எங்கள் தலைவன் பிரபாகரன்

பொங்குமா கடலின் ஓரம்
பிறந்ததோர் புயலின் மையம்
தங்கமண் நெடுநாள் செய்த
தவத்தினால் உதித்த பையன்
வெங்களம் ஆட என்றே
வேங்கையாய் நிமிர்ந்த தீரன்.
எங்களின் தலைவன், `தம்பி'
இந்த நூற் றாண்டின் வீரன்.

தூங்கிய தமிழர் நெஞ்சை
துடித்திடச் செய்தோன், ஈழம்
வாங்குவோம் எழுக! என்றே
வாலிப மனத்தை
வென்றோன்.
வேங்கைகள் சாவுக் கஞ்சா
வீரர்கள் என்றே சொல்லத்
தாங்கிய தலைவன்! எங்கள்
தளபதி! அன்புத் தம்பி!

ஆயிரம் களங்கள் கண்ட
அண்ணனை, தமிழீழத்தின்
பாயிரம் ஆகப் போகும்
பரணியின் தலைவன் தன்னை
ஏவிய படைகள் வந்து
என்னடா செய்யும்? எங்கள்
காவியம் களத்தில் வெல்லும்.
காலங்கள் அவன்பேர்
சொல்லும்.

எத்தனை புயல்கள் வந்து
எழுந்தன்? தலைவன் தன்னை
எத்தனை படைகள் ஒன்றாய்
எதிர்த்தன் துரோகக் கும்பல்
எத்தனை விதமாய் சொல்லி
இகழ்ந்தன் இடையில் விட்டு
எத்தனை பேர்கள் சென்றார்.
இறுதியில் தலைவன்
வென்றான்.

கொட்டடா! முரசு எங்கே
கொம்பது எடுத்து ஊது.
தட்டடா! கைகள்; எங்கள்
தலைவனைப் பாடு; எம்மை
முட்டிய துயரம் யாவும்
முடிந்திடும்; புலிகள் சேனை
எட்டிய வரையும் பாய்ந்து
எழுந்திடும்; தலைவன் வாழி!

**புதுவை இரத்தினதுரை**

## எங்கள் நெஞ்சம் நிறைந்த தேசியத்தலைவரை வாழ்த்துவோம்

கருணையொளியாய் எங்கள் தலைவன் உதித்த நாள்
கார்த்திகை இருபத்தாறு
கடலும் தரையுமதிர தமிழர் விழித்த நாள்
கார்த்திகை இருபத்தாறு
வானும் வையகமும் வாழ்த்துப்பாடி மலர் தூவி மகிழ்ந்து ஆட
வரிப்புலிகள் படைகள் வரலாறும் தங்கத் தலைவன்
பிரபாவுடன் பிறந்தது
தமிழீழத் தாயும் தன் அடிமை விலங்கை உடைத்து எறிந்து
தமிழர் தலைவன் நீயேயென்று கூறி அன்பு முத்தம்
சொரிந்தாள்
புதுமை நிறைந்த புதிய ஒளியை தமிழீழம் எங்கும் விதைத்து
புரட்சி பூத்த புதிய வீரம் ஈழமெங்கும் மலர வைத்தார்
அதிகார வெறியர் தளங்கள் எங்கும் வேங்கைப்படைகள்
விரையச் செய்து
அழித்து ஒழித்து வெற்றிப் புலிக்கொடியை வானம் எங்கும்
பறக்க விட்டார்
சிங்கள வெறியர் சிதறி ஓடி அந்நியர் காலில் வீழ்ந்து
சிரம் தாழ்த்தி வணங்கி அந்நியப்படைகள் துணையோடு
தாயகமெங்கும் புகுந்தான்
பாயும் புலியாய் தலைவர் வழியில் தமிழர் படைகள் எழுந்தது
பாவிகள் உடலைச் சாய்த்து பாரில் தமிழர் மானம் காத்தது
உலகம் எங்கும் எங்கள் தலைவன் புகழைச் சொல்லிப்
பாடுவோம்
உயிரும் உடலும் தந்த எங்கள் தலைவன் நாமமென்றும்
மறவோம்
ஐம்பதையும் தாண்டி நீங்கள் ஆண்டுகள் பல வாழ
வாழ்த்துவோம்
ஐயமின்றி நாமும் உங்கள் வழி தொடர்ந்து வெற்றிச்
சங்கொலிப்போம்.

**சு.தி.அருளானந்தராசா**
டென்மார்க்.

## தமிழின விடி வெள்ளி!

இத்தரை மீதினில் இனவிடு தலைக்கு
இயக்கம் கண்ட தமிழ்மகனே!
முத்தமிழ் உணர்வை மொத்தமாய்க் கொண்டு
முனைப்புடன் செயல்படும் அடலேறே!

புறநா நூற்றின் புதுப்ப திப்பே!
பொங்கிடும் கடலின் ஆர்ப்பரிப்பே!
நெருப்பாற் றில்நிதம் நீசச் லடிக்கும்
நெஞ்சுரம் மிக்க வரிப்புலியே!

எந்தன் கண்களை என்விரல் குத்த
இந்தியா போட்டது ஒப்பந்தம்!
உந்தன் எதிர்ப்பின் உறுமல் கேட்டதும்
உடைந்து போனது
அதன்சந்தம்!

புரட்சிப் படையை
பொறுப்புடன் நடத்தி
போர்க்களம் காணும்
காவலனே!
பிரபா கரனெனும் போரொளிப்
பிழம்பே!
பெறுவாய் வெற்றிகள்
இனியாண்டும்!

சிந்தை நிறைந்த செந்தமிழ்ப்
புயலே!
தெற்கே தோன்றுது
விடிவெள்ளி!
உந்தன் தலைமை உறுதியாய்
அமைக்கும்
உயர்தனி ஈழம் எனச்சொல்லி!

**-அரவரவன் (தமிழகம்)**
(நன்றி: அனல்வீச்சு–15.11.1988)

## ஓர் வெள்ளி விழா வாழ்த்து

இன்பத் தமிழ் தாய் ஈன்றெடுத்த இளைய மகன்
இளங்கோவும் வள்ளுவரும் இன்றில்லை
உனைப்பாட மலர்களிலே அழகு மலர் தாமரைபோல்
நூல்களிலே அரிய நூலாம் திருக்குறள் போல்
மன்னர்களிலே சிறந்த தலைவன் கரிகாலன் போல்
எங்கும் புலமை எங்கும் விடுதலை
எங்கும் புதுமை எங்கும் வீரம் என்று
தமிழன் தலைநிமிர வெற்றி முரசு கொட்டி
வேங்கையாய் நிமிர்ந்த வீரன்
பல்லாண்டு வாழ இன்று இந்த்
ஐம்பதாம் ஆண்டு நிறைவில்
மீண்டும் மீண்டும் பல நூற்றாண்டு
அழகொடும் வீரத்தோடும்
மட்டுமன்றி சுக பலத்தொடும்
மன உறுதியோடும் வாழ்க் வாழ்க
என்று வாழ்த்தி வணங்குவது
இலங்கைத் தமிழ்ச்சங்கம்.

**இலங்கைத் தமிழ்ச் சங்கம்**

அமெரிக்கா–
**பரம் சந்திரநாதன்.**

## வினை விழைவான்

`இன்பம் விழையான், வினை விழைவான் தன் கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்' (குறள் 615)

உலகத்தின் உச்சியில் இன்று ஒருவன். அவன் மெதுவாக விடும் மூச்சு நாடு நகர் எல்லாம் பேரொலியாகக் கேட்கிறது!

எங்கள் தமிழ் ஈழ மக்களின் நெஞ்சங்கள் தம் பஞ்சு மெத்தைகளில் அவனைத் துயில்கொள்ள வைத்தாலும் அவன் துயில்வதாகக் காணோம்! அவன் எப்போதும் விழித்தே இருக்கிறான். தமிழ் இனம் தலை நிமிர்ந்து ஏற்றமுள்ள இனமாக போற்றப்படும்வரை அவன் கண் துஞ்சாது!

நலிந்தவர், மெலிந்தவர், ஒடுங்கியவர், அடங்கியவர், வறியவர், வாழ்வற்றோர், உரிமை கவரப்பட்டோர், அடிமைகள் என்ற நிலை: ஏன், எப்படி, எவரால், எதற்காக உருவாக்கப்பட்டது என்பதை அவன் கண்டறிந்தான்! அந்த மக்களைக் காப்பாற்றும் எண்ணம் அந்த மலர் நெஞ்சில் மலர்ந்தது!

தானே பெரியவன் என்ற இறுமாப்பில் மிதந்த, ஆட்சியைக் கையில் எடுத்துக்கொண்ட, ஆணவம் தலைக்கேறிய அரிமாக் கூட்டம், தானுண்டு தன் வாழ்வுண்டு என வாழ்பவனை, கண்டபடி துன்புறுத்தி, நெஞ்சை நிமிர்த்தி எக்காளச் சிரிப்புடன் நாடெல்லாம் நடைபோட்டது! இந்தக் கொடுஞ் செயலுக்கு எண்ணெய் வார்த்தவை, அறத்தின் பிணத்தின்மேல் துள்ளிவந்த ஆணவச் சட்டங்களாகும்!

அந்தக் கொடுங்கோலர், தமிழர் சொன்ன கருத்தாளம் மிக்க உண்மையை –உருக்கமாக விடுத்த வேண்டுகோளை, காணக் கேட்க, உணர மறுத்துவிட்டனர். இனிய சொற்கள் கனியவில்லை. அறப்போர், பாலையில் பெய்த பனியானது! கேட்டனர்: கிடைக்கவில்லை: கதவைத் தட்டினர் கை வெட்டப்பட்டது.

அதை அறிந்தான் அவன்! அவன் கண்கள் சிவந்தன! கைகள் துடித்தன! உடல் முறுக்கேறியது! அந்தக் கொடியரின் கொட்டத்தை அடக்கும் வழி என்ன என்ற சிந்தனை, திட்டங்களைப் படைத்தது! கையளவு வைரங்களின் காதோடு, அவன் வாய் பேசியது! கையில் ஒரு கைத் துமுக்கி! இன்று, சிங்களத்தின் திமிரை அடக்கி வைத்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிப் படையின் முதலாவது போர்க் கலன் அது! அதனை ஏந்தியிருந்தது வேங்கைப் புலி அணியின் வீரத் தலைவன் கையே! இன்று சிங்கள நாட்டைக் கிலிகொள்ள வைத்திருக்கும் புத்தம் புதுவகைப் படைக் கலங்களையும் தேடி வைத்திருக்கும் தீரன் அவன்! அவற்றைக் கையில் ஏந்தி, எதிரி படையைத் துடைத்தெறியும் ஆற்றல் மிக்க வீர மறவர்களையும் உருவாக்கி இருப்பவன் அவன்!

அந்தக் கரிகாலச் சோழனால் நெய் தடவி, கூந்தல் வாரி முடியப்பட்ட, அஞ்சா நெஞ்சம் கொண்ட மறக்குலத்து வேங்கைகளிடம் ஓர் அச்சம் இருக்கிறது! தங்கள் தங்கத் தலைவன், அண்ணை இட்ட பணியை தப்பின்றி நிறைவேற்றிவிட வேண்டும் என்ற அச்சமே அது! அத்துணை பற்றும் பிடிப்பும் கொண்ட போர் வீரரை, தன் உடன் பிறப்புக்களாகக் கொண்ட தானைத் தலைவன் தம்பி பிரபாகரன்!

ஏய்த்து விடலாம் என்று கணக்குப் போட்ட அண்டை நாடும், அதற்கு முண்டு கொடுக்க வந்த காந்தி நாடும், இன்றும் கைவிரல் மடித்துக் கணக்குப் பார்த்துக்கொண்டே இருக்கின்றன!

தங்கள் கெட்டித்தனத்தால் தலைவனை வளைத்துப் பிடித்துவிடலாம் என்ற நப்பாசையில் வன்னிக்கு நடை பயிலும் நானிலத்துப் பெருந்தலைகளும், ஆற்றலையும் நேரத்தையும் பணத்தையும் வீணாக விரயமாக்குகின்றன!

அவன், இந்த உலகில் வாழும் எட்டுக் கோடி தமிழரதும் அச்சம் போக்கி கூனை நிமிர்த்தியவன்!

எல்லாத் தமிழரதும் முகவரி ஆனவன்! ஒப்பாரும் மிக்காரும் அற்ற ஒல்காப் புகழ் கொண்ட நம் தலைவன் நமக்குப் பெருமை தருபவன். நம்மைக் காப்பவன்! நாளை நமது நாட்டை மீட்டுத் தருபவன்! எங்கள் தலைவன் பல்லாண்டு வாழவேண்டும் என வாழ்த்துவோம்!

அங்கோர் விடிவெள்ளி
அதற்கோர் தனி ஒண்மை!
எங்கும் அவன் பேச்சு
எவர்க்கும் அவன் தலைவன்!
பொங்கும் கடல் அலைகள்
பிரபா கரன் வாழ்த்த
சங்கும் பாவிசைக்க
சிப்பியும் தாள மிடும்!

ஐந்துபத் தாண்டாகும்
அருண்மொழித் தேவனவன்!
முந்து தமிழ்க் குலத்து
மூவா மருந்தன்னான்!
வந்து மடி அமர்ந்த
வல்வையின் ஆணிமுத்து
சிந்தை கனிந்து நாம்
சேர்ந்தே வாழ்ந்திடுவோம்!

– சிவம் பரமநாதன் –

# அகவை 50 வாழ்த்துக்கள்



## வீசும் காற்றும் கவிதை பாடும்

ஐம்பத்து ஆண்டிறுதி ஆனாலுந் தம்பிபிரபா
வெண்சங்கு பேரொலிக்க வீறுகொண்டு–வம்பர்
படையறுத்து வண்டமிழர் வாழ்நிலத்திலின்று
அகவை ஐம் பதான தறி
ஆளுகின்ற வண்கணர்கள் ஆணவத்தை வேரறுத்து
ஆண்ட தமிழினத்தை ஆளவைக்க–ஈழமண்ணில் பூண்டாய
தமிழ்த்தாயின் புத்திரனே தாய்நாடு
தான் மறக்குமோ மற–வாது
தெய்வத்தாய் பெற்றெடுத்த சீர்தலைவ நீயிருக்க
வையத்துள்த் தமிளோச்சி வாழ்ந்திருக்கும்–உய்யுமே
இனித்தமிழ் சாகாதிங் குன்படைவேல் காக்க
கனிந்திடு மீழத்தைக் காண்
சோழனுக் கோர்பரணி பாரதத்தி லுண்டானால்
ஈழமண்ணி லோர்பரணி வீரஞ்சொல்–மண்விளையும்
பாவெடுத்துப் பாட்டெழுதி நூலெடுப்ப ரேபுலவோர்
காலத்தால்ச் சாகாது காண்
வானும் மலர்கள் தூவும்

வேறு

போரே போரே புறப்படு என்றனை
நீரே யன்று குமுறியெ ழுந்தனை
ஏனோ ஏனோ என்றனர் சிங்களர்
இறுமாப் புடனே இருந்தன ரவரே
இனித்தமிழ் சாகாதிங்கு
அன்னைத் தமிழை அழகுத் தமிழை
கன்னல்த் தமிழை கனகத் தமிழை
வண்ணத் தமிழை வணங்குத் தமிழை
வணங்குத் தமிழை வணங்குந் தமிழை
அந்நியர் விலங்கிட் டடைத்த தமிழை
முன்னைத் தமிழை மூத்த தமிழை
அந்நிய ரிடுவிலங் கறுத் தெறிந்தனை
சென்னியில் முடிபுனைந் தேற்றி யழகுற
வண்ணத் தவிசில் வைத்து வாழ்த்துவை
இன்னல் கழைந்து இனிதுள வாழ
முன்னே நின்று முனைவுற் றிடுவோர்
பின்னே யுன்படை வீரம் முழங்க
என்னே யிதுவென எதிரிக ளோட
மின்னும் பொறிபட் டலறிக் குளற
மார்புது டிக்கத் தோள்கள் புடைக்க
புகழ்போ ராடப் புறப்பட்ட புலியே
ஐம்பது போதுமா அறியீ ரின்னும்
ஐம்பத் தாண்டுகள் இருந்திட வேண்டுமே
நம்பிய தமிழர் தாயக மீட்பை
உம்பணிக் எவரினி இங்குள் ளனரோ
உரமிடு வீரத் திறனறி வாரெவர்
உறக்கம தேதுன் படைகளுக் கிங்கு
மறந்தமிழ் மரபில் வந்தவ ரண்றோ
மரணம் மறவா மாவீ ரர்கள்
தாயகம் காத்திடு விடுதலைப் புலிகள்
வீரம் பிறந்த வேட்கை கொண்டவர்
பெற்றவ ளன்னை பெருமைக் குடையாள்
தெய்வத் தாய்க்கு மகனாய் பிறந்தாய்
தேசெலா முனது கீர்த்தி விளங்கும்
எங்கு மெதிலும் நீயிருப் பாயவை
எல்லாந் தேசிய கீதம் பாடும்
வல்லவர் கவிதையில் வாழ்ந்திருப் பாயே
வீசும் காற்றும் கவிதை பாடும்
வானும் மலர்கள் தூவிக் குவியும்
வளமதி யெறிகதிர் சாமரம் வீசும்
விளைநில முனது பாதம் முகரும்
வாழ்க இன்னுமோர் ஐம்பது ஆண்டுகளே

**போர்**
போரே போரே புறப்படும் என்றனை
நீரே யன்று குமிறி யெழுந்தனை
ஏனோ ஏனோ என்றனர் பகைவர்
ஆவரிவ ரெவரென அறியா மூடரே

-பா. அமிர்தநாயகம்



## ராஜகோபுரம் எங்கள் தலைவனுக்கு அகவை 50

கார்த்திகை மாதத்திலே
வல்வைக் கடற்கரையோரத்தில்

உதயமான சூரியக்கதிரே...!
கார்த்திகைப்பூவை
தேசியப்பூவாக பிரகடனப்படுத்திய
கார்த்திகைத் தீபமே...
கலங்கரை விளக்கே...

கரிகாலன் எனும் பெயருடைய பிரபாகரனே...!
இளைஞர்கட்குள்ளும்
இளம் வயதுடையவராயிருந்ததால்
'தம்பி' எனச் செல்லப் பெயர் பெற்ற

தம்பி பிரபாகரனே...!
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
எனும் கட்டுக்கோப்புக்குள்
களம் புகும் இளைஞர்களை

ஒன்று திரட்டிய வல்லவனே...!'
தமிழீழத்தின் தலையில் இறக்கப்பட்ட
பேரினவாதத்தின் தாக்குதல்களை...
'புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்'
எனும் தாரக மந்திரத்துடன்
தகர்த்தெறியத் தொடங்கியவரே...!

**'இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை'**

கிட்டண்ணா வளர்த்த
உங்கள் அன்புச் சாரதியாம்
குட்டிச் சிறியை...
'குட்டி சிறி' மோட்டார் செய்து
பார்த்தசாரதியாய்
பரிணமிக்கச் செய்த

அன்புச் சீலரே...!
மானிப்பாய் சுதுமலை அம்மன் ஆலயத்தின்
முன் முதன் முதலாக மக்கள் முன் தோன்றிய

சூரியக் கடவுளே...! சூரியப் புதல்வரே...!
உங்கள் தரிசனம் கண்டு
மக்கள் அகமகிழ்ந்தனரே..
மக்கள் இரு கரம் கூப்பி

வணங்கினரே...!
ஆனைக்கோட்டை மண்ணின்
அரும் பெரும் அகழ்வுகளை
அப்பையா அண்ணனுடன்
ஆராய்ச்சி செய்த

ஆராய்ச்சித் தலைவரே...!
கல்லுண்டாய் வயல்வெளியில்
ஆகாய விமான மொன்றை
முதன் முதலாகப் பறக்கவிட்டு
பரீட்சித்துப் பார்த்த

சிந்தனைத் தலைவரே...!
தமிழீழத்தில்
இந்திய ஆக்கிரமிப்பின் திட்டங்களை...
தவிடு பொடியாக்கிய சாணக்கியரே...!
வன்னி காட்டிற்குள்ளே
கண்டு பிடித்த ஜொனி கண்ணி வெடிகளால்
எதிரிக்கு படுமோச அழிவுகளை ஏற்படுத்தி
ஜொனி அண்ணையின் படுகொலைக்கு

பழிவாங்கிய சிந்தனைத் தலைவரே...!
கரும்புலிகளால் தகர்தெறிய வைத்து
கறுப்புப் பூனைப் படைகளை...
இந்திய நாட்டிற்கே திரும்பி ஓட வைத்த

வீரத்தமிழனே...!
வெளிநாட்டு மூளைகளின் வெற்றிகரத்
திட்டங்களுடன் வெளிவந்த சிங்கள
முப்படைகளின் முன்னேறிப் பாய்தலுக்கு
தந்திரமாக பின்வாங்கி
யாழ்.மண்ணின் மக்களைக் காப்பாற்றியவரே...!
புலிகள் ஓடிவிட்டனர் என எதிரிகளை
எண்ணவிட்டு 'புலிப்பாய்ச்சல்' மூலம்
அவர்களைத் திணற வைத்து
புறமுதுகிட்டு ஓட வைத்த யுத்த தந்திரியே...!
சரித்திர நாவலாசிரியர் சாண்டில்யன்
உயிருடன் இருந்திருந்தால் புதுக்கதைகள்
எழுதியிருப்பார்.


உங்கள் யுத்த தந்திரங்களைப் பார்த்து...!
சத்தியம் வெல்லும் என்ற சத்திய சீலனின்
சொல்லுக்கு
சாள்ஸ் அன்ரனிப் படையை சாத்தியப்
படுத்திய அன்புச்சுடரே..!

தமிழ் ஈழ இராணுவ சமநிலை பேணி போர் நிறுத்தம்
செய்து சமாதானம் பேசிய மதிநுட்பத் தலைவரே...!

சர்வதேச நாட்டவரையும்.. இதய பூமியான
வன்னி மண்ணிற்குள் வரவழைத்த மறத்தமிழனே...!
மாவீரர்களை! மணி விளக்குகளை!
மாண்டுபோன எம் மக்களை
'மாவீரர் நாளில்' நினைவு கூரும்

பொன்மனச் செம்மலே...!
யாருக்கு வரும் உங்கள் அன்பு!
யாருக்கு வரும் உங்கள் வீரம்!
யாருக்கு வரும் உங்கள் திறமை!
யாருக்கு வரும் உங்கள் மதியூகம்!
யாருக்கு வரும் உங்கள் தியாகம்!

- சுப்பிரமணியம் லோகதாஸ்




## ஈழத்து நாயகனுக்கு அகவை ஐம்பதாம்..

ஈழத்தின் காவிய நாயகனுக்கு
அகவையோ ஐம்பதாம்
ஈழமே வாழ்த்துதையா உம்மை
வாழ்த்துவதற்கோ வார்த்தைகள்
இல்லை
வையகமோ உன்னை தாங்கி
வாழ்த்துதையா
உன்னை ஐயிரண்டு திங்கள்
சுமந்தவள் கூட
உன்னைப்பார்த்து பெருமிதம்
கொள்கிறாள்
அன்று என்ன நினைத்து
உனக்கு
பிரபாகரன் என்று நாமம்
சூட்டினாளோ
(பிரபா) பிரபஞ்சத்தின் (கரன்)
நிலையானவன்
தமிழ் மக்களின் இதயங்களில்
நீ நிலையானவன்
எம் தேசியத்திற்கு
நீ மட்டுமே தலைவன்
உனக்கு அகவைப்பாட்டு பாட
எமக்கு உணர்வுகள்
பொங்குகின்றன
தலைவா நீ நூறாண்டுகள்
வாழ்க
ஈழத் தேசத்தில் என்றும் உன்
நாமம்
ஒலித்துக் கொண்டிருக்கும்.

திருமலை ச. அகிலன்
லாகூர்நெவ்.

## வடிக்கப்படுகின்றவை

பல நூறு ஆண்டுகளாக
தீபம் ஏற்றினோம்
நம்மில் பலருக்கு
அதன் காரணம்
புரிந்திருக்கவில்லை
இப்போதுதான்
நாங்கள் எல்லோரும்
கார்த்திகை தீபத்தின்
காரணம் புரிந்துகொண்டோம்.

புனிதர்களே!
கண்துயிலாத உங்கள் காவலால்
எங்கள் தாய்நிலம்
காப்பாற்றப்பட்டது.
நேற்றுவரை
தாயிடம் பட்டது மட்டுந்தான்
தீர்க்கப்பட முடியாதது என்று
உணர்ந்தோம்..
இன்றோ
நீங்களும் அவள் வரிசையிலே...
எங்கள் மொழி
எங்கள் இனம்
எங்கள் தேசத்தின்
இருப்பு உள்ளவரை
உங்கள் காலடியில்
நாங்களும் எங்கள் சந்ததியும்
வருவோம்..
தலைசாய்ப்போம்.

உங்கள் முன்னே கையேந்தும்
தீபங்களின் பிரகாசிப்பில்
கன்னங்களில் வழிந்தோடும்
திரள் மணிகளின் பளபளப்பில்
செம்மை கலந்திருக்கிறதே
அது எது? ஏன்?

உங்கள் பெற்றவரும்
உறவினரும்
உங்கள் சாவையும்
கணத்தையும்
அறிய வாய்ப்பின்றிப் போனது
உண்மைதான்
இங்குள்ளவர்க்கோ
உங்கள் வரலாறு
அழியாத பொன் எழுத்துச்
சுவடிகளில்

-ந. ஹேமராஜ், லண்டன்.

# விதையாகிய எங்கள் வீரர்களுக்கு

## கல்லறைகள் பேசுகின்றன

எங்களோடு இளைபின்னிய
பாசமுள்ள உறவுகள்
கண்களில் கனல் நீர் சொரிய
கரங்களில் ஈகைச் சுடர்களைத்
தாங்கியன்றோ
தூரத்தில் வர்ணப்புள்ளிகளாய்
அசைந்து வருகின்றனர்
வாருங்கள், வாருங்கள்
நாங்கள்
உங்களுக்காகக் காத்திருக்கிறோம்
தமிழீழ வாசலில்
கண்ணீராலும், கனவுகளாலும்
கட்டப்பட்ட கல்லறை
எங்கள் கல்லறை
எங்கள் பொன்னுடலின்
சிதையை எரித்த
தீயைத் தாங்கி நிற்கிறீர்கள்
உங்களுக்காக எதிரியை
எரித்துப் பொசுக்கிய
தீ நாக்குகள் அவை!
உங்களின் விடிவுக்காக
மெழுகாகத்
தீயைத் தாங்கி நின்றே
உயிர் நீரைச் சிந்தினோம்
எழுத்தாணிகளும், பேனாக்களும்
நிமிர்ந்து நின்றது
எங்களின் தியாகம் கண்டன்றோ!
மெல்லிய பிரதேசத்தில்
படுத்துத் தூங்கும் எங்களை
கார்த்திகை இருபத்தேழில்
தீபங்களாலும், பூக்களாலும்
அர்ச்சிக்கப்படுகிறது
கல்லறையில் தூங்கும் எங்களை
இறந்தகாலத்திலும்
வருங்காலத்திலும்
எதிர்காலத்திலும்
வாசம்புரிய வல்லவர்களென்று
நீங்களே எங்களை
வரலாற்றில் பதித்து விட்டீர்கள்
இருதயத்திரை தேனாக இனிக்க
மரணத்திரை எங்களை
மறைக்குமா?
உங்கள் இதயங்களில் தோன்றும்
வெளிச்சக் கனவுகள்
எங்களுக்குப் புரிகிறது
உங்கள் விழிகளிலே உதிர்கின்ற
கண்ணீரின் சத்தம்
நிலத்தில் விழும் போது
எங்கள் காதுகளில் கேட்கிறது
உங்கள் கண்ணீரால்
எங்கள் கல்லறைகளின்
வேர்கள் குளிர்கின்றன
கல்லறைக்குள் எம்மையிட்டு
நீங்கள் சமாதி கட்டவில்லை
பூக்குளிக்குள்
எம்மைப் பாதுகாக்கிறீர்கள்
என்றும் உங்களுக்கான
வாசமலராகத் தூங்குகின்றோம்
அரும்பில் உறங்கிவிட்ட
எங்கள் ஆசையைக்
கொஞ்சம் கேளுங்கள்
தீரம் கொண்ட
தேசியத் தலைவன் காலத்திலே
அரும்பாகி வருகின்ற
நாளைய இளந்தளிர்கள்
இவர்கள்
மொட்டவிழ்ந்து மலரும்
தமிழீழத்தை
தரிசிக்கும் பொழுதில்
நாங்கள் விழித்தெழ வேண்டும்
நீங்கள் இசைக்கின்ற தேசீயகீதம்
எங்கள் செவிமடலில் விழும்போது
அந்தச் சுரத்தின் ஓசையே
தாலாட்டாகி
நாம் இங்கே
சுகமாகத் தூங்க வேண்டும்

**- விக்கி நவரட்ணம்**
(சுவிஸ்)

## வித்தாக விதைத்திட்ட பொன்முத்துக்கள்

மானத்தை விலைபேசி
விற்பதாமோ
மறத்தமிழ் மைந்தர்கள்
நெஞ்சிறுக்கி
போரென்று புறப்பட்டார்
புழுதியென
ஈழத்தின் புத்திரர்கள்
நெஞ்சுரத்து
வேழம்போல்த்
திரண்டெழுவர்
வீரர்கூட்டம்
காளைகள் ஆகுதிக்குள்
அடக்கங்கண்டர்
வித்தாக விதைத்திட்ட
பொன்முத்துக்கள்
வீரம் விளை கின்ற
மண்ணிற்குள்ளே

காடுமலை கண்டார்க ளம்
நடந்து
தேடிவரு பகைவர்கள்
குமிறியோடிப்
போர்ப்புலிக் கூட்டமதைக்
கண்டஞ்சினர்
சுடுகலஞ் சுமந்தவர்
துரவோட
துணிவற்ற தமிரோகாண்
தூங்குவரோ
வீரமண் கவிபாடு
மெங்கள்படை
போரிலே கூடுவர்
விண்முழங்க
வித்துக்கள் மகிழட்டும்?
விழித்தெழுங்கள்

ஏமாற்றம் எங்களுக்கு
இனியுமதுவோ
காலங்க டத்தவோர்
நடிப்பதாமோ
நாவசைதல் போதுமதை
நாங்கள் பார்ப்போம்
காவியமொன் றுருவாகுஞ்
நாளை பூக்கும்
வாலறுந்த நரிக்கூட்டம்
வணங்கிநின்று
வல்லாண்மை பேசுதங்கு
வாய்பிளந்து
ஏதவர்க்கு மானமோ
வெட்கமோதான்
இல்லாது ஒழியட்டு
மெளியர்? கூட்டம்

நாளையே விடுதலை
நமதுநாட்டம்
மாழுமோ தமிழதிங்கு
இனியதில்லை
தாயாகி நின்றுதமிழ்
தரணியமும்
நோயாகிச் சாவரே
நொய்தல்க்கூட்டம்
ஆனையிடுந் நாளதனைக்
காத்திருப்போம்
?அந்நியர் படையோடி
நடுங்க வைப்போம்
மண்ணில்பு தைத்திட்ட
மாவித்துக்கள்
மாவீரர் வித்துடலில்
ஆணையிடுவோம்

தியாகிகள் நினைவுநாள்த்,
தீபமேற்றி
சீர்மங்கை தமிழாளைச்
சிறையெடுத்து
செகசோதி மகிடமுடத்
தவிசமர்த்தி
செழுந்தமி ழரசாள
வேண்டுமிங்கு
வரலாற்று மைந்தர்களின்
வழித்தோரை
வண்டமிழர் வீரமது
பரணிபாட
வான்முழங்கு சங்கொலிக்க
வாரும்வாரும்

பிரபாக ரன்தலைமை
பீடுநடைபோட
விரைவாக அவர்பின்னே
வீறுநடையோடு
புலவர்கள் புகழ்பாடப்
புத்துலகையாள
இறவாத தமிழிங்கு
இனிதுவாழ
தூசுகள் துடைத்ததைத்
தூய்மையாக்கி
மாசற்ற தாயக
மண்ணதைமீட்போம்
மங்களம் பாடியதைச்
செய்துவைப்போம்
மாதலைவர் நாவசையக்
காத்திருப்போமே.

**- நீக்சன்**




## எமது வீர வணக்கங்கள்

# மாவீரர்க்கு எம் வணக்கங்கள்

மாவீரர்களே! எம்
வணக்கத்திற்குரியவர்களே!
வண்ணத்திப் பூச்சிகளாய்
பாரெங்கும் பறக்கத் துடித்த நீவீர்
மண்ணுக்குள்
துயில் கொள்ளத் துவங்கி விட்டீர்! –
உமக்கென `மாவீரர்' என்ற பெயரும்
பெற்று விட்டீர்!
நாங்கள் இன்று
`விட்டில் பூச்சிகளாய்'
பாரெங்கும்
பரந்து உள்ளோம்
உலகத் தமிழர்களாய்!
எமக்குப் பல பெயர்கள் உண்டு
தமிழ் கனடியர்,
தமிழ் அமெரிக்கர்கள்,
தமிழ் செர்மானியர்,
தமிழ் அவுஸ்திரேலியர்,
தமிழ் பிரான்சினர் என்று!
தமிழ்நாட்டுத் தமிழர்
பெரும் அளவில்
அமெரிக்க மண்ணில்
என்றாலும்
`தமிழ், தமிழர்' என்பதையே
முதன்மையெனக் கொண்டு
வட அமெரிக்கத்
தமிழ்ச்சங்கப் பேரவை சார்பிலே,
அமெரிக்க வாழ்தமிழர் சார்பிலே
எனது `மாவீரர் தினம்' வணக்கத்தைப்
பணிவுடனே தெரிவித்துக்
கொள்கின்றேன்.
`மாவீரர்' என்ற அளவிலே –
நும்மிடை புதைந்து கிடக்கும் ஈக
உணர்வு,
தமிழினம் தன்னுரிமை சேர வாழ்ந்திட
தாங்கள் காட்டிய
ஈக உணர்வு,
உலகத் தமிழர்
எங்களை ஆண்டாண்டு காலமாய்
மெய்சிலிர்க்க வைத்திடும்!
உணர்வு ஒன்றிட வைக்கும்!
இதயத்துடிப்பு இணைந்திட
வைத்திடும்! நாடி நரம்புத்துடிப்போடு
நடமாட வைக்கும்!
நாங்கள் மறையும்
காலத்தில் – எம் வழித்
தோன்றல்களுக்கு இனம் காட்டி
மறைவோம் – நும் புகழ்
மறையாவண்ணம், தூய தொண்டு
செய்து
மறைந்த நீவீர் புகழ்,
தமிழினத்திடையே நிலைத்து
வாழ்ந்திட, நீண்டு நிறைந்திட,
நும் பெருமை விட்டகலா வண்ணம்
வழிவகை செய்து மறைவோம்.
`மாவீரர்' தம்மை தன்னுயிராய் மதித்து,
தரணியில்
தமிழர் தம் பெருமையை உயர்த்திய
தலைவனுக்கு, நல்வாழ்த்துக்களை
இந்நாளில் தெரிவித்துக் கொள்வதில்
பெரும் மகிழ்வெய்துகிறேன்.
எதையுமே அரைகுறையென
செய்தறியாத் தலைவனுக்கு
இன்று அரைநூற்றாண்டு!
நும் ஆழம் கண்டு,
இன நல ஆழம் கண்டு,
ஈழ மண்ணிற்கு வித்திட்ட தலைவன்,
உலகத் தலைவர்க்குள்
ஒரு விதிவிலக்கு அவன்!
நீண்டு பாயும் தமிழினப் பெருமை
அறிந்தவன்!
அய்ம்பதில் பாதியை
தமிழின பெருமைக்கு பெரிதும்
செலவிட்டவன்.
நீங்களோ வித்தாகி நின்றுள்ளீர்,
உடன் அவன் மனத்தில்
உரமுமேற்றியும் வைத்துள்ளீர்!
வல்லவர்களே,
உங்கள் நினைவு
வாழ்ந்திடவே
ஈழம் பெற்றுத் தந்திடுவான்,
உறுதியாக நம்பிடுங்கள்!
தமிழன் அவன் நீடுவாழ
எம்மோடு நீங்களும்
வாழ்த்திடுங்கள்.

**அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை**





நாம் யாரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம் இழைக்கவும் இல்லை. ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

# தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்




அகவை 50

தமிழர் வித்தியாலயம் – பல்கலைக்கல்லூரி

**ANNAMALAI UNIVERSITY**

**70, Rue Philippe de Girard 75018 Paris**
**Tel : 01 46 07 16 00, 01 60 28 39 12**
**Métro- Marx Dormoy.**



ஆரம்பம்
04-12-2004

Prépa Special Bac - 2005

"பாக்"- 2005 - தேர்வுக்கான தயார் நிலை வகுப்பு

பாடங்களைப் படிப்பித்து, விளங்காததை விளங்கவைத்து, Paper Classகளும் வைத்து, பரீட்சைக்கு தயார் செய்து அனுப்புகிறோம்.

Terminale : S.ES.L.STI,STT.STL.SMS.STPA.PRO

பாடங்களைக் கற்பிக்கும் பிரெஞ்சு ஆசிரியர்கள் அந்தந்தப் பாடங்களில் கல்வித்தகுதியும் பட்டறிவும் உடையவர்கள் என்பது பெற்றோர்கள் அறிந்ததே!

Tamoul, Français, Maths, Physique, Chimie, STV, Histoire-Géo, Anglais, Espagnol, Allemand, Philosophie, S.E.S., Droit., Commerce, Gestion..

இக்கல்லூரியில் தரப்படும் கல்விக்கு இணையான கல்வி எங்காவது தரப்படுமாயின் வித்தியாசப்படும் பணம் இருமடங்காக வாபஸ்.

இயக்குநர். பேராசிரியர்
**Prof. S. Sachchithanantham.** M.A., D.S., Ph.D..

சனி - 16.30h- 20.30h, ஞாயிறு - 14h - 18h



# RHYTHM

விசேட விலைக் கழிவு !
விசேட விலைக் கழிவு !
விசேட விலைக் கழிவு !




- **Tamil, English, Hindi Movies for Sale**
- **Tamil, English, Hindi Movies for Rent**
- **Tamil, Hindi Audio Cd's, Audio Cassette**
- **Telephone Cards**
- **Video Filming**
- **Photography**
- **Party Shop**

**790 Harrow Road, Wembley, HA0 3EL**
**Tel : 02089049040**
**Fax: 02089049070**
**e-mail : info@rhythmentertainments.com**

Website :rhythmentertainment.com


# HEROES DAY

Saturday (12 mid day start -7 Pm finish)
**27 November 2004**

# கார்த்திகை NOV 27

# தேசிய நினைவெழுச்சி நாள் –கார்த்திகை 27

தேசியத் தலைவரின் உரையுடன் மதியம் 12 மணிக்கு ஆரம்பம்




மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை. அவர்கள் காலத்தை உருவகிப்பவர்கள், காலத்தின் குறிப்பேட்டில் கால்பதித்துச் செல்பவர்கள். சாவு அவர்களைத் தீண்டுவதில்லை. அவர்கள் காலத்தின் காவியமாக எமது தேசத்தின் ஆன்மாவில் காலமெல்லாம் நிலைத்திருப்பவர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
(27 நவ. 1998
மாவீரர் உரையிலிருந்து)



*Best way to honour your heroes be at excel as a mark of respect*

**EXCEL** - மண்டபம்

**1 Western Gateway, Royal Victoria Dock, London E 16 1XL**

# சிங்களப் படையினர் எமது மண்ணில் இருக்கும் வரை



## தமிழ் மக்களின் கொந்தளிப்பை தடுக்க முடியாது

தமிழரின் தாயக பூமியில் சிங்களப் படையினர் இருக்கும் வரை தமிழ் மக்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள். ஏன் என்றால் மக்களின் அமைதியைக் குலைத்து தமிழ் மக்களை அடிமைப்படுத்தலாம் என்ற கற்பனைப் போக்கு இப்போதும் சிங்களப் படையினரிடம் உள்ளது. ஆனால் அண்மைக்காலமாக படையினரின் மனோபாவம் உடைக்கப்பட்டு வருகிறது. மக்களின் எதிர்ப்பும் எழுச்சி நடவடிக்கைகளும் சிங்களப் படையினரை நிலைகுலைய வைத்துள்ளது. அண்மையில் கொடிகாமத்தில் இடம்பெற்ற அரிகரசர் மாவின் விபத்து சம்பவத்தை நோக்கும் போது எந்த வித சமிக்கைகளும் இன்றி திடீரென்று படையினரின் தண்ணீர் பவுசர் குறுக்குப் பாதை வழியாக சடுதியாக திரும்பிய போதே இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றது. இதனை அடுத்து படையினர் பிரஸ்தாப இளைஞனின் உடலை அப்பகுதியில் இருந்து அகற்ற முற்பட்ட போதே படையினருக்கும் அப்பகுதியில் திரண்ட பொது மக்களிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு பெருமளவான மேலதிக படையினரும் வருகை தந்தனர். அவர்களின் வருகையை அடுத்து உசார் அடைந்த படைத்தரப்பினர் பிரஸ்தாப உடலத்தை அங்கிருந்த அகற்ற முற்பட்ட போது, பொது மக்கள் சடலத்தை அகற்ற வேண்டாம் எனக் கோரி எதிர்ப்பில் ஈடுபட்டதுடன் ஆத்திரமடைந்த நிலையில் படையினரின் தண்ணீர் தாங்கி வாகனத்திற்கும் காவல்துறையினரின் மோட்டார் சைக்கிள் இரண்டுக்கும் தீமூட்டினர்.



இதன்போது படையினர் தண்ணீர் தாங்கி வாகனத்திற்கு மூட்டப்பட்ட தீயை அணைத்த போதிலும், காவல் துறையினரின் மோட்டார் சைக்கிள் மீது வைக்கப்பட்ட தீயை அணைக்க முடியாமல் போய் விட்டது. இதேவேளை ஏ-9 நெடுஞ்சாலையை இருபக்கமும் மறித்து வீதிகளில் ரயர்களைப் போட்டு எரித்து தமது எதிர்ப்பை காட்டியதுடன், வீதி மறியலிலும் ஈடுபட்டனர். இதன்போது முதல் கட்டமாக படையினருக்கும் காவல் துறையினர்க்கும் எதிரான ஆக்ரோசமான வார்த்தைப் பிரயோகங்களை பொது மக்கள் பாவித்த போது ஆத்திரமடைந்த காவல் துறையினர் பொது மக்களை கடுமையாக தாக்கத் தொடங்கினர். கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை மேற்கொண்டும் பொது மக்களை கலைக்க முற்பட்டபோது படையினரதும் காவல் துறையினரதும் தாக்குதல்களை கண்டு சற்றும் அஞ்சாத பொதுமக்கள் படையினருக்கு எதிராக கற்கள், கொட்டான்கள் மூலம் தாக்கியதுடன் பொலிசார் எறிந்த புகைக் குண்டுகளை ஏந்தி திருப்பி பொலிசாரிற்கு எறிந்த சம்பவத்தை கூட நேரில் சம்பவத்தில் நின்ற ஒருவன் என்ற வகையில் என்னால் காண முடிந்தது. உண்மையில் அந்த சம்பவத்தில் நின்ற இரண்டு தரப்புமே இரண்டு தேசத்தவர்களிற்கு இடையிலான பகையை உணர்வை வெளிப்படுத்துவது போன்றே இரண்டு தரப்பின் அணுகுமுறையும் இருந்தது. இச்சம்பவம் கூட மீண்டும் ஒரு தடவை சிங்கள தேசமும் தமிழ் தேச மக்களும் எந்தக் கட்டத்திலும் சேர்ந்து வாழ முடியாது என்ற ஒரு உண்மையை வெளிப்படுத்தி நிற்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் சிங்கள தேசத்து படையினரையும் காவல்துறையினரையும் எப்போதோ நிராகரித்து விட்டார்கள்.

தமிழ் மக்களிற்கெதிரான படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு ஒடுக்குமுறைகள் நிகழ்ந்ததை அடுத்து தமிழ் தேசம், சிங்கள தேசத்து காவல்துறையினரையும் படையினரையும் நிராகரித்து தமிழ் தேசத்திற்கு தனியான காவல் துறையினரும் இராணுவம் உள்ளிட்ட சகல படைப்பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளது. இதை சிங்கள தேசம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நடைமுறையில் ஏற்றுக் கொள்ள வேண்டிய நெருக்கடி சிங்கள தேசத்திற்கு ஏற்பட்டதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் சிங்கள தேசம் தற்போதும் தமது படையினரும் காவல்துறையினரும் சட்டம் ஒழுங்கை யாழ் குடாநாட்டில் பேணி வருகின்றனர் எனப் பிரச்சாரம் செய்து வரும் சூழ்நிலையில், கொடிகாமத்தில் இடம்பெற்ற சம்பவம் மீண்டும் ஒரு தடவை சிங்களப் படையினரும் காவல்துறையினரும் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கு மாறாக குற்றம் இழைத்தவராக காணப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்டவர் தமது இனத்தவர் என்றால் எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என்ற மனோபாவமே படையினரிடம் காவல்துறையினரிடமும் மேல் ஓங்கியுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி தமது இனத்தவராக இருந்தாலும் தமிழ் மக்களிற்காக கதைக்க வந்ததாக கூறியே இவரை தாக்கினர். இவ்வாறே பத்திரிகையாளர்களும் தமிழர்கள் என்ற காரணத்தினாலேயே இவர்களால் தாக்கப்பட்டனர். இவ்வாறான சம்பவமே கொடிகாமத்திலும் இடம்பெற்றது. இதன் மூலம் காவல்துறையினரும் படையினரும் சர்வதேசத்திற்கு ஒரு செய்தியை சொல்லி உள்ளனர். தமிழ் மக்களை நாங்கள் எப்போதுமே ஏற்றுக் கொள்ள மாட்டோம். எங்களுடைய அரசாங்கம் மாற்றி மாற்றி கதைத்தாலும் தமிழ் மக்கள் விடயத்தில் நாங்கள் தெளிவாகவே இருக்கின்றோம் என்ற செய்தியை காவல்துறையும் படைத்தரப்பும் மீண்டும் உணர்த்தி உள்ளன.

இதேவேளை கொடிகாமத்தில் பொது மக்களிற்கும் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்று கொண்டிருந்தபோது சம்பவ இடத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், கஜேந்திரன் ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தனர். இவர்கள் நின்ற சமயத்திலே தான் பொது மக்கள் மீதான தாக்குதலை காவல்துறையினரும் படையினரும் மேற்கொண்டனர். இச்சம்பவத்தின் போது பொது மகன் ஒருவரை 10ற்கு மேற்பட்ட காவல்துறையினர் தாக்கிக் கொண்டு இருந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அந்தப் பொதுமகனை பொலிசாரிடம் இருந்து இழுத்து எடுத்து ஒரு உயிரை காப்பாற்றிய விடயம் சாதாரணமான காரியமல்ல. இப்படியான போராட்டங்கள் இடம் பெறும் போது அந்த இடத்திற்கே செல்லத் தயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கஜேந்திரனின் பணியை கடமையை இவ்விடத்தில் சட்டிக் காட்டுவது பொருத்தப்பாடானது என நினைக்கின்றேன்.

இதேபோன்று இச்சம்பவத்தில் துணிவுடன் நின்று செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்கள் இறுதி நேரம் வரை நின்றார். இருந்தாலும் அங்கு இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது அவரின் வாகனமும் சிறு சேதத்திற்கு உள்ளானது. ஆனால் அவர் அதை பொருட்படுத்தாமல் தனது கடமை உணர்ந்து செயற்பட்டார். இவ்வாறு ஏனைய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களிற்கு எதிராக படையினர் மற்றும் காவல்துறையினர் மேற்கொள்ளும் வன்முறைகளின் போது சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மக்களிற்கு ஏற்படும் இழப்புக்களை தவிர்க்க உதவுவதுடன் மக்களிற்கு அநீதி ஏற்படாதபடியும் பார்க்க வேண்டும். இன்னும் பல கொடிகாமங்கள் படையினர் காவல் துறையினரும் குடாநாட்டில் இருக்கின்ற காலப்பகுதியில் உருவாகும். இது தவிர்க்க முடியாதது தமிழரின் படைகளின் ஆட்சி அதிகாரம் குடாநாட்டில் முழுமையாக வரும் வரை முறுகல்கள் தொடரும்.

**தமிழ் மக்களிற்கெதிரான படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு ஒடுக்குமுறைகள் நிகழ்ந்ததை அடுத்து தமிழ்த் தேசம், சிங்கள தேசத்து காவல்துறையினரையும் படையினரையும் நிராகரித்து தமிழ்த் தேசத்திற்கு தனியான காவல்துறையையும் இராணுவம் உள்ளிட்ட சகல படைப்பிரிவுகளையும் உருவாக்கியுள்ளது. இதை சிங்கள தேசம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நடைமுறையில் ஏற்றுக் கொள்ள வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதை எவரும் மறுக்க முடியாது.**

**- வே.தவச்செல்வன் -**

# பலூஜா நகரம் அழிந்தது!

## ஜோர்டானில் பயிற்சி முடித்து திரும்பிய 63 ஈராக்கிய பொலிசார் கடத்தப்பட்டனர்

(21.11.04)

ஈராக்கில் உள்ள பலூஜா நகரை கைப்பற்றுவதற்கு அமெரிக்க இராணுவம், அந்த நகரின் மீது 6 நாள்



தொடர்ந்து நடத்திய தாக்குதலில் நகரம் முழுமையாக அழிந்துள்ளது. இடிந்து விழுந்த கட்டிடங்கள், நொறுங்கிய. கார்கள், கருகிய உடல்கள் என மயானக் களையுடன் நகரம் காட்சி அளிக்கிறது. பல தெருக்களில் பிணங்கள் அழுகிக் கிடப்பதாக நகரம் முழுவதும் சுற்றிப்பார்த்த நிருபர்கள் தெரிவித்துள்ளனர்.


பலூஜா நகர் முழுவதும் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த யுத்தத்தில் வெளிநாட்டு தீவிரவாதிகள் உள்பட 1000 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் 550 வரையான தீவிரவாதிகள் பிடிபட்டனர் என்றும் கூறியுள்ள அமெரிக்க இராணுவத் தரப்பு, தமது தரப்பில் 38 பேர் பலியாகி 275 பேர் காயமடைந்தனர் என்றும் கூறியுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, ஜோர்டானில் பயிற்சி முடித்து விட்டு திரும்பிய 63 ஈராக்கிய பொலிசாரை முகமூடி அணிந்த 20 தீவிரவாதிகள் கடத்



திச் சென்றனர். இந்தச் சம்பவம் ஜோர்டான் எல்லையில் உள்ள ட்ரேபில் நகரில் நடந்தது. ஈராக் பொலிசாருக்கு ஜோர்டான் நாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அங்கு பயிற்சி முடிந்து ஈராக் திரும்பிய 65 பொலிசார்கள் எல்லையோர நகரில் உள்ள ஒரு விடுதியில் தங்கி இருந்தனர். முகமூடி அணிந்த தீவிரவாதிகள் திடீர் என விடுதிக்குள் புகுந்து பொலிசாரை துப்பாக்கி முனையில் மடக்கினர். அவர்களில் இருவர் தப்பியோடி வந்து இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் 16ம் திகதி தெற்கு ஈராக்கில் உள்ள கர்வாலா பகுதியில் ஜோர்டானில் பயிற்சி முடித்துவிட்டுத் திரும்பிய 9 பொலிசாரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். இந்தமாதத் தொடக்கத்தில் ஹக்லானியா அருகே உள்ள ஒரு கிராமத்து போலிஸ் நிலையத்தில் நடந்த தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர்.







# அமெரிக்க உளவாளி வெள்ளை மாளிகை முன் தீக்குளிப்பு

(21.11.04)

அமெரிக்க உளவாளி ஒருவர் வெள்ளை மாளிகை முன் தீக்குளிக்க முயற்சித்தபோது அங்கிருந்த பாதுகாவலர்களால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனு



மதிக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. இதுபற்றி தெரிய வருவதாவது, யேமன் நாட்டைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான மொஹமட் அலன்சி என்ற 52 வயது நபர், அமெரிக்க ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுதிக் கொண்டு வெள்ளை மாளிக்கைக்கு சென்றுள்ளார். மாளிகை வாசலில் நின்றவர்கள் அவரை உள்ளே செல்ல அனுமதிக்காததையடுத்து, கோபமடைந்த அவர் தனது கையிலிருந்த ‘லைட்டர்’ ஆல் தனக்கு தீ வைத்துள்ளார். தீ பரவிய நிலையில் உடனடியாக அங்கிருந்த பாதுகாவலர்கள் அவரது தீயை அணைத்து காப்பாற்றியுள்ளனர். எனினும் அவரது உடலில் 30 வீதமான பகுதிகள் தீக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

*இவர் எதற்காக தீ வைத்தார்?*

அமெரிக்க உளவுத்துறையினருக்கு உளவாளியாக இவர் இருந்துள்ளார். அல்-குவைடாவிற்கு பணம் செல்லுகின்ற வழிகளை ஆராய்ந்து சொன்னதற்காக இவருக்கு பெரும் தொகை சன்மானமாக வழங்கப்பட்டதுடன், அமெரிக்க நிரந்தரக் குடியுரிமையும் வழங்கப்படும் என உளவுத்துறையினரால் உறுதியளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இவருக்கு வருடம்தோறும் குறிப்பிட்ட சன்மானம் வழங்கப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் கடந்த ஆண்டு முதல் இவருக்கு உளவுத்துறையினர் சன்மானம் வழங்குவதை நிறுத்தியதுடன், இவரது கடவுச்சீட்டையும் பறிமுதல் செய்துள்ளனர். இந்நிலையிலேயே ஜனாதிபதிக்கு கடிதம் கொடுத்து, தனக்கு நிறுத்தப்பட்டுள்ள சன்மானத்தை தொடர்ந்து வழங்குமாறு கோருவதற்கும் யேமனில் உள்ள தனது குடும்பத்தினரை பார்த்து வருவதற்கு கடவுச்சீட்டை திரும்ப வழங்கும்படியும் கோருவதற்காக இவர் வெள்ளை மாளிகைக்கு சென்றதாகவும் அது பலனளிக்காத நிலையில் தீக்குளித்ததாகவும் தெரியவருகிறது.

# கே.பாலசந்தர் தலைமையில் ரஜினி மகள் திருமணம்

நடிகர் தனுஷ் - ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா திருமணம் சென்னையில் கடந்த 18ம் திகதி



ரஜனிகாந்தை நடிகராக அறிமுகப்படுத்தி வைத்த கே.பாலச்சந்தர் தலைமையில், ரஜனியின் போயஸ் தோட்ட இல்லத்தில் நடைபெற்றது. இதில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேரில் வந்து மணமக்களை வாழ்த்தினார். அத்துடன் ஏராளமான நடிகர் நடிகைகளும் முக்கிய பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர். கலைஞர் கருணாநிதிக்கு ரஜனிகாந்த் நேரில் சென்று அழைப்பு விடுத்தபோதும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. எனினும் பின்னர் சனியன்று நடைபெற்ற விருந்துபசார வைபத்தில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். தாலி கட்டியதன் பின்னர் தனுஷ் - ஐஸ்வர்யா ஜோடியாக மணமேடையில் இருந்து இறங்கி வந்து, முதலமைச்சர் ஜெயலலிதாவின் கால்களில் விழுந்து வணங்கி ஆசி பெற்றார்கள்.

Yarl Cash & Carry GmbH
Heimstrasse 5, 3422 Alchenflüh, Tel : 034 445 98 38, Fax: 034 445 98 41



உங்கள் இல்லத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள், இலங்கை, இந்திய உடன் மரக்கறி வகைகள், பூஜைப் பொருட்கள் மற்றும் திருவிழா, விசேட வைபவங்களுக்கும் தேவையான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளவும்


உங்கள் வைபவங்களுக்குத் தேவையான தங்க நகைகள், அன்பளிப்புப் பொருட்கள்...

உலகின் அனைத்துப் பாகங்களுக்குமான துரித பணமாற்றுச் சேவை அனைத்திற்கும்...

Yarl Cash & Carry

# புஷ்சின் பிரமுகர்கள் பலர் பதவி விலகினர்

## கொலின் பவல் இடத்திற்கு கொன்டலீசா ரைஸ்



புதியவர்

(21.11.04)

அமெரிக்க வெளிவிவகார பாதுகாப்பு இராஜாங்க செயலர் கொலின் பவல் கடந்த திங்கட்கிழமை தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை கடந்த வெள்ளிக்கிழமையே சமர்ப்பித்து விட்டதாகவும் தனது இடத்திற்கு ஒருவர் நியமிக்கப்படும் வரை காத்திருப்பதாகவும் பவல் திங்கட்கிழமை காலை தமக்கு தெரிவித்ததாக அவருடன் பணியாற்றியவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சின் ஆட்சிக் காலத்தில் புகழ் பெற்றவராகக் கருதப்பட்ட இவர், அமெரிக்க அமைச்சரவையின் முக்கிய பதவியில் பணிபுரிந்த முதல் கறுப்பினத்தவர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார். பவல் பதவி விலகிய போதும் அவரின் இடத்திற்கு புதிதாக ஒருவர் நியமிக்கப்படும் வரை தொடர்ந்து அவர் தனது பதவியிலிருப்பார் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவருடன், கல்வித்துறைச் செயலாளர் ரொட் பயிஜ், விவசாயத்துறை செயலாளர் ஆன் வினிமன் மற்றும் சக்திதுறை செயலாளர் ஸ்பென்சர் ஏப்ரஹாம் ஆகியோரும் பதவி விலகுவதாக அறிவித்தனர்.

இதுஇவ்வாறிருக்க, அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ்சும் பதவி விலகியுள்ளார். இவரும் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளதாக தெரியவருகிறது. இது தொடர்பில் தகவல் வெளியிட்ட வெள்ளை மாளிகை, தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையிலேயே ஆர்மிடேஜ் தமது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளதாக தெரிவித்துள்ளது. ஆர்மிடேஜ் இலங்கை விடயத்தில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வந்ததுடன், அமைதி வழி மூலமான தீர்வில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருந்துவரும் நிலையிலும், விடுதலைப் புலிகள் வன்முறையைக் கைவிடவேண்டும் என பல தடவைகள் திரும்பத் திரும்ப கூறிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்க வெளிவிகார இராஜாங்க செயலர் கொலின் பவலின் இடத்திற்கு கறுப்பு இனப் பெண்ணான கொன்டலீசா ரைஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 50 வயதான இவர், புஷ்சின் தந்தை புஷ் காலத்தில் இருந்து கடமையாற்றி வருகின்றார். தற்போது அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக உள்ளார். இந்தப் புதிய பதவியின் மூலம் அமெரிக்க வரலாற்றில் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதற்



பழையவர்

கறுப்பினப் பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

67 வயதான கொலின் பவல் இராணுவ தளபதியாக இருந்து ஓய்வு பெற்றவர். 2வது முறை ஜனாதிபதியாக நீடிப்பதற்காக தேர்தலில் போட்டியிட்டு புஷ் வெற்றி பெற்றுள்ள நிலையில், கொலின் பவல் பதவியிலிருந்து விலகியுள்ளார். கொலின் பவல் - புஷ் நெருங்கிய நண்பர்கள் என்பதுடன் இராணுவத்தில் இருவரும் ஒன்றாக பணியாற்றியவர்கள். அத்துடன் புஷ்சின் ஈராக் போருக்கு முக்கிய காரணமானவர்களில் கொலின் பவலும் ஒருவர். எனினும் புற்றுநோய் காரணமாக சிகிச்சைபெற்று வரும் இவர், தொடர்ந்து பதவியில் நீடிக்க விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இராணுவ அமைச்சர் டொனால்டு ரம்ஸ்பெல்டும் பதவி விலகுவார் என்று கூறப்படுகிறது.

# சீனாவில் உலக மலசலகூட மாநாடு

(21.11.04)

உலக மலசல கூட உச்சி மாநாடு சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் கடந்த ...ன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மூன்று நாட்கள் நடைபெற்றுள்ளன. இந்த மாநாட்டில் மக்களுக்கான நல்ல மலசல கூட வசதிகள் குறித்து ஆராயப்படவுள்ளன. மக்கள் நல்ல மலசல கூட வசதிகள் வேண்டுமென சொல்கின்றனர். நல்ல மலசல கூட வசதிகள் என்பது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று. எனினும், இந்த அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது என உலக மலசல கூட ஸ்தாபனத்தின் ஸ்தாபகரும் மாநாட்டின் அனுசரணையாளர்களில் ஒருவருமான ஜக் சிம் தெரிவித்துள்ளதுடன், உலகத்திற்கு இப்போதுள்ளதை விட நல்ல மலசல கூட வசதிகள் தேவை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி ஒரு உச்சி மாநாடு எனக் கேள்விப்பட்டதும் நீங்கள் உடனே ...ரிக்கத் தொடங்கலாம். எனினும், அந்தச் சிரிப்பு சில நிமிடங்களே நீடிக்கும், பின்னர் இந்த விடயத்தில் நீங்கள் தீவிர கவனம் செலுத்த தொடங்கி விடுவீர்கள். ஏனென்றால், நீங்கள் உங்களது மலசல கூட வசதிகளை நீண்ட காலமாகப் புறக்கணித்து வருகிறீர்கள். இது உங்களது உடலுக்கும் வாழ்க்கை தரத்திற்கும் உங்களது, சமூக கௌரவத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது என சிங்கப்பூரைச் சேர்ந்த ஜக்சிம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் நான்காவது தடவையாக இந்த மாநாடு நடைபெறகின்றது. உலக மலசல கூட மாநாடு முன்னர் சிங்கப்பூர், சியோல் தாய்வான் ஆகிய நாடுகளிலும் நடைபெற்றுள்ளன.

உலகின் 19 நாடுகளைச் சேர்ந்த 150ற்கும் மேற்பட்ட அறிஞர்களும் மலசல கூட வடிவமைப்பாளர்களும் சூழல் ஆர்வலர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர். நவீன மலசல கூட வசதிகள் உல்லாசப் பயணத்துறைக்கும் இதற்கும் இடையில் உள்ள தொடர்பு போன்ற விடயங்களைக் குறித்தும் இந்த மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது. உலக நாடுகளில் மலசல கூட வசதிகள் மோசமாக உள்ள நாடுகளின் பட்டியலில் இடம் பிடித்துள்ள சீனா 2008 பீஜிங் ஒலிம்பிக்கிற்கு முன்னதாக இந்த விடயத்தில் முன்னேற்றம் காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இந்த மாநாட்டிற்கு விஜயம் செய்துள்ள பிரதிநிதிகளை, சீனாவின் தலைநகரில் புனரமைப்பு



செய்யப்பட்ட மலசல கூடங்களுக்கு சீன அதிகாரிகளை அழைத்து செல்லவுள்ளனர். புதிய பொது மலசல கூடங்கள் தலைநகரிலும் அபிவிருத்தி அடைந்து வருவதற்கான முக்கிய அடையாளங்கள் என குறிப்பிட்டுள்ள சீன அதிகாரிகள் மக்கள் நல்ல உணவு, நல்ல உடை போன்ற விடயங்களில் கவனம் செலுத்துமளவிற்கு நல்ல மலசல கூடங்கள் குறித்துக் கவனம் செலுத்துவதில்லை. மக்களின் வாழ்க்கைத் தரத்தை வெளிப்படுத்தும், விடயங்களில் மலசல கூடங்களும், முக்கியமானவை எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரபல மனநல மருத்துவர் மாத்ரு பூதம் மரணம்

(20.11.04)

பிரபல மனநல மருத்துவரான மாத்ருபூதம் சென்னையில் ஒரு தனியார் மருத்துவமனையில் நேற்று இருதயக் கோளாறு மற்றும் சிறுநீரகக் கோளாறு காரணமாக மரணமடைந்தார். இவர் இந்த வியாதிகள் தொடர்பாக சில காலமாகவே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனளிக்காமல் நேற்று மரணமடைந்தார். இவருக்கு வயது 60.

தொலைக்காட்சியில் நிகழ்ச்சியில் பாலியல் தொடர்பாக கேள்விகளுக்கு மருத்துவரீதியாகப் பதிலளித்து பிரபலம் அடைந்தவர். அத்துடன் இவர் வாலி, பெண்ணின் மனதைத் தொட்டு உட்பட சில



தென்னிந்தியத் திரைப்படங்களிலும் நடித்தவர் என்பதுடன் மனநலம் தொடர்பான பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 16 ஆண்டு சிறையில் இருந்த மாணவர் தலைவர் விடுதலை

(21.11.04)

மியான்மர் நாட்டில் கடந்த 1988ம் ஆண்டில் அரசாங்கத்துக்கு எதிராக பெரிய போராட்டம் நடந்தது. இதில் நூற்றுக் கணக்கானவர்கள் இறந்தார்கள். இந்த போராட்டம் எதிரொலியாக மாணவர் அமைப்பு தலைவர் மின் கோ நைவ் 1989ம் ஆண்டு மார்ச் மாதம் கைது செய்யப்பட்டார். சுமார் 16 ஆண்டு காலமாக அவர் சிறையிலேயே இருந்து வந்தார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த 2வது பெரிய தலைவர் என்று அவர் கருதப்பட்டார்.

இந்த நிலையில் சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் தீர்மானித்தது. இதனை தொடர்ந்து மாணவர்



தலைவர் மின் கோ நைவ் நேற்று முன்தினம் சிட்வா சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். மேலும் 4 ஆயிரம் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர். மியான்மர் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை ஐ.நா.சபை மனித உரிமை அமைப்பினர் வரவேற்றுள்ளனர்.

# புகலிடம் கோரியோரை திருப்பி அனுப்ப பிரித்தானியா முடிவு

(21.11.04)

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி அது நிராகரிக்கப்பட்ட நிலையிலுள்ள சிம்பாப்வே நாட்டவர்களை அவர்களின் தாயகத்திற்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கையை பிரித்தானிய அரசாங்கம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது. அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட சிம்பாப்வே நாட்டவர்களை திருப்பியனுப்பும் நடைமுறையை கடந்த இரண்டு ஆண்டுகளாக, பிரித்தானிய அரசாங்கம் இடைநிறுத்தியிருந்ததாகவும் எனினும் இந்த சலுகையை சிம்பாப்வே நாட்டவர்கள் துஷ்பிரயோகம் செய்துவருவதாகவும் கருத்து வெளியிட்டுள்ள பிரித்தானியவின் குடிவரவுத்துறை அமைச்சர் டெஸ் பிரவுனி, இதன் காரணமாகவே திருப்பியனுப்பும் நடைமுறையை மீளக் கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரித்தானியாவின் குடிவரவுத்துறை அமைச்சகத்தின் இந்த முடிவை, அகதிகள் நலன்புரி அமைப்புகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

# அந்த நினைவுக் கங்கள்

உருக்குலைந்து போய்க் கிடந்த நினைவுக்கற்களும், கல்லறைகளும் மீண்டும் உருப்பெற்று...

பெயர்கள் பொறிக்கப்பட்டு, இது,

சமாதானம் அல்லது அதன் பெயரால் ஏற்பட்டுள்ள ஒரு இடைக்கால நிம்மதியால் விளைந்த மாற்றம்.

இந்த மண்ணின் புதல்வர்கள் சிந்திய குருதி பெற்றுத்தந்த நிம்மதி.

என் மகளின் நினைவுக் கல்லுக்கு முன்னால் மண்டியிட்டு அமர்கிறேன்.

`அம்மா' எனும் அரிய பதவியை எனக்குத் தந்த, தாய்மையின் சுகானுபவத்தை அணுஅணுவாய் நான் உணரவைத்த, என் வயிற்றின் முதல் முத்து இன்னமும் உயிரோடிருப்பதாயும், அருகே எனக்கு மிக அருகே என்னையே பார்த்துக் கொண்டிருப்பதாயும் ஒரு உணர்வுத் துடிப்பு எனக்குள்.

`என்ரை ராசாத்தீ.. என்ரை குஞ்சு...'

உயிர் கரைந்துருக, நினைவுக்கல் மீது தலைசாய்த்துக் கிடந்து விம்மி விம்மி அழுகிறேன். தாயகக் கனவோடு கண்மூடிக்கிடக்கும் அத்தனை செல்வங்களுக்குமாய்.

நினைவலைகளில் .`அவன்'

அவன் இப்போது இல்லை.

`எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்...'

`ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்...'

என,

முன்னால் நின்று நெஞ்சம் உருகிக் கதறி அழுது, கண்ணீரில் துன்பம் கரைக்க.

அவனுக்கென்றொரு அடையாளமும் இல்லை.

-- --

அது எண்பத்தேழின் பிற்பகுதி.

எங்கள் தேசத்தில் மீண்டும் ஒரு ஆக்கிரமிப்பு.

மக்களின் தஞ்சமாய்க் கோயில்களும் பாடசாலைகளும்.

அந்த முத்துமாரியம்மன் கோவிலில் நாங்கள் மிக அருகிலிருந்த உறவினரின் வீட்டில் ஒரே நேரமாய்ச் சமையலும் சாப்பாடும்.

கடைகள் இல்லை. பொருட்களும் இல்லை.

கிடைத்ததைச் சமைத்து, கிடைத்ததைச் சாப்பிட்டு, உயிர்களின் இருப்பை நிச்சயப்படுத்திக்கொண்டிருந்த நேரம்.

அன்று,

சோறும், வீட்டிலிருந்த தவசி முருங்கை இலையில் வைத்த குழம்புக் கடலும்!

(`கள்ளிச் சொட்டுப்போல' தேங்காய்ப்பால் பிழிந்து கறி சமைக்கும் பாரம்பரியம். `ஏதோ ஒரு கறி' என்ற நடைமுறைக்குள் தன்னை முடக்கிக்கொண்டிருந்தது. ஆளில்லா வீடுகளில் விழுகின்ற தேங்காய்களை வீதியில் போவோர் எடுத்து எழுபது, எண்பது ரூபாய் என விலை பேசினர்)

இரண்டு மணி இருக்கும்.

கோப்பைகளில் சோற்றைப் போட்டு, குழம்பை ஊற்றிக்கொண்டிருக்கையில்

அந்தச் செய்தி காதில் விழுந்தது.

`அம்மன் கோயிலடிக்கு ரெண்டு `பெடியள்' வந்திருக்குதாம்...'

`....நீர்வேலிக்கு அங்காலை எங்கையோ இருந்து ராவு ராவா ஒளிச்சொளிச்சு நடந்து வந்ததுகளாம் பாக்கப் பாவமாயிருக்கு...'

`...ஆமி வந்தாப்பிரச்சினையெண்டு சனம் பயப்பிடுதாம்...'

`....ஆரோ சனம் சாப்பாடு குடுக்க வெளிக்கிட மற்றச்சனம் மறிச்சுப்போட்டுதாம்...'

`... கோயில் கிணத்தில தண்ணி அள்ளிக் குடிச்சிட்டு நிக்குதுகளாம்...'

நெஞ்சுக்குள் வலித்தது.

`ஆர் பெத்த பிள்ளையளோ...?'

ஏழு நாட்களின் முன்பு களத்தில் என் மகள் மண்ணுக்கு உரமாகிப்போனாள் என்ற செய்தியை மூன்று நாட்களுக்கு முன்புதான் அறிய நேர்ந்தது.

அந்தப் பேரிடி தந்த வேதனையை வெளியே சொல்லவும் முடியாமல், வாய்விட்டு அழுது தீர்க்கவும் முடியாமல் கண்ணீர் முழுவதும் உள்ளே இறங்கி, நெஞ்சுக்குள் இரத்தமாய் வடிய நான் இருந்த வேளை அது.

அங்கே வந்திருப்பவர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். என் பிள்ளையின் மறுவடிவமாய் என் உணர்வுக்குள் அவர்கள்.. உடனே நான் அவர்களைப் பார்க்க வேண்டும்.

எனக்குள் ஒரு வேகம்.

வீட்டிலிருந்த முட்டை பொரியல் ஆனது.



சோறும், தவசி முருங்கைக் குழம்பும், முட்டைப் பொரியலும்.

கட்டி எடுத்துக்கொண்டு கோயிலடிக்கு விரைந்தேன். வீதியில் மரங்களின் அடியில் கும்பல் கும்பலாய் சனங்கள்.

கண்களால் துழாவியபோது, அவர்களைக் காணவில்லை.

`சனங்களுக்குப் பிரச்சினை எண்டு போட்டுதுகளோ? கடவுளே' உள்வீதியையும் ஒரு தடவை பார்த்துவிட எண்ணி, வடக்குப்புற வாசல் வழியாகக் காலடி எடுத்து வைக்க,

(`அம்மாளாச்சீ.. முட்டைப் பொரியலை உள்ளுக்குக் கொண்டு வாறன்... கோவிக்காதை அம்மா')

வலது பக்கமாய் இருந்த படிக்கட்டில் இருவரும் இருப்பது தெரிந்தது.

அருகே போனேன்.

ஒருவன் –அது அவன்–எனக்கு, முன்னரே தெரிந்தவன். அவனுக்கு என்னைத் தெரியாது. கூட வந்திருந்த போராளிக்கு இடது பக்கம் முழங்காலுக்குக் கீழே காலில்லை.

`இந்தாங்கோ தம்பி'

நான்கு விழிகளிலும் ஆச்சரியம்.

`பசியோடை இருப்பியள்... சாப்பிடுங்கோ அப்பன்..'

கை நீட்டி உணவைப் பெற்றுக்கொண்டபோது அவன் கண்களில் நீர்.

`அம்மா நீங்கள்...?'

என்னை யாரென்று விளங்கப்படுத்தியபோது அவன் மேலும் நெகிழ்ந்து போனது தெரிந்தது.

`...உங்கடை மகள்தானே போன கிழமை...?'

வார்த்தைகளை முடிக்காமல் தயங்கினான்.

விம்மலை அடக்க முடியாமல்,

கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல்,

பதிலேதும் சொல்லாமல்,

அவர்களையே பார்த்த வண்ணம் இறுகிப் போய் நான் நின்றேன். கண்ணீர் வழிந்தோடியது.

அவர்களுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

`இந்த நிலையிலுமா எங்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்தனீங்கள்...?'

கேட்காவிட்டாலும், அவர்களின் நெகிழ்ச்சி கலந்த பார்வையில் இந்தக் கேள்வி தெரிந்தது.

ஓரிரு நிமிடங்களின் வேதனை மௌனத்தை நானே கலைத்தேன்.

`என்ரை பிள்ளையப் போலதானே நீங்களும்... உங்களைக் கண்டபிறகு என்ரை மனப்பாரம் குறைஞ்சிருக்கு...'

சொல்லிக்கொண்டிருந்தபோது எனக்குள் அந்த விஷயம் உறைந்தது.

நடக்க முடியாத நிலையிலிருந்தவனுடன் எப்படி வந்து சேர்ந்திருப்பார்கள்...?

`எப்பிடியப்பன் வந்தனியள்...?'

கேள்வியின் அர்த்தம் புரிந்திருக்க வேண்டும்.

`இவனுக்கு நடக்கேலாதுதானே.. நான்தான் தூக்கிக் கொண்டு வந்தனான்.. நிண்டு.. நிண்டு.. ஆமி வரமுடியாத குறுக்குப் பாதையளாலை வந்தனாங்கள்.'

`சாப்பிட்டு ரெண்டு நாளாச்சம்மா.. இங்கை எங்களைக் கண்ட உடனை சனம் பயப்பிடுது.. வேற எங்கையாலும் போகட்டாம்....'

அவன் குரலில் விரக்தியும் வேதனையும்.

`ஆமி வந்தால் தங்களுக்கும் பிரச்சினை வருமெண்டு சனம் பயப்பிடுத போல.. `நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். இவடத்தடிக்கு `அவங்கள்' வாறது குறைவு.'

`சாப்பிட்டிட்டு இருங்கோ... பொழுதுபட நாங்களும் இங்கை வந்திடுவம்...'

ஏழு மணிக்கு மீண்டும் அங்கே போனபோது அம்மன் கோயிலில் அவர்கள் இல்லை.

இருவரும் கைது செய்யப்பட்டுவிட்டதாய்ச் சொன்னார்கள்.

மூன்றாண்டுகள் ஓட,

`அமைதி' `திரும்பி' விட்டது.

அன்றொரு நாள்.

ஆச்சரியமான ஆச்சரியமாய் அவன் எங்கள் வீட்டுக்கு வந்தான்.

முகவரி அறிந்து.. வீடு தேடி.. எனக்குள் சந்தோஷம்.

`வாங்கோ அப்பன்.. இருங்கோ...?'

`எப்பிடியம்மா இருக்கிறியள்...?'

`சுகமாய் இருக்கிறம்... நீங்கள்...?'

அன்று நான் சந்தித்துத் திரும்பிய சிறிது நேரத்தில் கைது செய்யப்பட்டது. பின்னர் சிறையிலிருந்தது... அன்றாடம் பட்ட துன்பங்கள். அந்தக் காலிழந்த நண்பன் அனுபவித்த கொடுமைகள்.

எல்லாம் சொன்னான்.

`அண்டைக்கு நீங்கள் சாப்பாடு கொண்டு வந்ததை எப்பவும் மறக்கேலாதம்மா... சிறைக்குள்ள இருக்கேக்கையும் அடிக்கடி உங்களை நினைப்பன். வெளியிலை வந்த உடனை உங்களை நினைப்பன். வெளியிலை வந்த உடனை உங்களை வந்து பாக்க வேணுமெண்டு நினைச்சிருந்தனான்.'

நெகிழ்ந்து போனேன்.

என் மகளின் இடத்தை நிரப்ப இதோ பாசத்துடன் என்னைத் தேடி வந்திருக்கும் இவன்...

சாப்பிடச் சொன்னேன்.

`ஒரு பிளெய்ன் ரீ மட்டும் போதும்'

அதன்பிறகு இடைக்கிடை வந்து போவான்.

தேச நிர்மாணிப்பின் மிக முக்கிய பணி ஒன்றில் ஈடுபட்டிருந்தான்.

தேசத்தின் மீது அவன் கொண்டிருந்த ஆழமான நேசமும், அவனுள்ளே வியாபித்துக் கிடந்த, சமூகப் பிரக்ஞையும் என்னை வியக்க வைக்கும்.

பேச்சில் பக்குவம். விடயங்களைக் கையாள்வதில் நிதானம்.

இந்தமண் நிச்சயம் விடுதலை பெறும் என்பதில் தளராத உறுதி.

ஒரேயொரு குறை மட்டும் அவனிடம் எனக்கிருந்தது.

எப்போது கேட்டாலும் சாப்பிட மறுத்துவிடுவான். ஒரு பிளெய்ன் ரீ மட்டும்தான்.

`இன்னொரு நாளைக்குக் கட்டாயம் சாப்பிடுவன்'

என்பது ஒவ்வொரு தடவையும் அவன் சொல்லும் சமாதானம்.

ஒருநாள் மதியத்தை அண்டிய பொழுதில் வந்தான்.

`கொஞ்சநாளைக்கு வரமாட்டனம்மா.. தூர இடமொண்டுக்குப் போறன்.. வந்த பிறகு வாறன்...'

அன்றும் பிளெய்ன் ரீதான்.

சமையல் அரை குறையிலிருந்ததால் சாப்பிடக் கேட்கவில்லை. போய்விட்டான்.

அவன் சொல்லிய – `தூரம்'மிகத் தொலைதூரம் என்பதையும்,

திரும்பிவர முடியாமல் போகவும் நேரும் என்பதான பணிக்குச் செல்ல இருந்ததால், கடைசியாய் இந்த அம்மாவிடம் விடைபெற்றுப் போகத்தான் அன்று வந்திருந்தான் என்பதையும் பின்னாளில் ஊகிக்க நேர்ந்தபோது நான் துடிதுடித்துப் போனேன்.

தான் உயிராய் நேசித்த இந்த மண்ணைவிட்டு அவன் போயே போய்விட்டான்.

`நான் கவலைப்படக்கூடாதெண்டு, சாப்பிட்டிட்டுப் போக நினைச்சுத்தான் அண்டைக்கு என்ரை பிள்ளை வந்துதோ...?'

`கேட்டிருந்தால் சாப்பிட்டிருப்பானோ...? அண்டைக்கு மட்டும் ஏன் கேட்காமல் விட்டன்...?'

...வைச்ச கறியோடை தன்னும் சாப்பாடு குடுத்துவிட நினைக்காமல் இருந்திட்டனே.. நான் ஒரு விசரி...

பத்து வருடங்களுக்கு மேல கடந்த பின் இன்னும் அவனை நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சைப் பிசைந்தெடுக்கும் வேதனை இது.

மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாத வேதனை.

எனக்கே இப்படி.

அவனைப் பெற்றவளுக்கு? தந்தைக்கு?

தங்கள் பிள்ளையின் பெயர், ஒரு அடையாளம்–தாயக விடியலின்போது மட்டுமே என்று நடைமுறை யதார்த்தத்தை அறிந்த –இன்னும் அறியாத ஆயிரம் ஆயிரம் பெற்றவர்கள் இங்கே... இந்த மண்ணில், தம் உணர்வுகளைச் சிறைசெய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தாயக விடுதலை வரலாற்றின் முக்கிய பங்காளிகளாய்.

எனக்குள்ளே தேடுகிறேன்.

அங்கே..

ஆயிரம் ஆயிரமாய்த் தீபங்கள் சுடர்விடுகின்றன.

அவற்றின் பேரொளியில் இந்தப் புனிதர்களின் ஒரு குறியீடாய்.

அவன் முகம் தெரிகிறது.

அதே நிதானம். அதே உறுதி.

**அஜந்தி**

# வெளிவருகின்றது...



## விடுதலையின் தரிசனம்
## The Vision Of Liberation

அகவை 50

**தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் 50வது அகவையின் நினைவுத் தெறிப்பாய்...**

**ஒரு வரலாற்று ஆவணப்பதிவு**

பேராசிரியர்கள் அரசியல் தலைவர்கள் கல்விமான்கள் பத்திரிகையாளர்கள் இலக்கியவாதிகள் வெளிநாட்டு அறிஞர்கள் என சர்வதேசம் எங்குமிருந்தும் தலைவர் குறித்தும் தமிழீழ போராட்டம் குறித்துமான காத்திரமான படைப்புக்கள் அடங்கிய அரிய ஆவணம்.

**இந்தச் சிறப்பு மலரில்...**

பேராசிரியர் சிவத்தம்பி . விக்டர் ஐவன் . நெடுமாறன் . அனிதா பிரதாப் . பேராசிரியர் இராமசாமி . அல்பேட் கூலன் . பீற்றர் சாக் . அடேல் பாலசிங்கம் . மணவை முஸ்தபா . வைகோ . தொல் திருமாவளவன் . பிரைன் செனிவிரத்ன . கோபாலரெத்தினம் ஜோசப் பரராஜசிங்கம் . விதுசா . கரோன் பாக்கர் . மக் கோனல் . ரம்சி கிளார்க் . வணபிதா. இம்மானுவேல் . எதிர் வீரசிங்கம் கி.செ.துரை . வேணுகோபால் . மு.பொ . ஜெகத் கஸ்பர் . காசி ஆனந்தன் . விக்கிரமபாகு கருணாரத்ன ச.அ.டேவிட் . அப்துல் ஜபார் . கே.ஜவகர்லால் நேரு . வே.பாலகுமாரன் . எஸ்.சிவநாயகம் . செயப்பிரகாசம் . இன்குலாப் . கலாநிதி முருகர் குணசிங்கம் இன்னும் பலரது ஆக்கங்கள்...

வெளியீடு. ஈழமுரசு



அகவை 50

வரலாறு என்பது மனித விடுதலையை நோக்கி நகரும் ஒரு பேரியக்கம்.

**எமது வாழ்த்துக்கள்**



# K.KAPILAN & CO

உலகத் தமிழ் இனத்தின்
உத்தம தலைவன் நீ...!
காவிய நாயகன் நீ... கலிங்கத்து வீரன் நீ...
கவி...! நயம்...! பாடும் கன்னித் தமிழ் வீரன்நீ...
இன்று...!
பாரினிலே படர்ந்திருக்கும்
ஈழவரின் ஓங்கி நிற்கும்
குரல் ஒலியின்... மாவீரன்...நீ மக்களின் தலைவன் நீ...
விடி வெள்ளி நீ...
விடுதலையை நோக்கி நிற்கும்...
வேங்கையை நாம் வாழ்த்துகின்றோம்!
ஐ பத்தினிலும் அடிமை விலங்கொடிக்க
அயராது காத்து நிற்கும்...
காவிய நாயகனை வாழ்த்துகின்றோம்!

INTERNATIONAL EUROPE
AWARD FOR QUALITY
NEW MILLENNIUM AWARD
ஆகிய விருதுகளைப் பெற்ற
RABEENA தயாரிப்புக்கள்
CEYLON BISCUITS
LIMITEDBISCUITS வகைகள்

THE LION BREWERY CEYLON LTD
இன் LION CAGER
LION STOUT
LION STRONG
EASTERN FOOD SPECIALITIES LTD
COCONUT MILK POWDER


ஆகியவற்றின் ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும் நாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**424, LA CLOSERIE,**
**Tel: 01 49 32 04 09**
**Port : 06 13 41 28 51**

**93160 NOISY LE GRAND**
**Fax: 01 43 03 30 86**

27

மலிவு விலையில்... அழைப்பிதழ்கள்
நிறைந்த தரத்தில்... துண்டுப்பிரசுரங்கள்
விரைவான சேவைக்கு... நூல்கள் சஞ்சிகைகள்
உட்பட உங்கள்
அனைத்துவிதமான
அச்சுத்தேவைகளுக்கும்



## IMPRIMERIE 27

**3 bis, Rue Pont de Baillet**
**95560 Monsoult. Tél : 01 34 69 96 86**

# Lilas Net

**சர்வதேச இணைப்புக்களுக்கு**

**150, Rue de Paris**
**Leslilas - 93260.**
**01 43 63 57 62.**



# கீ போட் வகுப்புகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**ஆசிரியர் S.S தில்லைச்சிவம்**

**- 01 48 34 60 15, 06 20 31 24 90 -**



விடுதலைப் புலிகளின் மகளீர் படையணி, எமது
இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை.

## தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்



## ASI BOUCHERIE

அகவை 50

TRIPERIE - VOLAILLE
VIANDE HALAL TOUTES SORTES DE VIANDES
BOEUF, AGNEAU, VEAU, VOLAILLE,
SPÉCIALITÉ CHÈVRE, CABRI
Demi-Gros -Detail
Ouvert du Lundi au Samedi de 8h à 20h
195, Rue du Fbg. St-Denis
75010 PARIS
Tél : 01 42 05 23 78
M° :La Chapelle ou Gare du Nord

## தமிழ் அச்சகம்

Impression Couleur - Noir et Blanc

59 Rue Louis Blanc, 75010 Paris
M° : La Chapelle ou Gare du Nord
Tél : 01 42 09 60 64 - Fax : 01 42 09 34 33
www.graphique14.com -
E-mail :graphique14@noos.fr

## V.T CASH & CARRY

VAAHESAN TRADERS LTD

மக்களின் வசதிக்கு ஏற்ப 360 ச,மீற்றரில் மிகப்பிரமாண்டமாக
அமைக்கப்பெற்ற ஓரேமளிகை ஸ்தாபனம்

11-15, Rue Cail - 75010 PARIS
M°La Chapelle/ Gare du Nord
Tél : 01 40 05 07 18 Fax : 01 40 05 06 92
www.restoindianparis.com

இசை மழையில் நனைந்திட........
ஐரோப்பா புகழ் பாரீஸ்

## ஈழநிலா

தொடர்புகட்கு- இயக்குனர் S.S தில்லைச்சிவம்
– 01 48 34 60 15, 06 20 31 24 90 –

## AMUTHAA TRADERS & NEW ASIA MARKET

Importateur Produits Asiatiques
et Himalaya bière indianne

230 Rue du Fg. Saint Denis 75010 Paris
Tél : 01 40 35 67 64 / Fax : 01 40 35 68 97

## VALARMATHI

KMS Video

இலங்கை இந்திய உணவுப்பொருட்கள், கடலுணவு வகைகள்,
மரக்கறி வகைகள், தொலைபேசி அட்டைகள், குளிர்பான
வகைகள் அனைத்தையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

70, Rue Des Moines 75017 Paris
Tél : 01 42 29 98 24 M° : Brochant

## A SKY COM

Import - Export
Vente Cartes Téléphoniques
SFR - BOUYGUES ORANGE
Gros - Demi-Gros - Détail
180, Rue du Fbg Saint Denis
75010 Paris
Tél : 01 46 07 91 22
Fax : 01 46 07 91 28

## NITHURAN

Vidéo & Coiffure
- Vente carte -Téléphonique

241, Av, de Rosny
93130 Noisy Le Sec
Tél . 01 48 48 89 71

5 Av, Alexis Varagne
95400 Villiers Le bel
Tél .06 15 12 49 90

## தமிழ்ப்பெண்கள் அமைப்பு- யேர்மனி

வியத்தகு தலைவரை உளமார வாழ்த்துகிறோம்
தமிழினம் தலைநிமிர்ந்து வாழ
புதிய சூரியனாக எங்கள் தலைவர்
புவிக்கு வந்த பொன்னான நாள்
கார்த்திகை இருபத்தியாறு....
சத்தியவழி நடக்கும் உயரியதலைவர்
பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென
உள்ளங்கள் நிறைந்து வாழ்த்துகிறோம்.



## Orient Textilien & Schmuck

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

- அனைத்து ஜவுளி வகைகள்
- கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
- அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
- வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
- நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax: 49-231-147836

## JAFFNA STORES

| | | |
|---|---|---|
| FEILEN STR -08 | RONN STR-01 | AM DOBBEN-124 |
| 33602 BEILEFELD | 59065 HAMM | 28203 BREMEN |
| TEL . 0521174799 | TEL 0238112614 | TEL .042179422951 |
| FAX . 0521174797 | FAX .0238120646 | FAX .042179422952 |

## V & I Telecom

Koner str -32, 40211 dusseldorf.
Tel : 2333608727 / Fax : 2333608729 / Tel : 2111752589
Fax : 211752590

அனைத்து தொலைபேசி அட்டைகளும் மலிவுவிலையில்
பெற்றுக்கொள்ளலாம். ஈழம் தொலைபேசி அட்டைகள்
இலங்கைக்கு கதைப்பதற்கு நிமிடங்கள் உத்தரவாதம்.



எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழவேண்டும்.
இந்த இலட்சியம் நிறைவேறவேண்டுமாயின் நாம் போராடியே ஆகவேண்டும்.

## தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்




**கணேசா கொம்**

உங்களின் சகலவிதமான தொலைத்-
தொடர்பு தேவைகளுக்கும் நாடுங்கள்

46, Rue du clignancourt
75018 Paris.
Tél : 01 53 41 32 12 / Fax: 01 42 52 40 68

அகவை 50

**KRISHNA BHAVAN**

Restaurant Spécialitées Indienne
பாரீசில் ஒரேயொரு சைவ உணவகம்
G.F.C SARL
24, Rue Cail -75010 Paris
M°La Chapelle ou Gare du Nord
Tél : 01 42 05 78 43



**PRASSAH THARSAN`S**



Restaurant
Gastronomiques Indiennes



பிரசா உணவகம் தர்சனாஸ் உணவகம்

54, Rue Louis Blanc, 75010 PARIS
M° : La Chapelle ou Louis,Blanc
Tél : 01 53 26 39 41

23, Rue, Perdonnet 75010 PARIS
M° : La Chapelle ou Stalingrad
Tél : 01 40 05 08 36 -06 80 02 93 41

**BOUCHERIE .R.R.R**

Spécialite - Africaine
(இறைச்சிக்கடை - R.R.R)

பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் உடன் மாட்டிறைச்சிப்பங்கு இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

34, Rue Philippe de Girard
75010 PARIS. Tél : 01 42 05 00 95

**REGINA'S**

Textiles- Tailoring & Video

30 நிமிடங்களில் உங்கள் சாறிBlouseஜயும் 2மணிநேரத்தில் பரதநாட்டிய உடையையும் குறித்தநேரத்தில் உடனுக்குடன் தைத்துப்பெற்றுக்கொள்ள சிறந்ததோர் No.1 தையல்நிலையம். அதுமட்டுமல்ல- Videoபடங்கள் மொகநாடகங்களும், திருமணசுபவைபவங்களுக்கான அலங்காரமும் தேர்ச்சிபெற்ற பட்டதாரிகளால் செய்து தரப்படும். எங்கே அது இங்கே... நாடுங்கள்.

33, Rue Philippe de Girard
75010 PARIS. (M° : La Chapelle)
Tél : 01 42 09 92 76



**Pierre SAGADEVAN**

அரசாங்க மொழிபெயர்ப்பாளர்
ஒவ்றா - கொமிசன் மொழிபெயர்ப்பாளர்

Expert traducteur / Interpréte assermenté

26, Rue Philippe de Girard
75010 PARIS.
(M° : La Chapelle)

Tél : 01 46 07 50 23
Port : 06 81 34 41 06
Fax : 01 46 07 02 87

Restaurant
**Dishny RAJAALY**

SpÉcialitÉes
Indiennes et Srilankaise

25, Rue Cail - 75010 PARIS
M° : La Chapelle
Tél : 01 42 05 44 04
www.restodishny.com



23, Rue Cail - 75010 PARIS
M° : La Chapelle ou
Gare du Nord
Tél : 01 42 09 91 14

**விமல் விநியோக நிலையம்**

அதிசயம் ஆனால் உண்மை

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான
பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, காண்டி, பாயாசக்கப்,
கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத்
தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Seine

Port 0616812200 Ou
0666795689
Tel.et Fax - 01 42 35 24 98

**CHIAAPAS**

சாந்தினி உணவகம்

உங்கள் இல்லங்களின் விழாக்களுக்குத் தேவையான
சாப்பாடுகளை ஓடருக்கு செய்துபெற்றுக்கொள்ளலாம்.

171, Rue La Fayette, 75010 Paris Tél : 01 53 26 09 39
Metro : Gare du Nord/ Gare du l'Est/ Louis Blanc
RER E: Sortie -Magenta Bus :26,54 -Arret - La Fayette
Dunkerque

**சிவாசினி வீடியோ**

**SIVASHINI VIDEO**



210, Rue du Fbg. Saint Denis
75010 PARIS.
☎ 01 42 09 23 59 / 06 14 50 50 54

**SINGAPORE SILK POINT**

SPÉCIALISTES INDIENNES ET SRILANKAISE

Men & Women wars · Childran wears
Immitation Jewellery · Music Instruments · Etc...

210,
Rue du fbg Saint Denis,
75010 Paris

M° : Gare du Nord ou La
Chapelle.
Tél - Fax : 01 46 07 03 15

SHOP OF FASHION UNIQUE

**AKIL S.A.R.L.**

Wholesale & Retail
Textiles, Covering Jewellery,
Fancy Gift Items



189, Rue du Fabourg ST.Denis
PARIS- 75010. FRANCE

Com : 01 42 09 89 33


எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் தலை நிமிர்ந்து நிற்கமுடிகின்றது.
தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்



ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் (இந்து) ஆலயம்.
பிரித்தானியா

அகவை 50
WESTERN JEWELLERS
JEWELLERS & GEM MERCHANTS
Silk Emporium
230, Upper Tooting Road
London SW17 7EW
Tel : 020 8767 3445
5 Plaza Parade,
29-33 Ealing Road, Wembley
HAO 4YA Tel : 020 8903 0909

PRABAS
Afrocaribbean - Confriential Foods
Grocerie and off Licence
Hallal Meat
Srilankan - Indian Groceries Fresh Vegetables
415 Alexandra Avenue, Rayners Lane, Harrow Middlesex HA2 9SG .
Tel: 020 8866 0977
Vat: 839 9248 71

GANA CAFE & RESTAURANT
Srilankan & South Indian Cuisine
For Wedding Parties, Birthday Parties & other special Occasions
S.Jesudasan -Proprietor.
24,Ealing Road, Wembley, Middx HAO 4TL
Tel: 020 8903 7004.

கே.எம்.எஸ் ஜூவலர்ஸ்
மங்கையர் மனம் கவரும், அசல் 22கரட் தங்கநகைத் தெரிவுகளுக்கு...
K.M.S JEWELLERS


6, Rue Perdonnet
75010 Paris
Métro : La Chapelle
Tél : 01 44 72 08 02 -
Fax : 01 44 72 04 78 -
Port : 06 61 86 08 02
105 ILFORD LANE,
ILFORD, ESSEX IG1 2RJ
Tel : 0208 514 3072 -
Fax : 0208 514 1821

Copie La Chapelle
Photocopie Service
N & B Laser Couleur
32, Rue Philippe du Girard
75010 Paris .
Tél : 01 42 09 60 94
Fax : 01 42 09 04 81

TMS SATELLITE
PARABOLE + TETE

இலவசமாகப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.
33, Bd de la Chapelle,
75010 PARIS
Tél : 01 53 26 38 12
Portable : 06 11 15 30 00

செம்பருத்தி பூக்கடை

ஐரோப்பாவில் ஓரே ஒரு தமிழ்
பூக்கடை திருமணம் மற்றும் அனைத்து
விழாக்கொண்டாட்டங்களுக்கும்
தேவையான மலர் மாலைகள்
பூச்செண்டு மலர்க்கொத்து
குறித்தநேரத்தில் சிறந்த முறையில்
செய்துதரப்படும்.
2, Rue Perdonnet -75010 Paris
(M Gare du Nord / La Chapelle)
Tél & Fax : 01 53 26 07 81
Port : 06 14 31 25 99
18, Rue Marcelin Berthelot -92800 Puteaux
(Bus : N° : 159, arrét : Marcelin Berthelot)
Tél : 01 47 75 94 12 Fax : 01 46 98 09 81

# வல்வையில் நடந்தது என்ன?



வல்வெட்டித்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை (19 நவம்பர்) மாலை 6.00 மணியளவில் உந்துருளியில் வந்தவர்களால் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் இரு இளைஞர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்ட சம்பவமானது யாழ் குடாநாடெங்கும் பெரும் உணர்வலைகளை தோற்றுவித்திருக்கிறது.

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி மைதானத்தில் இளைஞர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது தலைக்கவசம் மற்றும் ஜாக்கட் அணிந்த இருவர் உந்துருளியில் வேகமாக வந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு ஆதிகோவிலடிப் பக்கமாகத் தப்பியோடித் தலைமறைவாகியுள்ளனர். இத்துப்பாக்கிச் சூட்டில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்து 21 வயதுடைய சதாசிவம் குமரன், 21 வயதான இராசேந்திரம் சுரேஸ்குமார் ஆகியோர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இதேவேளை 34 வயதான பொன்னுத்துரை தெய்வேந்திரம் என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

துப்பாக்கிதாரிகள் தங்களை அடையாளம் காட்டாதவாறு மழைக் கோட்டு அணிந்திருந்தார்கள் என்றும், தொண்டமானாறு பக்கமாக இருந்து வந்த மேற்படி உந்துருளியில் (மோட்டார் சைக்கிள்) குறிப்பிட்ட இடத்தில் வேகம் குறைக்கப்பட்ட போது அதில் பின்னாலிருந்தவர் கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்ததாக இந்த சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளார்கள்.

தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறப்பிடமான வல்வெட்டித்துறையில் அவரது 50வது பிறந்த தினத்தை எதிர்வரும் 26ம் திகதி வெகு விமரிசையான முறையில் கொண்டாடுவதற்கு அப்பகுதி மக்கள் தயாராகி வரும் நேரத்தில் இடம்பெற்ற இந்த சம்பவமானது மக்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

அப்பாவி இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறை வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது, இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட இந்த சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் சூழவர 100 மீற்றர் தூரத்திற்குள் இராணுவ மினி முகாம்களும் காவலரண்களும் அமைந்துள்ளன. அடிக்கடி இராணுவ வீதி ரோந்துகளும் இடம்பெற்று வருகின்றன.

இப்படியான சூழ்நிலையில் இந்த வீதியில் துப்பாக்கிதாரர்களினால் எவ்வாறு பகிரங்கமாக நடமாட முடியும்? இது ஒரு திட்டமிட்ட கொலையாகும். கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தீவிர இராணுவ கண்காணிப்பிலிருந்து எவ்வாறு தப்பிப்போக முடியும்?

எனவே நடந்த இக்கொலைகளுக்கு சிறீலங்கா படைத்தரப்பே பொறுப்பேற்க வேண்டும். இனிமேலும் இத்தகைய கொலைகள் தொடர்வது நிறுத்தப்பட வேண்டும். இதற்கு காரணமானவர்கள் உடன் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு நீதியின் முன்நிறுத்த வேண்டும். இந்த சம்பவமானது சமாதானத்தை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் மக்களின் மனங்களை கொதிப்படையச் செய்துள்ளதுடன் எதிர்பார்ப்புகளையும் தவிடு பொடியாக்கியுள்ளது மட்டுமன்றி சமதான சூழலிற்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

முழுமையான சிறிலங்கா இராணுவ மையப்பகுதிக்குள் நடத்தப்பட்ட இந்த படுகொலையைக் கண்டித்து யாழ்ப்பாணம் முழுமையிலும் மக்கள் கதவடைப்பு புறக்கணிப்புப் போராட்டம் நடத்தியுள்ளனர். இந்த சம்பவத்தைக் கண்டித்து ஹர்த்தால் அனுஸ்டிக்குமாறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தது. இதன் காரணமாக கடைகள், சந்தைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தது. உள்ளூர், வெளியூர் போக்குவரத்து சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. குடாநாட்டின் வழமை நிலை முற்றாகப் பாதிப்புக்குள்ளானது.



யாழ் குடாநாட்டில் இராணுவத்தினருக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது மீசாலையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மகாலிங்கம் சுந்தரராஜா (21) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மக்கள் பரவலாக வீதிகளில் ஒன்றுதிரண்டு இராணுவத்திற்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் இராணுவ வாகனப் போக்குவரத்துக்களை தடுப்பதற்காக வீதிமறியல்களிலும் ஈடுபட்டனர்.



இச்சம்பவங்களின் போது மீசாலை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை சாவகச்சேரி உட்பட 10ற்கும் மேற்பட்ட இடங்களில் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்நிலை காரணமாக சில இடங்களில் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன.

மீசாலையில் வீதிகளில் டயர்களைப் போட்டு எரித்து போக்குவரத்து தடைகளை ஏற்படுத்தும் வகையில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது இராணுவத்தினர் அதனை அகற்ற முற்பட்டனர்.

அவ்வேளையில் இடம்பெற்ற வன்முறையின் போது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அப்பகுதியில் நிலமை மேலும் உக்கிரமடைந்தது. ஆத்திரமடைந்த பொதுமக்கள் இராணுவத்தினரின் காவல் நிலைகளையும், காவலரண்களையும் அடித்து நொருக்கி தீயும் வைத்துள்ளார்கள்.

கலகம் அடக்கும் பொலிசாரும் மேலதிக இராணுவத்தினரும் அங்கு வரவழைக்கப்பட்டு கண்ணீர்ப் புகையும் ஆகாயத்தை நோக்கிய வேட்டுக்களும் தீரக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த பொன்னுத்துரை தெய்வேந்திரன் என்பவர் இராணுவ உடையணிவித்து வைத்தியசாலையிலிருந்து பலாத்காரமாக கொண்டு செல்லப்பட்டுள்ளார். இவர் ஈ.பி.டி.பி யுடன் தொடர்புடையவர் எனவும் இதனாலேயே இவர் இவ்வாறு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. ஊறணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்

வைத்தியசாலை நிர்வாகத்தின் அனுமதியின்றி அங்கு பிரவேசித்த இராணுவத்தினர் இவரை கொண்டு சென்றதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாள் தெரிவித்தார்.

இதேவேளை, கொல்லப்பட்ட இளைஞர்கள் குறித்த தகவல்களை முழுமையாக இருட்டடிப்புச் செய்து இச்சம்பவத்தில் ஒருவர் மட்டுமே காயம் என்பது போல ஈ.பி.டி.பி. பிரச்சாரம் செய்து வருகிறது.


துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை ஈ.பி.டி.பி விடுதலைப் புலிகள் மீது சுமத்தி சுயலாப பிரச்சாரத்தில் ஈடுபட முற்படுவதாக விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளம்பரிதி குற்றம் சுமத்தியுள்ளார். யாழ் மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் இந்த குற்றத்தை சுமத்திய அவர், தமக்கும் இந்த சம்பவத்திற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

இந்த நடவடிக்கையானது திட்டமிட்ட சதி நடவடிக்கையாகும். குடாநாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் மக்களின் உணர்வலைகளாகும் என்றும் சுட்டிக் காட்டிய அவர், சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொன்னுத்துரை தெய்வேந்திரன் என்பவருக்கு சீருடை அணிவித்து இராணுவம் அவரை வெளியே கொண்டு சென்றுள்ளது.

இந்த நடவடிக்கையானது வைத்தியசாலை விதிமுறைகளை மீறிய இராணுவ அராஜகமாகும் என்றும் குறிப்பிட்ட அவர், சம்பவத்தில் கொல்லப்பட்ட இரண்டு இளைஞர்களும் தேசிய விடுதலைப் போராட்ட அபிமானிகள் என்றும் கூறினார்.

இச்சம்பவம் இராணுவத்தின் முகாம்கள் மற்றும் காவலரண்கள் நெருங்கிய பகுதியிலே இடம்பெற்றது என்பதும் மேற்படி விளையாட்டு மைதானத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திற்குள்ளேயே இராணுவத்தினரின் நிலை அமைந்திருக்கிறது என்பதோடு இவ்வாறான ஒரு இடத்தில் இராணுவத்திற்குத் தெரியாமல் வேறு நபர்கள் வந்து மீண்டும் தப்பிச் செல்லமுடியாது என்பதுமே உள்ளூர் மக்களின் கருத்தாக உள்ளது.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வல்வெட்டித்துறை தெனியம்பையைச் சேர்ந்த
வேலுப்பிள்ளை உதயகுமார் என அழைக்கப்படும்

## கடற்புலி மேஜர் விவேகன் (விடுதலை)

ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின்போது தாய் மண்ணுக்காய் தன் உயிரை அர்ப்பணித்துக்கொண்ட எங்கள் மண்ணின் மைந்தனின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி. மற்றும் நம் மண்ணுக்காய் மரணித்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியை செலுத்துகிறோம்.


மாவீரரே
தாய்மடியில் பிறந்து
தாய்மண்ணில் வளர்ந்து
தாய் மண்ணுக்காய் வாழ்ந்து
தாய் மண்ணுக்காய் வீழ்ந்த – உங்களின்
உயிர் பிரிந்தாலும் – நம் மனதில்
மண்ணின் நினைவோடு என்றும் வாழ்வீர்.

தாயின் மடியில்
05.04.1974

மண்ணின் மடியில்
07.11.1999

அன்புக்குரிய சகோதரர்கள்,
வேலுப்பிள்ளை சந்திரகுமார்,
வேலுப்பிள்ளை ஜெயக்குமார்

# மரண அறிவித்தல்



## திரு குமார் மோகனதாஸ் (மோகன்)


நல்லூர் கோவில் வீதியை பிறப்பிடமாகவும், பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமார் மோகனதாஸ் அவர்கள் 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை பாரிசில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தோற்றம் : 27.07.1963
மறைவு : 14.11.2004

தொடர்புகளுக்கு : Northern Cricket club

# உண்மையை மிஞ்சிய கற்பனை !



டொல்பின் என்ற மீன் மனித இனத்திற்கு உதவுவதாக மதிக்கப்படுகின்றது. அத்துடன் பழக்கி எடுத்துவிட்டால் பல்வேறு விளையாட்டுக்களைக்காட்டி மக்களை மகிழ்விக்கவும் செய்கின்றது. இவ்வாறு மனிதனோடு இரண்டறக் கலந்துவிட்ட இந்த மீனைப்போன்ற ஒரு 'றொபோ' மீனை உருவாக்கியுள்ளனர் நியூசிலாந்து நாட்டினர். நியூசிலாந்தின் ஒக்லாந்த் துறைமுகத்தில் றிமோட் மூலம் இயக்கி மக்களுக்கு மகிழ்விக்கப்படுகின்றது. இதன் உடலில் 110 குதிரை வலு சக்தி கொண்ட இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் வேகமாக நீதிந்தியும் தண்ணீரில் பாய்ந்தும் விளையாட்டுக்காட்டும் இதனைப் பார்க்க கடற்கரையில் மக்கள் வெள்ளம் அலைமோதுகின்றது.

# பலதும் பத்தும்

## 56 வயதில் இரண்டு குழந்தைகள் !



குழந்தைகள் இல்லாதவர்களை 'மலடுகள்' என்று பட்டம்சூட்டி மகிழ்ந்த மனிதர்களின் கேலிகளை என்றோ உடைத்தெறிந்துவிட்டது மருத்துவ உலகம். இப்போது 56 வயதில் தாய் ஒருவர் ஒரே தடவையில் இரு குழந்தைகளைப்பெற்று சாதனை படைத்திருக்கின்றார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள மருத்துவமனையொன்றில் சத்திர சிகிச்சை மூலம் இரு குழந்தைகளும் வெளியே எடுக்கப்பட்டன. கரு முட்டைகளை அவரது கர்ப்பப் பையினுள் செலுத்தியன் மூலம் ஒரு மகனையும் ஒரு மகளையும் ஒரே நேரத்தில் பெற்றெடுத்துள்ள 56 வயதான தாய் சென்ற் ஜேம்ஸ், தனது குழந்தைகளை வளர்ப்பதற்காக தனது நேரத்தை முழுமையாக செலவிடப்போவதாக மகிழ்ச்சியோடு கூறியிருக்கின்றார்.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் 1996ம் ஆண்டு 63 வயதில் குழந்தையொன்றைப் பெற்றெடுத்ததே சாதனையாகக் கருதப்படுகின்றது. 2002ம் ஆண்டு முன்னாள் ஒலிம்பிக் வீராங்கனையான மார்லின் நோலீன் 55 வயதில் குழந்தையைப் பெற்றெடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை உலகம் முழுவதிலும், இதுவரை 50 வயதிற்கு மேற்பட்ட தாய்மாருக்கு 263 குழந்தைகள் பிறந்துள்ளதாக புள்ளிவிபரம் ஒன்று கூறுகின்றது.

## புலித்தோல் போர்த்த பன்றி

தாய்லாந்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள மிருகக்காட்சி



சாலையில் புலி ஒன்றுடன் புலித்தோல் போர்த்தப்பட்ட பன்றிக்குட்டி ஒன்று உல்லசமாக உலா வருவதைப் படத்தில் காணலாம்..!


## கணவனின் கழுத்தை அறுத்த மனைவி மாடியில் இருந்து குதித்து தற்கொலை

பக்கவாத நோயால் படுத்த படுக்கையான கணவனின் கழுத்தை அறுத்த 67 வயதான மனைவி, மாடியில் இருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவம் கொங்கொங்கில் நடந்தது. பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட கணவனை அவர்தான் கவனித்துக் கொண்டார். ஆனால் அவருக்கும் உடல் நலக் குறைவு ஏற்பட்டதால், வாழ்க்கையில் வெறுப்பு அடைந்தார்.

கடந்தவாரம் கத்தியை எடுத்து கணவனின் கழுத்தை வெட்டிய அவர், கணவர் இறந்து இருப்பார் என நினைத்து மாடியில் இருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டார். அதற்கு முன்பு எழுதி வைத்த கடிதத்தில், "நான் தற்கொலை செய்து கொள்வது என்று முடிவு செய்துவிட்டேன். நான் இறந்து விட்டால், என் கணவரை கவனித்துக் கொள்ள யாரும் இல்லை என்பதால் அவரை வெட்டிக் கொன்றேன்" என்று எழுதி இருந்தார். ஆனால் அந்தப் பெண் எதிர்பார்த்தபடி அவர் கணவர் சாகவில்லை. காயத்துடன் உயிர் பிழைத்துக் கொண்டார்.

## 18ம் நூற்றாண்டு துப்பாக்கிகள்

18ம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டங்களில் நடைபெற்ற தென் அமெரிக்காவின் சுதந்திரத் திற்கான போரின் போது சைமன் டி பொலிவர் என்பவர் பயன்படுத்திய கைத் துப்பாக்கிகள் இவை. அவர் இவற்றை பாதுகாப்பாக குடும்பத்தாரிடம் கொடுத்து வைத்திருந்தார். அது இப்போது நியூயோர்க்கில் உள்ள கிறிஷ்டி அருங்காட்சியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத் துப்பாக்கிகள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பின்னர், ஏலத்தில் விற்கப்படவுள்ளன.





குண்டினை வீசுவதற்கு விமானம் தான் வேகமாகச் செல்லும். அட இதுவுமா..?

## மகனின் பெயர் @!

இணையத்தள முகவரிக்கு பயன்படும் குறியீட்டை தனது மகனுக்குபெயராகச் சூட்ட விரும்பிய சீனப் பிரஜை ஒருவர் அது சரிவராததால் ஏமாற்றம் அடைந்திருக்கின்றார். இன்று உலகம் முழுவதையும் கணினி ஆட்கொண்டுவிட்டது. ஒவ்வொருவரும் ஏராளமான இணையத்தள முகவரிகளை வைத்திருக்கின்றார்கள். இந்த இணையத் தள முகவரிகளுக்கு `@` என்ற புதிய எழுத்து வடிவம் குறியீடாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இணையத் தள முகவரியைக் குறிப்பதற்காக பயன்படும் '@' என்ற குறியீடு உள்ள ``அட் தி ரேட் ஆப்" என்று தன் மகனுக்கு பெயர் சூட்ட சீனாவில் உள்ள ஒருவர் விரும்பினார். ஆனால் அதற்கு அரசு அனுமதிக்கவில்லை. ஹெனான் மாநிலத்தில் ஷெங்ஷோ நகரைச் சேர்ந்த அவர், மகனுக்கு அந்தப் பெயரைச் சூட்டி அதைப் பதிவு செய்ய சென்றபோது அதிகாரிகள் பதிவு செய்ய மறுத்து விட்டனர்.

சீன நாட்டு சட்டப்படி பெயர்கள் அனைத்தும் அந்த நாட்டு மொழியான `மாண்டரின்'னில் மொழி பெயர்க்கப்படக் கூடியதாக இருக்க வேண்டும். இந்தச் சட்டத்தைச் சுட்டிக் காட்டி அந்தப் பெயரைச் சூட்ட முடியாது என்று கூறி விட்டனர். இதனால் அந்த கணினி அபிமானி ஏமாற்றம் அடைந்து விட்டார்.




## வீரப்பன் 'கேக்'

சென்னையில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் பிரமாண்டான 'கேக்' கண்காட்சி ஒன்று நடைபெற்றது. அதில் விதவிதமான வடிவங்களில் 'கேக்'குகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அக் கேக்குகளில் அனைவரையும் கவர்ந்தது, காட்டில் வீரப்பன் துப்பாக்கியுடன் நிற்பதுபோன்ற வடிவத்தில் செய்யப்பட்டிருந்த இக் 'கேக்'கே...!

CREDIT
S.A. NATHAN

S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா ?
B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

# கிழக்குக்கான தனியான வானொலி நிலையம்

# தமிழ், முஸ்லிம் ஐக்கியத்தை சீர் குலைக்கும்

கிழக்கு மாகணத்தில் பிராந்திய வானொலி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி சந்திரிகா பதவி ஏற்று பத்து ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்த ஒலிபரப்பு சேவை ஆரம்பிக்கப்கட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. இந்த வானொலி நிலயம் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக மட்டக்களப்பு, அம்பாறை தமிழ் மக்களிடம் குறிப்பாக அம்பாறை வாழ் தமிழ் மக்களிடம் அதிதிருப்தியும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. வானொலி நிலையம் அமைக்கப்பட்டு புதிய சேவை ஆரம்பிக்கபடுமானல் பிரதேசத்தின் ஒற்றுமை பாதிக்கப்படும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறன சூழ்நிலையில் வானொலி நிலையம் அமைக்கப்படுவதன் பின்னனி பற்றியும் நன்மை தீமைகள் பற்றியும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. பிராந்திய வானொலி நிலையம் உருவாக்கப்பட வேண்டும். அதன் முலம் குறிப்பிட்ட பிரதேச மக்களின் வரலாறு, பாரம்பரிய கலைகள் பற்றியும் வளங்கள் பற்றியும் ஆய்வை மேற்கொள்வது மக்களை விழிப்புட்டுதல், ஒன்றுதிரட்டல், பிரதேசத்தின் கல்வி சுகாதரம் போன்றவற்றை முன்னேற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் என பல்வேறு முன்னேற்றகரமான வேலைகளை செய்ய முடியும். இந்த விடயத்தில் எவருக்கும் மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது.

ஆனால் கிழக்கு பிராந்தியத்திற்கான வானொலி சேவை இவ்வாறன நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும்மென ஆரம்பிக்கப்படுகிறதா? என்ற கேள்வி எழுகின்றது. அதே நேரம் இந்த சேவை முலம் அனைத்து சமுக மக்களுக்கும் நேர்மையாக சேவை செய்ய முடியுமா? அப்படி இயக்கதான் அரசியல் வாதிகள் இடமளிப்பார்களா? அரசாங்கம் தனது கொள்கையையும் நோக்கத்தையும் நிறைவேற்ற இவ் வானொலியை பயன்படுத்தாமல் தான் விட்டுவிடுமா, என்பன போன்ற கேள்விகளுக்கு எவராலும் உறுதியான பதில் எதனையும் கூற முடியாது. அப்படி யாரவது கூறின்ாலும் நடைமுறையில் எதுவும் சாத்தியமாக போவதில்லை. அரச ஊடகங்களின் கடந்த கால வரலாறுகள் இவற்றுக்கான பதிலையும் சிறந்த படிப்பினைகளையும் எமக்கு தந்துள்ளன.

இந்த வானொலி நிலையத்தின் சேவைகள் முலம் நன்மையடைய போவது நிச்சயமாக அரசாங்கமும் சில அரசியல்வாதிகளும் தான். முஸ்லிம் மக்களின் நலனுக்காக இவ் வானொலி நிலையம் அமைக்கப்படுவதாக கூறப்பட்டாலும் இதில் முழுவதும் உண்மை இல்லை. அவர்கள் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றும் போது முஸ்லிம்களுக்கு சில நன்மைகள் வந்து சேர வாய்ப்புள்ளது. தமிழ் மக்கள் இந்த வானொலி சேவை மூலம் எவ்வாறன நன்மைகளை பெறப்போகின்றார்கள் என்பதற்கு எந்தொரு அறிகுறியும் இதுவரை தென்படவில்லை.

வானெலி நிலையம் அமைக்கப்படுவதன் முன்பு விரிவான ஆய்வு முயற்சியோ கருத்து கணிப்போ மேற்கொள்ளப்படாமல் அரசியல் காரணங்களுக்காகவே இத்திட்டம் முன் நகர்த்தப்படுகிறது. இதன்பின் உள்ள அரசியல் நோக்கம் வெளிப்பட்டுள்ளது. இதில் வேடிக்கையான விடயம் என்ன வென்றால்,

பிராந்திய வானெலி நிலையம் அமைக்கப்படுவதற்கு அக்கறைப் பற்று, சம்மாந்துறை, கல்முனை ஆகிய முஸ்லிம் இடங்கள் பார்வையிடப்பட்டது தான். கண்துடைப்பு நோக்கில் கூட வேறு இடங்கள் பார்க்கப்படவில்லை. நேர்மையாகவும் மக்களின் தேவையை முதன்மைப்படுத்தியதாகவும் இருந்திருந்தால் வேறு இடங்கள் நிச்சயம் பரீசிலிக்கப்பட்டிருக்கும்.

தமிழ், முஸ்லிம் சமுகங்கள் சேர்ந்து வாழும் அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகும். அவ்வாறு மக்களிடையே பிரச்சினை ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் தான் அரசாங்கம் இவ்வாறன ஒரு செயலில் இறங்கியுள்ளதோ என சந்தேகிக்க வேண்டியுள்ளது. வானொலி நிலையம் ஒன்று அமைக்கப்படுமானல் முதலில் அது எந்தப் பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டும். என்பதில் சிக்கல் ஏற்படும் அதற்கு அடுத்த கட்டத்தில், வானொலி ஆரம்பிக்கப்பட்டடு நிகழ்ச்சி ஒலிபரப்பாகும் போது பிரதேசத்தின் வரலாறு, பண்பாட்டு பழக்க வழக்கங்கள், பிரதேச இலக்கியங்கள், கலைஞர் ஊக்குவிப்பு போன்ற விடயங்களில் முரண்பாடுகள் ஏற்படும். உடனடியாக முரண்பாடுகள் ஏற்படாவிட்டாலும் ஒரு பகுதியினர் மனக்கசப்பிற்கு உள்ளாகுவார்கள்.

அரசினதும் சில அரசியல்வாதிகளினதும் ஆதிக்கம் வானொலியின் சுதந்திர செயற்பாடுகளை கட்டுப்படுத்தும். அவ்வாறு நடைபொறாது என கூற முடியாது. அரச ஊடகங்களில் அவ்வாறன செயற்பாடுகள் நடக்கின்றன.

அத்துடன் கிழக்கு மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற வகையில் இவ் வானொலியூடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் கிழக்கு பிராந்தியத்தில் தமிழ்–முஸ்லிம் மக்களிடையே உள்ள ஒற்றுமை பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. பிராந்திய வானொலி நிலைய முரண்பாட்டை மனதில் வைத்துக்கொண்டு வேறு சிறு சிறு சம்பவங்கள் பெரிதுபடுத்தப்பட்டு சமுகங்களிடையே முறுகல் நிலை தோற்றுவிக்கப்படும் கடந்த காலங்களில் இவ்வாறன பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன பல ஹர்த்தால் சம்பவங்கள் வேண்டுமென்று திட்மிட்டு நடாத்தப்பட்டுள்ளன இதில் இரு சமுகத்தவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

பிராந்திய ஒலிபரப்பு நிலையத்தில் இன விகிதாசார அடிப்படையில் ஊழியர் நியமனங்கள் இடம்பெறுமா, என்ற ஒரு சந்தேகமும் எழுப்பபடுகின்றது. அரசினாலும் அமைச்சர்களாலும் தான் பெரும்பாலன நியமனங்கள் வழங்கப்படும். அமைச்சுக்களின் கீழ் இயங்கும் திணைக்களங்கள் அதிகாரசபைகள் போன்றவற்றிலும் அவிருத்தி வேலைத்திட்டங்களிலும் அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சிபார்சின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படுவதில்லை என்று நேர்மையாக எவராலும் கூறமுடியுமா.

தமிழ் சிங்கள சமுகங்களிடையே பிரிவினை ஏற்படுத்துவதற்கு அரச நியமனங்களில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டதும் ஒரு காரணமாகும். அவ்வாறன ஒரு நிலை தமிழ் முஸ்லிம் சமுகங்களிடையே ஏற்பட இவ் வானொலி நிலையம் காரணமாக அமைந்துவிடும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களிற்கு கிடைக்க வேண்டிய அவிருத்தி உதவிகளையும் அரச வேலை வாய்ப்புக்களையும் முஸ்லிம் சமுகத்தவர்கள் தட்டிப்பறித்து விட்டார்கள் என்ற மன உணர்வு தமிழ் மக்களிடம் உள்ளது. கிழக்கில் நடந்த கசப்பான அனுபவங்களுடன் இவ்வாறன மன உணர்வு ஏற்பட்டமையால்தான் தமிழ்–முஸ்லிம் சமுகங்களிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. நிலமை இவ்வாறு இருக்கும் போது இரு சமுகங்களுக்கும் இடையில் இடைவெளியை மேலும் அதிகரிக்க கூடியதான நடவடிக்கைகளின் பின் விளைவுகளை சம்மந்தப்பட்டவர்கள் சிந்திக்க தவறுவது ஏன்?

இந்த இடத்தில் அரசியல் வாதிகள் தூர நோக்கில் சிந்திப்பார்கள் என்று எதிர்பாக்க முடியாது. தமது கைகளில் அதிகாரம் இருக்கும்போது தமது எதிர்கால அரசியல் இருப்பிற்கான வேலைகளை செய்வதில் தான் அவர்கள் தீவிரம் காட்டுவார்கள். விளைவுகளை பற்றி சிந்திக்க மாட்டார்கள். அரசியல்வாதிகளின் அவிருத்தி வேலைகளை அவதானிக்கும் எவருக்கும் அவர்களின் நோக்கம் புரியும்.

பிராந்திய வானொலி நிலையம் அமைக்கபடுவதன் பின்னனியில் அரசின் சூழ்ச்சி திட்டம் ஒன்று இருப்பது தெரிகிறது. யுத்தம் ஒன்று மீண்டும் ஏற்பட்டால் பிராந்திய வானொலி ஊடாக தமிழ்–முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் செய்திகளையும் நிகழ்சிகளையும் நடத்தலாம் என அரசாங்கம் திட்டமிட்டிருக்கலாம். இவ்வாறன நோக்கத்தில்தான் பிராந்திய வானொலி நிலையம் அமைக்கபடுகிறதோ என்ற சந்தேகம் இன்று பலருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அரச ஊடகங்கள் ஊடாக மக்களை குழப்பும் வகையிலான பொய் பிரச்சாரங்கள் நடந்துள்ளன. கருணா விவகாரத்தில் கூட அரசு ஊடகங்கள் ஊடாக மக்களை குழப்பும் வேலைகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

அரசாங்கம் தனது சூழ்ச்சிகரமான பிரித்தாளும் தந்திரத்தை நிறைவேற்ற தனது ஊடகங்களைப் பாவிக்கும் என்பதுதான் வரலாறு எமக்கு கற்றுதந்த பாடமாகும். தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தவென யாழ் FM, வன்னி FM, வானம்பாடி ஒலிபரப்பு என பலல்வேறு ஒலிபரப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது அவற்றின் சேவைகள் என்ன ஆயிற்று? தமது தேவைகளும் நோக்கங்களும் நிறைவேறியவுடன் அல்லது தோல்வியில் முடிவடைந்தவுடன் அவை நிறுத்தப்பட்டன. இவ் வானொலி சேவைகளில் பிராந்திய நலனோ, மக்களின் நலனோ முக்கியப்படுத்தப்படவில்லை. ஆகவே தமிழ்–முஸ்லிம் சமுகங்கள் ஒவ்வொரு விடயத்தையும் எதிர்காலத்துடன் சேர்த்து சிந்தித்து பார்க்க வேண்டும்.

இரு சமுகங்களும் இணைந்து வாழவேண்டும் என்பதே யதார்த்த சூழ்நிலை. கடந்த காலங்களைப் போல இரு சமுகங்களும் நிம்மதியின்றி வாழும் நிலை இனியும் தொடர அனுமதிக்ககூடாது. எமக்கிடையேயான இடைவெளிகளைக் குறைத்துக்கொள்ளும் வகையான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஏற்கனவே பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கும் நிலையில் புதிய பிரச்சினைகளை உருவாகக் கூடாது. ஒவ்வொரு சமுகத்தவரும் தமத நலன்களை மட்டும் கருத்தில் கொள்ளாது சகோதர சமுகத்தையும் மனதில் கொண்டு அதிற்கேற்றப சிந்தித்து செயற்பட வேண்டும்.


**ச. சங்கரன்**

> அத்துடன் கிழக்கு மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற வகையில் இவ் வானொலியூடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் கிழக்கு பிராந்தியத்தில் தமிழ்–முஸ்லிம் மக்களிடையே உள்ள ஒற்றுமை பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. பிராந்திய வானொலி நிலைய முரண்பாட்டை மனதில் வைத்துக் கொண்டு வேறு சிறு சிறு சம்பவங்கள் பெரிதுபடுத்தப்பட்டு சமுகங்களிடையே முறுகல் நிலை தோற்றுவிக்கப்படும் கடந்த காலங்களில் இவ்வாறன பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன பல ஹர்த்தால் சம்பவங்கள் வேண்டுமென்று திட்மிட்டு நடாத்தப்பட்டுள்ளன இதில் இரு சமுகத்தவர்களும் ஈடுபட்டுள்ளனர்.





மலைபோல மக்கள் சக்தி எமக்கு பின்னால் இருக்கும் வரை,
எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.


# தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்







## மேதகு வே. பிரபாகரன் அவாகளின் 50வது பிறந்த நாள் விழா

நாள் : 26.11.2004 வெள்ளிக்கிழமை

காலை 8.00 மணிக்கு நடை திறத்தல், வழமையாக நடைபெறும் 6 கால மரகதலிங்க அபி'ேகமும், பூசையும் இன்று மேதகு வே. பிரபாகரன் அவர்களின் பெயரில் நடைபெறும்.

8.15 மணிக்கு ஸ்படிகலிங்க அபி'ேகம் தொடர்ந்து லலிதா சகஸ்ரநாம பாராயணம்.

9.00 மணிக்கு காலை சிறப்பு பூசையைத் தொடர்ந்து நாள் முழுவதும் அன்னதானம்

10.30 மணிக்கு மூல அம்மனுக்கு 108 வலம்புரி சங்காபி'ேகம்.

மாலை 6.30 மணிக்கு ஸ்ரீசக்கர பூசை

7.30 மணிக்கு சிறப்பு மாலை பூசையைத் தொடர்ந்து அம்மன் அழகிய தங்கத்தேரில் திருக்கோயில் வலம் வருதல்.

6.00 மணிக்கு வி'ேட பிறந்த நாள் நிகழ்ச்சிகள் சிவயோகம் கலையரங்கத்தில் நடைபெறும்.

9.00 மணிக்கு மாவீரர் நினைவுத் தூண் திறக்கப்படுதல்

அனைவரையும் இந்நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இங்கனம்

அறங்காவலர் சபை

# தமிழீழ மக்களின் காவல் தெய்வங்களான மாவீரர்களின் நினைவு நாள் – நவம்பர் 27



தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முதன்மையான நாள் ஆகும். 17,780 வரையிலான மாவீரர்கள் தமிழ் இனத்தின் விடுதலைக்காகவும் தமிழீழத்தின் விடிவிற்காகவும் உழைத்து தங்கள் இன்னுயிர்களை தற்கொடையாக ஈர்ந்து தமிழீழ மண்ணில் உரமாகி விட்ட மாவீரர்களின் நிறைவு நாள் மாவீரர் நாள்.

தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிர் ஈர்ந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்கான வீரச்சாவடைந்துவிட்ட நிலையில், ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியே நினைவு கூருவது இயலாது என்ற நிலையில், அனைவரையும் ஓரே நாளில் நினைவு கூறக் கூடியவாறு தமிழீழ விடுதலைப் போரில் முதல் வீரச்சாவடைந்த மாவீரர் லெப் சங்கரின் நினைவு நாளான நவம்பர் 27லை பொதுவான மாவீரர் நாளாக தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்தார்.

1989ம் ஆண்டு நவம்பர் 27ம் திகதி முதலாவது தமிழீழ மாவீரர் நாள் ஆரம்பமானது. 1994ம் ஆண்டு நவம்பர் 21ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை மாவீரர் நாள் வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 1995ம் ஆண்டு முதல் நவம்பர் 25ம் திகதியாக மாவீரர் நாள் சுருக்கிக் கொண்டாடப்பட்டது. இவ்வருடம் போல் அமைதிச் சூழலில் மாவீரர் நாள் வருவதாக மிக எழுச்சியுடன் கொண்டாடப்படவுள்ளது. மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு எங்கும் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழீழ விடிவுக்காக மரணித்த மாவீரர்கள் தேசம் தூங்கிய போதும் காரிருளில் நடு நிசியில் விழித்திருந்தவர்கள் தமது உணர்வுக்கு கதிர்களை தமக்குள் சிறையிட்டுக் கொண்டவர்கள். பள்ளிப் பராயத்தை பறிகொடுத்தார்கள். சுகபோக வாழ்க்கையை தூக்கி எறிந்தவர்கள். ஊர் எல்லாம் உறங்கும் வேளை உறக்கம் இன்றி விழித்திருந்து எல்லை சுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள். தம் உயிரிலும் மேலாக நேசித்து மக்களுக்காக தமது உற்றம், உயிர், உடல், உடமை அனைத்தையும் ஈர்ந்து போராடி இன்று நிரந்தரமாகவே துயில் கொள்கின்றவர்கள்.

உயிரைத் திறந்து உடலை உரமாக்கி செங்குருதியால் வலாறு எழுதி தமிழீழ மண்ணில் நினைவுச் சிலைகளாய், ஓவியமாய், புது விதையாய், விடுதலையின் தீச்சுடராய் தேசம் எங்கும் சோதியாய் ஒளிப்பார்கள்.

எமது விடுதலை வரலாறு மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டு இருக்கின்றது. இவர்களுடைய இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள். அல்ல. இந்த வீரர்களின் கனவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்து விட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திர சிற்பிகள். எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள்.

எமது இனத்தின் சுதந்திரத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் தமது இன்னுயிர்களை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள். காலம் காலமாக எமது இதயக்கோவில்களில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையினை வாழும் சாதாரண மனிதப்பிறவி அல்ல. அவன் ஒரு இலட்சியவாதி, ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமான அர்த்தம் உள்ளது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரை அாப்பணிக்கத் துணிகின்ற நான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள் அவர்கள் அசாதாரண மனிதப் பிறவிகள், என் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர்களை விளித்திருக்கின்றார்.

நவம்பர் 25ம் திகதிக்கு முன்னர் தமிழீழத்தை 'புனிதப்படுத்தும் நடவடிக்கையில் தமிழீழ மக்கள் ஈடுபடுகின்றார்கள்.

இல்லங்கள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அலுவலகங்கள் பொது மக்கள் அனைவராலும் சிரமதானம் செய்யப்பட்டு தமிழீழம் அலங்கரிக்கப்பட்டு பொது பொலிவுடன் விளங்கும் போது மாவீரர்கள் நினைவு கூறப்படுகின்றார்கள்.

நவம்பர் 25ம் திகதி மாவீரர் ஆரம்ப நாள் காலை 8.00 மணிக்கு தமிழீழ தேசியக் கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகும். மாவீரர்கள் துயிலும் இல்லங்களில் 25ம் திகதி காலை 8.00 மணிக்கு தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்படும் .

# சர்வதேச அரங்கில் வெளிப்பட்டு நிற்கும் சிறீலங்காவின் அரசியல் திருகுதாளங்கள்

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்து வைக்கும்முகமாக கொழும்பு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன் தலைமையிலான சமாதானத் தூதுவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நாடு திரும்பி விட்டனர். ஆனால் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பமாகும் அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. எதிர்பார்த்தது போல பேச்சுவார்த்தை பயன் எதுவும் தரவில்லை. வெறுங்கையுடனேயே அனுசரணையாளர்களான நோர்வேக்காரர்கள் ஊர் திரும்பியிருக்கின்றார்கள் என்று பத்திரிகைகள் பலவும் தலைப்பிட்டு செய்திகளை வெளியிட்டுள்ளன. பேச்சுவார்த்தை மீண்டும்? ஆரம்பமாவதற்கு தடையாக விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையே இருந்து வருகின்றது என்ற அரசாங்கத்தின் நியாயமற்ற குற்றச்சாட்டுக்களும் அதனை தட்டிக் கழிப்பதற்கான அரசாங்கத்தின் யோசனைகளும் பேச்சுவார்த்தையை மேலும் தாமதிக்கின்றன. இந்த யோசனையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் கோரி நிற்கின்றார்கள். கடந்த ஒரு ஆண்டு காலத்திற்கும் மேலாக விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை உறுதியாகவும் தெளிவாகவும் கூறியுள்ள நிலையில் ஜனாதிபதி மீண்டும் மீண்டும் புது விளக்கம் கேட்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது. எதிரும் புதிருமான ஒரு நிலையை ஜனாதிபதியே தோற்றுவிக்கின்றார்.

ஜனாதிபதி பிரச்சினைகளுக்கான இறுதித்தீர்வை கண்டறியும் கால கட்டம் வரும்பொழுது உங்களின் இந்த யோசனையை கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று கூறி முன் நிபந்தனைகள் எதுவும் இல்லாமல் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாம் என்று தெரிவித்து வருகின்றார். எதிரும் புதிருமான இந்த நிலைப்பாடுகள் மத்தியில் பொதுவான ஒரு நிலைப்பாட்டை கண்டறிந்து அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைக்கலாம் என்று கருதியதாலேயே நோர்வே அனுசரணையாளர்கள் இங்கு வந்து நேரடி முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் எதிர்பார்த்த பலன் கிட்டாமலே ஊர் திரும்பிவிட்டனர். ஜனாதிபதியிடம் இருந்து ஆக்கபூர்வமான பதிலை நோர்வேத் தூதுக்குழு எதிர்பார்த்து வருவதாகவே கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரக அதிகாரி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார். அது மாத்திரமல்ல பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான அதாவது புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் உடனடியாகவே பேச்சு ஆரம்பிக்கப்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் சிங்கள ஊடகங்களில் கூட கடந்த வாரம் வெளியாகியிருந்தது. ஆனால் ஜனாதிபதி அதற்கு நேர் மாறாக மீண்டும் தனது பழைய கதையைக் கூறியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை நாட்டை கூறுபோட்டு பிரிப்பதற்கு போடப்படும் அத்திவாரம். எனவே இந்த யோசனையை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் புலிகளின் தமிழ் ஈழக்கோரிக்கைக்கு அங்கீகாரம் கொடுத்ததாகிவிடும் என்று தென்னிலங்கை அரசியல் கட்சிகள் யாவும் வியாக்கியானம் செய்து சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பயபிராந்தியை ஏற்படுத்தி வருகின்றனர். எனவேதான் அரசாங்கமும் இந்த யோசனையை மட்டும் அடிப்படையாக வைத்து பேச்சை ஆரம்பிப்பதற்கு தயங்குகின்றது. குறிப்பாக கூறுவதனால் இவ்வாறான பயப்பீதியை ஜனாதிபதியே வேண்டுமென்று உருவாக்குகின்றார். அதில் எந்த சந்தேகத்திற்கும் இடமில்லை. 1994ம் ஆண்டு சந்திரிக்கா ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இனவாதம் நிறுவன மயப்பட்டு வந்திருக்கின்றது என பல அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருப்பதை இவ்விடத்தில் ஞாபகம் கொள்ள வேண்டும். வடகிழக்கில் பெரும் பகுதிகள் எங்கள் பரிபாலனத்தின் கீழேயே இருந்து வருகின்றன. எனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கஷ்ட நஷ்டங்களை போக்கி அவர்கள் மன நிம்மதியோடு வாழ்வதற்கு அவர்களின் மனிதாபிமான தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். எனவே தான் இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை கேட்டு நிற்கின்றோம் என்று புலிகள் பல தடவை அழுத்தம் திருத்தமாக கூறியிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் மனிதாபிமான தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பதனை ஓரிரு மாதங்களில் செய்துவிட முடியாது. அதற்கு நீண்டகாலம் எடுக்கும். எனவே தான் இந்த இடைக்கால நிருவாக அதிகாரத்தை கேட்டு நிற்கின்றோம் என்று விடுதலைப்புலிகள் தமது பக்க நியாயத்தை முன்வைத்துள்ளார்கள். தன்னாட்சி அதிகார சபை யோசனையின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள எல்லா அதிகாரங்களும் தரப்படவேண்டும் என்று நாங்கள் கோரவில்லை. பேச்சுவார்த்தையின் போது நெகிழ்ச்சித்தன்மையை காட்டுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றும் விடுதலைப் புலிகள் நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆனால் அரச தரப்பிலிருந்து பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான சமிஞ்ஞை எதுவும் இன்னமும் வெளியாகவில்லை. எனவேதான் பேச்சுவார்த்தை தொடர்ந்தும் ஸ்தம்பித நிலையிலேயே இருந்து வருகின்றது. சமாதான முன்னெடுப்புக்கள் இவ்வாறு இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் பொழுது விடுதலைப் புலிகள் பற்றி ஜனாதிபதியும் ஜனாதிபதியைப் பற்றி புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் பத்திரிகைகளுக்கு கூறி வரும் கருத்துக்கள் இரு சாராருக்கும் இடையில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்குப் பதில் நம்பிக்கையை சீர் குலைப்பதாகவே காணப்படுகின்றன.

> தமிழ் மக்களின் மனிதாபிமான தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பதனை ஓரிரு மாதங்களில் செய்துவிட முடியாது. அதற்கு நீண்டகாலம் எடுக்கும். எனவே தான் இந்த இடைக்கால நிருவாக அதிகாரத்தை கேட்டு நிற்கின்றோம் என்று விடுதலைப்புலிகள் தமது பக்க நியாயத்தை முன்வைத்துள்ளார்கள்.

தமிழ்ச்செல்வனைப் பொறுத்தவரை ஜனாதிபதி மீது தெரிவிக்கும் கருத்துக்கள் குற்றச்சாட்டுக்கள் என்பதற்கு அப்பால் அது யதார்த்தமானது என்றே கொள்ள வேண்டும். காலம் காலமாக புலிகள் மீது சிறீலங்கா அரசாங்கமும் அவ்வப்போது பதவி வகித்த ஜனாதிபதிகளும் வீண்பழி சுமத்தி தமது பக்கம் நியாயம் இருப்பதாகவே வெளிக்காட்டி வந்தனர். அதனையே சந்திரிக்காவும் தற்போது செய்து வருகின்றார். ஆனால் புலிகளைப் பொறுத்தவரை சிறீலங்கா அரசாங்கத்தின் மீது பழி போடுவதை விட தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை அங்கீகரிக்க மறுக்கின்றார்கள் என்றே கூறிவருகின்றனர். அத்துடன் அவ்வாறு மறுப்பதற்காகவும் தம்மை நியாயப்படுத்துவதற்காகவும் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை திரிபுபடுத்தி பொய் கூறி வருகின்றனர் எனவும் புலிகள் அவ்வப்போது சுட்டிக்காட்டி வருகின்றனர். அது குற்றச்சாட்டு அல்ல. எவ்வாறாயினும் சர்வதேச அரங்கில் சிறீலங்காவின் தற்போதைய அரசியல் திருகுதாளங்கள் நிதர்சனமாகி வெளிப்பட்டு நிற்கின்றன. ஆகவே எதிர்வரும் காலங்களில் சர்வதேச சமூகத்தின் சிறீலங்கா மீதான பார்வையிலும் விமர்சனங்களிலும் மாற்றங்கள் ஏற்படலாம். தற்போது அவ்வாறு ஏற்பட்டு வருகின்றன.

— கொழும்பில் இருந்து
ஊரோடி

# தாயக விடுதலைப் போரில் 17780 போராளிகள் வீரச்சாவு

## தமிழீழ மாவீரர் பணிமனை அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 27.11.1982ம் ஆண்டு தொடக்கம் 10.11.2004 வரை 17 ஆயிரத்து 780 போராளிகள் வீரச்சாவடைந்து மாவீரர்களாக விதைக்கப்பட்டுள்ளனர் என்று தமிழீழ மாவீரர் பணிமனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதில், `ஜெயசிக்குறு' படை நடவடிக்கையும் அதன் மீதான எதிர்த்தாக்குதல்களின் போதும் ஆகக் கூடியதாக 2146 போராளிகளும் `ஓயாத அலைகள்-3' நடவடிக்கையின் போது 1336 போராளிகளும் வீரச்சாவடைந்தனர் என்று மாவீரர் பணிமனையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




### மாவட்ட அளவிலான மாவீரர்கள் விவரங்கள்

யாழ். மாவட்டம் - 6533 போராளிகள்
(4802 ஆண்கள், 1731 பெண்கள்)
மட்டு. அம்பாறை மாவட்டங்கள் - 4582 போராளிகள்
. (4142 ஆண்கள், 440 பெண்கள்)
வன்னிப் பிராந்தியம் - 2535 போராளிகள்
(1766 ஆண்கள், 769 பெண்கள்)
திருமலை மாவட்டம் - 1489 போராளிகள்
(1328 ஆண்கள், 161 பெண்கள்)
முல்லைத்தீவு மாவட்டம் - 1300 போராளிகள்
(910 ஆண்கள், 390 பெண்கள்)
மன்னார் மாவட்டம் - 1042 போராளிகள்
(811 ஆண்கள், 231 பெண்கள்)
வெளி மாவட்டங்கள் - 299 போராளிகள்
(235 ஆண்கள் 64 பெண்கள்)

### கரும்புலிகள்

யாழ். மாவட்டம் – 140
- தரைக் கரும்புலிகள் - 31 (19 ஆண், 12 பெண்)
- கடற்கரும்புலிகள் - 109 (68 ஆண், 41 பெண்)

மட்டு. அம்பாறை மாவட்டங்கள் - 49
- தரைக் கரும்புலிகள் - 27 (ஆண் 25, பெண் 2)
- கடற்கரும்புலிகள் - 22 (22 ஆண்)



வன்னி மாவட்டம் - 25
- தரைக் கரும்புலிகள் - 8 (6 ஆண், 2 பெண்)
- கடற்கரும்புலிகள் - 17 (14 ஆண், 3 பெண்)

திருமலை மாவட்டம் - 17
- தரைக் கரும்புலிகள் - 4 (4 ஆண்)
- கடற் கரும்புலிகள் - 13 (10 ஆண், 3 பெண்)

முல்லைத்தீவு மாவட்டம் - 11
- தரைக் கரும்புலிகள் - 1 (1 பெண்)
- கடற்கரும்புலிகள் - 10 (8 ஆண், 2 பெண்)

மன்னார் மாவட்டம் - 15
- தரைக் கரும்புலிஸ் - 5 (4 ஆண், 1 பெண்)
- கடற்கரும்புலிகள் 10 (9 ஆண், 1 பெண்)

வெளிமாவட்டங்கள் - 06
- தரைக் கரும்புலிகள் - 3 (3 ஆண்)
- கடற் கரும்புலிகள் - 3 (2 ஆண், 1 பெண்)

எல்லைப் படை மாவீரர்கள் - 280 (275 ஆண்கள், 5 பெண்கள்)
`ஈரோஸ்' அமைப்பு மாவீரர்கள் - 286
பிற தனிக்குழுவைச் சேர்ந்தவர்கள் - 10

# நேரடியாகச் செய்யாமல் மறைமுகமாகச் செய்வதா?

தலையையே முழுமையாக நுழைக்க வியூகம் வகுத்து வரும் வேளையில், அந்தப்பிரபலமான விடுதலைப்புலி எதிர்ப்பாளரும் இந்தியாவின் பெயர்பெற்ற 'இந்து' ஆங்கில நாளேட்டின் ஆசிரியருமான ராம் அவர்கள் இப்படிக் கூறிவிட்டாரே..!

கொழும்பில் காமினி திசாநாயக்காவின் 10வது நினைவுப் பேருரையை ஆற்றிய ராம் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்துள்ளதால் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் இந்தியா தலையிட முடியாது என்று தெரிவித்துள்ளமையைத் தான் கூறுகிறேன்.

ஐயா, ஆழமாகத்தான் யோசித்திருக்கிறார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் மாற்றமேதும் இல்லை, இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கையிலும் மாற்றம் இல்லை வெறும் அரசியல் காரணங்களுக்காக இலங்கை விவகாரத்தில் இந்தியாவால் இந்த நிலையில் நேரடியாக தலையீடு செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளமையானது, நுட்பமாக அவதானித்தால் வேறோரு செய்தியையும் தருவதாகவே உள்ளது.

இந்தியா நேரடியாக தலையீடு செய்யாது. ஆனால் மறைமுகமாக தலையீடு செய்யலாம் என்பதே அதுவாகும்.

அதையே சிறீலங்கா அரசு விரும்புவதாகவும் தெரிகிறது.

அப்போதுதான், இந்தியாவுக்கு வாலையும் அமெரிக்காவுக்கு தலையையும் காட்டி சமாளிக்கும் 'விலாங்கு' தந்திரோபாயத்தை கடைப்பிடிக்க முடியும்!

இந்திய - சிறீலங்கா பாதுகாப்பு உடன்பாட்டைப் பயன்படுத்தி பலாலி விமானப் படைத்தளம் மீதான மேலாதிக்கத்தை பெறத் துடித்ததையும், இலங்கையில் விடுதலைப் புலிகளுடனான போரில் உயிரிழந்த இந்தியப் படையினருக்கு நினைவு மண்டபம் அமைக்க தூண்டிவருவதையும், சேது சமுத்திரத்திட்டத்தை அமுல் செய்ய தீவிரமாக இருப்பதையும், திருமலை துறைமுகப் பகுதிக்குள் எண்ணெய் களஞ்சியப் பாதுகாப்பு என்ற பெயரில் ஊடுருவி நிலை கொள்ள முயல்வதையும் ராஜீவ் காந்தி பெயரில் நெடுஞ்சாலை ஒன்றினை உருவாக்க நினைப்பதையும் பார்த்தால் இந்தியா மற்றொரு ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் வியூகத்தை மறைமுகமாக அமைத்து வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவின் இந்த ஊடுருவல்களுக்கெல்லாம் சிறீலங்கா இடம் கொடுக்குமாயின் சுப்பிரமணிய சுவாமி என்ற இந்திய அரசியல் கோமாளியின் கனவு நனவானாலும் ஆகலாம்.

அதாவது சிறீலங்காவை (தமிழீழத்தையல்ல) இந்தியா தனது மாநிலங்களில் ஒன்றாகவும் உரிமை கோரமுடியும். அந்தளவுக்கு இத்தகைய ஊடுருவல்கள் இலங்கையின் இறைமையை இழக்க வைத்துவிடும் அபாயம் உள்ளது.

பேரினவாத தேசியவாதிகளால் சிறீலங்காவை காப்பாற்ற முடியுமா? சந்தேகம் தான்!

– செங்குட்டுவன்

# மட்டு. வீதி விபத்தில் போராளி மரணம்

(22.11.04)

மட்டக்களப்பு கொத்தியாவலையில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் லெப். மலைஜெகன் எனப்படும் சத்தியநாதன் இன்பராஜா வீரச்?சாவடைந்தார் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது.

இவரது வித்துடல் இன்று திங்கட்கிழமை விடுதலைப் புலிகளின் மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டு அவரது சொந்த இடமான பழுகாமத்திற்கு கொண்டு செல்லப்படும். நாளை காலை 10.00 மணிக்கு தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இடைக்கால யோசனையின் அடிப்படையிலே பேச்சுகள் நடைபெற வேண்டும்

- கஜேந்திரகுமார்

(22.11.04)

சிறீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை இருக்க வேண்டும் என்று சிறீலங்கா நாடாளுமன்றத்திற்கான தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார். சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெற்ற நிலையான தீர்விற்கான அதிகார பரவலாக்கம் என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்வதில்லை என்று குற்றசாட்டு எழுந்துள்ளது. இது உண்மைக்குப் புறம்பானது. அரசாங்கம் தனது நிலைப்பாட்டில சிறிதளவு கூட விட்டுக்கொடுக்க முன்வராத நிலையே தற்போது காணப்படுகின்றது. இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் புதியவை அல்ல. ஏற்கனவே முன்மொழியப்பட்ட திட்டமே இது. ஆனாலும் சிறீலங்கா அரசாங்கம் இதன் அன்படையில் பேசுவதற்கு இதுவரை ஒப்புதல் தெரிவிக்காமல் இருக்கிறது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.


சுஜி ஜுவல்லரி SUJI JEWELLERY



சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004

தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜிஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்கநகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02

# சிறீலங்கா இராணுவ புலனாய்வு பிரிவும்...

(05ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மை உதாரணத்தை கவனிப்போம்.

தமிழ் விவகாரங்கள் தொடர்பாக உலகிற்கு தகவல்களை வழங்கி வரும் தமிழ் நெட் (www.TamilNet.com) கணினி தகவலகத்தை எம்.ஐ.சியினர் நாளாந்தம் ஆர்வத்துடன் அணுகுகின்றனர். இதுபோன்று அனைத்து ஊடக வளங்களையும் தமது புலனாய்வு நோக்கங்களுக்காக பிரயோகித்துக் கொள்கின்றனர். மேலும் அரசின் பாதுகாப்பை எப்போதும் விழிப்பு நிலையில் வைத்திருப்பதற்காக புலிகள் பற்றிய தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கி பிரசாரப்படுத்துகின்றது. இந்த உத்திக்கான உதாரணங்களை இங்கு பார்ப்போம்.

அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவில் புலிகளின் ஊளவாளிகள் என்கின்ற தலைப்பில் 06.11.2004ம் திகதி தினக்குரல் செய்திகளை விபரித்திருந்தது. இன்னொரு பத்திரிகையில் விடுதலைப் புலிகள் எதிர்கால நடவடிக்கைக்காக இராணுவ உபகரணங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட அதிசக்தி வாய்ந்த ஆயுதங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளதாக இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு செய்யும் புல்னாய்வு ஒழுங்குகளை எம்.ஐ.சியினர் மிகத் தீவிரமாக, சுறுசுறுப்போடு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நோக்கத்தை எய்வதற்காக அவர்கள் களத்தில் குதித்தும் உள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கருணா குழுவினரை பராமரித்தும், தங்குமிட வசதிகளை செய்து கொடுத்தும், தேவைகளுக்கு ஏற்ப உதவிகளை வழங்கியும் வருகின்றனர். இதற்கான வலிமையான ஆதரங்களை ஊடகங்கள் அம்பலப்படுத்தியும் வருகின்றனர். கருணா குழுவினரினுள் புலிகளின் புலனாய்வு புகுந்து துவசம் செய்ய அச்சத்திற்கும் விரக்திக்கும் இடையே ஊசலாடும் கருணா குழுவினருக்கு எம்.ஐ.சியினர் செயலூக்கம் கொடுத்து மீளவும் இயங்க வைக்க முயல்கின்றனர். இம்முயற்சியில் தம் அணைத்து சக்திகளையும் பிரயோகிக்கின்னறனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமய (JHU) வின் தலைமையகத்துடன் உறவை ஏற்படுத்தினர். அச்சிங்கள கட்சியின் ஒத்துழைப்போடு கருணா குழுவைச் சேர்ந்த 14 நபர்களை பொலநறுவ போதிறுக்கமா பிரதம

> **தமிழ், முஸ்லீம் மக்களிடையேயான உறவு நிலை ஆபத்தான விளிம்பில் இருந்த காலச்சூழலில் தான் ஓட்டமாவடியில் முஸ்லிம் இளைஞர் கொல்லப்பட்டு, அவரது சடலம் மீரோவோடை தமிழ் கிராமத்தில் அநாதரவாகப் போடப்பட்டது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவப் புலனாய்வு கப்டன் ஒருவரும், முச்சக்கரவண்டிச் சாரதியும் வாழைச்சேனை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். என்கிற செய்தியை ஊடகங்கள் உறுதித்தன்மையோடு வெளியிட்டிந்தன. இந்தச் சூழ்ச்சிகரமான திட்டமானது தமிழ், முஸ்லிம்கள் இடையே கலவரங்களை உருவாக்கும் நயவஞ்சக நோக்கமாக இருந்தது. இது வெளிச்சத்திற்கு வந்ததனால் எம்.ஐ.சியினரின் முயற்சி தோல்வியில் முடிந்தது.**

தெரியவந்துள்ளதாக தகவல்களை வெளியிட்டிருந்தது.

மேலே எடுத்துச் சொல்லப்பட்ட இரு உபகரங்களும் அரசினது பாதுகாப்பு விடயங்களுக்கான விழிப்புணர்வு பிரசாங்களுக்காக பயன்படுத்தி வரும் புலனாய்வு நுட்பம், அப்படியே அபட்டமாக பிரதிபலிக்கின்றன. இது அரசையும், நாட்டு மக்களையும் எப்போது விழிப்பு நிலைக்குள் வைத்திருக்கும் உத்தியாக கையாளப்படுகின்றது. இது போன்ற புலனாய்வு தந்திரங்களை, உத்திகளை எம்.ஐ.சியினர் தொடர்ந்தும் கையாண்டு வருவதுடன், நவீன காலத்திற்கு ஏற்பவும் தமது புலானாய்வு வியூகங்களை அமைத்து புலனாய்வு அரங்கில் சாகசங்கள் அதிகம் கிழக்கில் நிகழ்த்தப்பட்டுவருகின்றன.

கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவு நிலையை சீர்குலைத்து நிரந்தரமான உறவுப்பிளவை இரு சமூகத்தினிரிடையேயும் எற்படுத்தி அதில் இலாபம் பெறும் நோக்கில் எம்.ஐ.சியினர் நீண்டகாலமாக திரைமறைவில் செயற்பட்டவந்துள்ளனர் வருகின்றனர். இரு சமூகத்தினரிடையே உருவாகயிருக்கும் முரண்பாடுகள் தணியாது பராமரித்துவருவதிலும், அம் முரணப்பாடுகளை மேலும் அதிகப்படுத்தும் முயற்சியிலும் அவர்கள் தீவிரத்துடன் இயங்குகின்ற சான்றுகள் பல இருக்கின்றன. அவற்றில் மிக அண்மைக்கால உண்மை உதாரணத்தை இங்கு கவனிப்போம்

தமிழ், முஸ்லீம் மக்களிடையேயான உறவு நிலை ஆபத்தான விளிம்பில் இருந்த காலச்சூழலில் தான் ஓட்டமாவடியில் முஸ்லிம் இளைஞர் கொல்லப்பட்டு, அவரது சடலம் மீரோவோடை தமிழ் கிராமத்தில் அநாதரவாகப் போடப்பட்டது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவப் புலனாய்வு கப்டன் ஒருவரும், முச்சக்கரவண்டிச் சாரதியும் வாழைச்சேனை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். என்கிற செய்தியை ஊடகங்கள் உறுதித்தன்மையோடு வெளியிட்டிந்தன. இந்தச் சூழ்ச்சிகரமான திட்டமானது தமிழ், முஸ்லிம்கள் இடையே கலவரங்களை உருவாக்கும் நயவஞ்சக நோக்கமாக இருந்தது. இது வெளிச்சத்திற்கு வந்ததனால் எம்.ஐ.சியினரின் முயற்சி தோல்வியில் முடிந்தது. எது எப்படி இருப்பினும் அவர்கள் கடந்தகாலங்களில் இந்தப் புலனாய்வுத்தந்திரத்தில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர்.

அவர்கள் தமிழர், முஸ்லிம் சமுகத் திணிடையேயான உறவுப் பிளவினால் ஏற்பட்டுள்ள விரிசலினை உச்சமாகப் பயன்படுத்தி வரும்போது; அவர்களுக்கு இன்னொரு சாதகமான வழி ஒன்றும் திறந்துள்ளது. அது கருணாவின் தமிழதேசிய துரோகத்தனமாகும். தமிழ் தேசியம் என்ற வாளை, கருணாவின் பிரதேசவாதம் என்றே உறைக்குள் போட்டு அதனைச் செயலிழக்கச் பிக்குவிடம் அனுப்பிவைத்தனர். இங்கு இந்தக் குழுவினர் தங்கியிருந்த காலப்பகுதியில் தான் புலிகள் சிலரையும், புலிகளின் ஆதரவாளர்கள் சிலரையும் ஊடகவியவலாளர் ஜி.நடேசன், கல்விமான் தம்பிஐயா ஆகியோரையும் கொலை செய்யதனர். இக்கொலைகளை செய்துவரும் போதே கருணா குழுவினர் தாக்குதலுக்குள்ளாகினார். இதனை அடுத்து பொலநறுவ போதிறுக்கமா பிரதம பிக்கு எம்.ஐ.சி யினரின் இரகசிய புலனாய்வு நகர்வுகள் பற்றிய தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கினார். இதுவே அவர்களின் கூட்டு மறைமுக நடவடிக்கைகள் பகிரங்க அரங்கிற்கு வரக்காரணமாக அமைந்தது.

இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இது போன்ற மறைமுக நடவடிக்கைகளை போர்ச்சூழலிலும் சரி, சமாதானச் சூழலிலும் சரி மேற்கொண்டு தமிழர் உரிமைப் போருக்கு பாரிய சேதங்களை ஏற்படுத்துவதில் முனைப்போடு செயலாற்றுகின்றனர். 21.12.2002 அன்று எம்.ஐ.சி யினர் உயர் மறைமுக நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள இருந்த போது அந்த இரகசியம் அம்பலமாகியது.

கண்டியிலுள்ள அத்துறுகிரியவில் அமைந்துள்ள எம்.ஐ.சியினரின் மறைவான தளத்தை இராணுவப் பொலிசாரும் (CORPS CEYLON MILITARY POLICE - CCMP) கண்டி விசேட பொலிசாரும் இணைந்து முற்றுகையிட்டதனால் அது பகிரங்கமாகியது. அதாவது கிணறு தோண்டப்போய் பூதம் கிளம்பிய கதையாக முடிந்தது. இந்த மறைவான தளம் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் வார்த்தையில் INT CELL எனப்படும். தமிழர் தாயகப் பகுதிகளில் இயங்கி வந்த எம்.ஐ.சியினரின் ஆழ ஊடுருவி தாக்கும் அணியினரின் பின்னணித் தளமாக இந்த INT CELL விளங்கியுள்ளது. இந்த மறைவான தளம் போன்று இன்னும் சில அங்கொன்றும் இங்கொன்றுமாக இயங்கி வருகின்றன.

இராணுவப் புலனாய்வு பிரிவின் ஊடுருவல் தாக்குதல்கள், மனித வேட்டைகள், தடம் தொடர்தல் முரண்பாடுகளை கையாளுதல், பிரித்தாளும் தந்திரோபாயங்களை பிரயோகித்தல், இரகசிய புலனாய்வு பணிகளை மேற்கொள்ளுதல் என இது வரையிலும் பார்க்கப்பட்ட விடயங்கள் ஓரளவுதான். இதற்கு அப்பாலும் அதன் புலனாய்வு வீச்சின் எல்லை பரந்தது. எம்.ஐ.சி சனாதிபதி பாதுகாப்பு பிரிவிலுள்ள (PSD) பாதுகாப்புக் குறைபாடுகள் குறித்தும் அலரிமாளிகையில் பொலிசார் கடமை குறித்தும், தமது மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பணிகளையும் செய்கின்றது.

அவ்வாறான பணியில் இரு எம்.ஐ.சி யைச் சேர்ந்த உளவாளிகள் பிச்சைக்காரன் போலவும், குடை திருத்துபவர் போலவும் மாறு வேடங்களில் அலரிமாளிகைப் பகுதியில் ஈடுபட்டிருந்த வேளையில் சந்தேகத்தின் பேரில் இருவரும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட செய்தியினை திவயின பத்திரிகை வெளியிட்டிருந்தது. இராணுவப் புலனாய்வுப் பிரிவு சிறீலங்கா அரசினது புலனாய்வு பிரிவினுள் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு பிரிவாக செயலாற்றி வருகின்றது. அது புலனாய்வு அரங்கை பலமான நிலையில் வைத்திருக்கும் புலனாய்வு வியூகங்களை வகுப்பதிலேயே போதிய அக்கறையை செலுத்துகின்றது. ஆனாலும் பிஸ்டல் குழுவினர் எம்.ஐ.சியின் புலனாய்வு அரங்கை உலுப்பியெடுத்துவருகின்றனர்.

எம்.ஐ.சியினரின் முக்கிய புலனாய்வாளரான புளொட் மோகன் தொடக்கம் புளொட் மோகனின் நெருங்கிய சகாவான தயாளகுமார் வரை பலர் பிஸ்டல் குழுவினரின் இலக்கிற்கு பலியாகிபோயுள்ளனர். இவ்வாறாக கொல்லப்பட்டவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அரசு அலட்சியம் செய்துள்ள குற்றச்சாட்டுக்களை சிங்கள இனவாத ஊடகங்கள் செய்தியாக வெளியிட்டுமுள்ளன. அதில் புளொட் மோகன் தனது பாதுகாப்பிற்காக துப்பாக்கி ஒன்றைப்பாவிக்க இராணுவப் புலனாய்வு பணியாளர் ஊடாக பாதுகாப்பு அமைச்சரிடம் அனுமதி கோரியிருந்தார். ஆனால், இது தொடர்பாக புளோட் மோகனுக்கு இறந்த தருணம் வரையும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என இராணுவ புலனாய்வு பிரிவு கூறியதாக லக்பிய திஸ்ஸ ரவீந்திர பெரேரா செய்தியொன்றை வெளியிட்டிருந்தார்.


இச் செய்தி சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து இயங்கும் தமிழ் தேசியத் துரோகிகள் அனைவருக்கும் உறைப்பான பாடத்தையே புகட்டி நிற்கின்றது. துரோகம் செய்யும் துரோகிகள் எவருமே பாதுகாப்பாக, அமைதியாக வாழ முடியாது அவர்களை வரலாறும் தண்டிக்கவே செய்கின்றது.

**- நீலன்**

நன்றி – ஈழநாதம்

## மரண அறிவித்தலும் 31ம் நாள் நினைவஞ்சலியும்

மலர்வு 11.04.1951



உதிர்வு 27.10.2004

திரு பொன்னுத்துரை வேணுகோபாலவாணிதாசன்.
(வேணுகோபால்)

***தீவுப்பகுதி (கல்விப் பணிப்பாளர்),***
***முன்னாள் ஹாட்லிக் கல்லூரியின் அதிபர்.***

மடத்தடி அல்வாய் கிழக்கைச் சேர்ந்த திரு வேணுகோபால் அவர்கள் 27.10.2004 அன்று அல்வாயில் நடைபெற்ற வாகன விபத்தில் அகாலமரணமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை (அதிபர்), செல்லம்மா(ஆசிரியை) அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சதாசிவம் (பொலிஸ் உத்தியோகத்தர்), பத்மாவதி அவர்களின் அன்பு மருமகனும், சற்குணதிலகம்(ஆசிரியை வட இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், கோபிகா, ஜதுஜா, யுவஸ்திகா அவர்களின் பாசமிகு அப்பாவும், அருந்ததி, செல்வதி அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராமநாதன் (காசாளர்) காலஞ்சென்ற சபாரத்தினம்(உத்தியோகத்தர் வவுனியா மருத்துவமனை) சற்குணராஜா, சற்குணவதி, சற்குணராணி, சற்குணேஸ்வரி, சற்குணநாதன், சற்குணேந்திரன், சற்குணலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் இரவீந்திரன், இராமராவ், நளாயினி, அனுஷியா, கஸ்தூரி, அஜந்தன் ஆகியோரின் தாய் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 28.10.2004 அல்வாய் கிழக்கில் நடைபெற்றது.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரிகைகள் 26.11.2004 அன்று அவ்வாய் கிழக்கில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொடர்புகட்கு: இரவீந்திரன் (ஜேர்மனி) - 00492571-52125

# சமாதான முயற்சிகள் வலுப்பெற யுத்த நிறுத்த உடன்பாட்டில் மாற்றம் செய்வது அவசியம்

## – தென்னாபிரிக்கப் பேராசிரியர்

(21.11.04)

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கு, யுத்தநிறுத்த ஒப்பந்தம் தற்போதைய நிலைக்குப் பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட வேண்டுமென, சர்வதேச சமாதான ஆலோசகர் பேராசிரியர் நிக்கலஸ் ஹேசம் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் சட்ட ஆலோசகராக விளங்கியவரும் பேராசிரியருமான ஹேசம், இலங்கையில் யுத்த நிறுத்தத்தை பலப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாக வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, யுத்த நிறுத்த உடன்படிக்கை மற்றும் அதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு அமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். தற்போதைய யுத்த நிறுத்த உடன்படிக்கை இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியாகும். இது அரசியல் ரீதியில் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு இதுவொரு முக்கிய விடயமாகும். கொலைகள் போன்ற பிரச்சினைகளைக் கையாள்வதற்குத் தற்போதைய யுத்தநிறுத்த உடன்படிக்கையில் விதிமுறைகள் ஏதும் இல்லை. எனவே, இதற்கான ஓர் அமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். மக்களின் அர்ப்பணிப்பே யுத்த நிறுத்த உடன்படிக்கையும், சமாதானமும் இவ்வளவு காலமும் நீடித்துச் செல்வதற்கு காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். ஹேசம் சூடான், புருண்டி, நேபாளம் ஆகிய நாடுகளில் சமாதான ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்கா இராணுவ உயர்மட்டம் யாழ்.குடாவுக்கு திடீர் விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்தது

(21.11.04)

சிறீலங்காவின் கூட்டுப்படைத் தளபதியாகப் பொறுப் பேற்றுக் கொண்ட பின்னர் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி இராணுவ மற்றும் விமானப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் சகிதமாக யாழ்.குடாநாட்டுக்கு கடந்த புதன்கிழமை நேரில் விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்ந்துள்ளார். இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட, விமானப் படைத் தளபதி எயர் மார்சல் டொனால்ட் பெரேரா, பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் புடை சூழவே தயா சந்தகிரி குடாநாட்டுக்கு விஜயம் செய்ததாகத் தெரியவருகின்றது.

பலாலியில் இவர்களை யாழ் குடாவிற்கான சிறீலங்கா கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் வரவேற்றார். இந்த உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழு முகமாலை முன்னரங்க நிலைகள், சோதனைச் சாவடிகளுக்கும் விஜயம் செய்தது. இதன்போது முன்னணி நிலைகளில் நிலைகொண்டிருக்கும் படையினருடன் கலந்துரையாடி அவர்களை உற்சாகம் ஊட்டிய இராணுவ அதிகாரிகள் குழு, மேலும் பல பாதுகாப்புச் சம்பந்தமான நிகழ்வுகளிலும் கலந்துகொண்டது. இவர்கள் முகமாலை சோதனைச்சாவடியைப் பார்வையிடுவதற்காக வந்ததையடுத்து ஏ-9 வீதியூடாகச் சென்ற வாகனங்கள் சுமார் ஒரு மணிநேரம் மிருசுவில் பகுதியில் தடுத்துவைக்கப்பட்டிருந்தன.

# கருணாவின் ஆசை தோல்வியடைந்தது

## – இந்தியக் கேணல் –

(21.11.04)

சிறீலங்கா சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அக்கறையுள்ளோரால் பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட விடயமான கருணாவின் அரசியற் பிரவேசம் என்பது தோல்வியைத் தழுவி வருவதாக இந்திய அமைதிப்படையின் முன்னாள் புலனாய்வு நடவடிக்கைகளிற்கான தலைமையதிகாரி கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

ஆசியாவின் பிரபல்யமான ஆய்வு மையமொன்றிற்கான தனது ஆய்வறிக்கையில் மேற்படி கருத்தை வலியுறுத்தி பல ஆதாரச் சான்றுகளைத் தெரிவித்துள்ள கேணல் ஹரிகரன், கருணா புதுக்கட்சி தொடங்குவதற்கான சான்றுகள் அரிதாகவே உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில், ஈ.பி.டி.பி.தற்போதே இராணுவத்துடன் சேர்ந்து வட கிழக்கில் இயங்கும் ஆயுதக்குழுவாகும். இவ்வாறான ஆயுதக் குழுக்களிற்கு ஏற்படும் மரணங்கள், `இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஒருவர் கொல்லப்பட்டார்'என அல்லது `இராணுவத்தின் முகவர் கொல்லப்பட்டார்', என்றுமே இலங்கையில் நோக்கப்படுகிறது. கருணாவினை ஆதரிப்போர் மரணங்களும் மேற்கண்டவாறே நோக்கப்படும்.

கிழக்கில் கல்முனை வரையான கரையோரங்களையும் உள்நிலங்களையும் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். தொப்பிக்கல மற்றும் அரலங்கன்வில மகா ஓயா பகுதிகளிலிருந்தே கருணாவிற்கு ஆதரவானோர் செயற்படுகின்றனர். இவ்வாறான நிலையில் கருணா புதுக்கட்சி தொடங்குவது பற்றியும் அரசியலிற்குள் பிரவேசிப்பது பற்றியும் வெளிவந்துள்ள செய்திகள் கருணா தோல்வியைத் தழுவி வருவதையே காட்டுகிறது.

கருணா அரசியலிற்குள் பிரவேசிக்கும் தகுதிகளையோ வசீகரத்தையோ கொண்டிருக்கவில்லை. கெரில்லா போராளிக்கான தகுதியே கருணாவிற்கான பிரபல்யத்தைக் கொடுத்திருந்தது. கருணா விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிவதற்காகக் கையாண்ட விடயங்கள், மக்கள் மத்தியில் விலைபோகும் விடயங்களல்ல.

பிரதேசவாதத்தை ஏற்படுத்துவது மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவரைப் பற்றிய அவதூறான பிரசாரத்தை மேற்கொள்வது என்று கருணா கையாண்ட இரண்டு விடயங்களும் மக்களிடம் செல்லுபடியாகாத, கருணாவிற்கு பாதகமான விடயங்களாக அமைந்துள்ளன. விடுதலைப் புலிகளே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒருங்கிணைத்து அதனை உலகமயப்படுத்தினார்கள் என்பதே யதார்த்தமாக இருக்கிறது.

பிரபாகரனின் குரலாக அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச் செல்வன் போன்றோர் சர்வதேச நாடுகளின் தலைவர்களையும், இராஜதந்திரிகளையும் சந்தித்து உறவுகளை வலுப்படுத்தியுள்ளது போன்ற நிலையை இதற்கான உதாரணமாகக் கொள்ளலாம்.

'இவ்வளவு நாளும் நடைபெற்றது விடுதலைப் போராட்டமேயல்ல` எனக் கருணா கூறுவதும் பிரபாகரனிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்க போராடப் போவதாகவும் கருணா கூறுவதும் தமிழ் மக்களிடம் செல்லுபடியாகாது. கிழக்கு மக்களே கருணாவை தங்களது போராளியாகப் பார்க்காது, அவரைப் பயத்துடனும் கிலியுடனும் தற்போது பார்ப்பதே இதற்கு உதாரணமாகும்.

அத்தோடு ஆயுதங்களை நம்பியிருப்பது மட்டுமே கருணாவுக்கு உள்ள தெரிவு. அவர் அதைவிடுத்து அரசியல்வாதியாக மாறி மக்களின் ஆதரவை பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது.பிரதேசவாதத்தை வைத்து கிழக்கில் தனது அரசியலாசையை கருணா வளர்க்க முயன்றால், அதனை ஆயுதபாணியாக இருந்து கொண்டே செய்யலாம். இது கருணாவின் ஆசையை இரட்டிப்புச் சிக்கலாக்கும் விடயமாகும்.

கருணா அரசியல் தலைமையை அடைய முடியாததற்கு, தமிழர்களினது ஆதரவை பெற முடியாமையும் சிறீலங்காவின் பெரும்பான்மை அரசியற் கட்சிகளினதும் ஒத்துழைப்பை அல்லது நேரடி ஆதரவைப் பெற முடியாத நிலையே காரணமாகும். இந்நிலையிலேயே ஈ.என்.டி.எல்.எப். என்ற, தமிழ் மக்களிடம் ஆதரவில்லாத ஒரு அமைப்பின் மூலமாகப் பிரவேசிக்க முயன்றுள்ளார்.

அத்தோடு கிழக்கை எடுத்துக் கொண்டால் முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவ்து கடினமான விடயமாகும். முஸ்லிம் கட்சிகளை எடுத்துக் கொண்டால் கூட, சமாதானப் பேச்சுக்களில் தங்களின் பங்கைப் பற்றியே அக்கறை கொண்டுள்ள இந்நேரத்தில் முஸ்லிம் கட்சிகள் எதுவும் கருணாவிற்கான ஆதரவைத் தெரிவித்து புலிகளைப் பகைக்க மாட்டாது.

நிதி வளத்தைத் தொடர்ச்சியாகப் பெறுதல் மற்றும் அரசியற்கட்சிக்கான படிமுறைகளை வடிவமைக்கும் வல்லமை கருணாவிடம் இல்லை. ஆயுதங்களைக் கைவிட முடியாத ஒருவராகவே கருணா இருக்க வேண்டிய நிலையை விடுதலைப் புலிகள் அவருக்கு ஏற்படுத்தியுள்ளனர். இந்நிலையில் கருணா தோல்வியையே நோக்கிச் செல்வதுடன் கருணாவின் பிரச்சினைக்கும், விடுதலைப் புலிகள் தங்களின் துரோகிகளிற்கு `இறுதி முடிவு எடுக்கும்' நிலையே சாத்தியப்படலாம். இவ்வாறு கேணல் ஹரிகரன் தனது ஆய்வில் தெரிவித்துள்ளார்.

# தேசியத் தலைவருக்கு வாழ்த்து, கேடயம் தமிழ்ச்செல்வனிடம் கையளிப்பு



தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் 50வது பிறந்த நாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும், யாழ். மத்திய கல்லூரி சமூகத்தினரும் தேசிய தலைவருக்கான வாழ்த்துச் செய்திகள் அடங்கிய கேடயத்தினை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்தனர். இந்த நிகழ்வு கடந்த 17ம் திகதி 11 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியற்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றிய பிரதிநிதி அடங்கிய 30ற்கு மேற்பட்டோரும், யாழ். மத்திய கல்லூரி மாணவர்குழுவினரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அட அப்படியா..?!

இந்தியாவுடன் சிறீலங்கா அரசாங்கம் செய்து கொள்ளப் போகும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு- இனப் பிரச்சினை, இராணுவத் தீர்வுக்குப் பயன்படுத்தப்படுமென விடுதலைப் புலிகள் அஞ்சத் தேவையில்லை என்று, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். அகில இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே சந்திரிகா இவ்வாறு கூறியிருக்கின்றரார்.

தனது பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஏனைய நாடுகளுடன் சிறீலங்கா அரசாங்கம் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கையைப் போன்றே, இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடும் இருக்கும். இதனை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வுக்காகப் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிடவில்லை என்றும் சந்திரிகா மேலும் குறிப்பிட்டுள்ள்ளார்.

# போராளி சுட்டுக் கொலை

(21.11.04)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள கண்ணன் கிராமத்தில் விடுதலைப் புலிகளின் போராளியான வர்ணரூபன் எனப்படும் மகேஸ்வரன் றொசான்குமார் கண்ணன் கிராமம் முருகன்கோவில் வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு, எமது போராளி வர்ணரூபன் எனப்படும் மகேஸ்வரன் றொசான்குமார் வாழைச்சேனை பேத்தாழை கிராமத்தில் வைத்து நேற்றிரவு 9.45 மணியளவில் இனந் தெரியாதவர்களின் கைத்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரச்சாவை தழுவிக் கொண்டுள்ளார். இச்சம்பவம் அரசின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

எமது போராளிகளாகிய சேனாதிராஜா, பாவா, யோகா ஆகியோர் அரசியல் வேலைத் திட்டத்தை அரச கட்டுப்பாட்டு பிரதேசத்தில் மேற்கொண்டபோது இனந் தெரியாதவர்களினால் சுடப்பட்டு வீரச்சாவை தழுவிக் கொண்டனர். இச்சம்பவங்கள் பாதுகாப்பு படைத் தரப்பினரின் பூரண கட்டுப்பாட்டு பிரதேசத்தில் நடைபெற்றுள்ளதால் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தோம்.

இது சம்பந்தமாக எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் அரச பாதுகாப்பு படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்படவில்லை என்பது நன்கு தெரியவருகின்றது. இச்சம்பவம் பற்றி இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு தெரிவித்துள்ளோம்.

# செய்தித் துளிகள்

▸▸ மட்டக்களப்பு கொண்டையன் கேணியில் 49 வயதுடைய கிருஸ்ண பிள்ளை தணிகாசலம் என்ற குடும்பஸ்தர் அவரது வீட்டில் வைத்து கடந்த 16ம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். யுவானந்தன் என அழைக்கப்படும் ஒருவரே இவரது வீட்டிற்கு சென்று தொலைக்காட்சி செய்தி பார்த்துக் கொண்டிருந்த நபரின் தலையில் ரி-56 ரக துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

▸▸ மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தின்மீது 18ம் திகதி அதிகாலை கைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின்போது அலுவலகத்திலிருந்த எவருக்கும் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படவில்லை. இருப்பினும் அலுவலக கட்டடம் சிறு சேதத்திற்குள்ளாகியுள்ளது. இச் சம்பவம் குறித்து இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

▸▸ மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா படையின் உயரதிகாரிகளுக்குமிடையில் வவுணதீவு யுத்த சூனிய பிரதேசத்தில் 20ம் திகதி சனிக்கிழமை இடம்பெறவிருந்த மாதாந்த சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பினரினதும் வேண்டுகோள் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாகவே இச் சந்திப்பு இரத்து செய்யப்பட்டுள்ளதாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

▸▸ மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் படகுகளைத் தடுப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று கடந்த வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசத் தலைமையகத்தில் அதன் தலைவர் பீ.சூசையப்பு துரம் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த ஒன்பது உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

▸▸ பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட சிறீலங்கா அமைச்சரவை பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த மூவரை கறுவாக்காட்டு பொலிசார் கைது செய்துள்ளனர். உத்தியோகபூர்வ துப்பாக்கிகளை இம் மூவரும் பயன்படுத்தி கொள்ளைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

▸▸ ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது குண்டுதாரிக்கு உதவினார் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சத்தியலீலா சிவகுமாரி என்ற பெண்ணின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

▸▸ மட்டு, காத்தான்குடியில் மௌலானா கபுறடி இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் அடித்து நொருக்கப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டுள்ளது. ஒரு நூற்றாண்டிற்கு மேல் பழமை வாய்ந்த மௌலானா கபுறடியில் 5 கபுறுக்கள் (கல்லறைகள்) வைக்கப்பட்டுள்ளன. இஸ்லாமியரில் ஒரு பகுதியினர் இந்த கபுறு வழிபாட்டை ஏற்றுக் கொண்டாலும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் இதனை முற்றாக நிராகரிக்கிறார்கள். கடந்த மாதம் இஸ்லாமிய மதக் கோட்பாடுகள் தொடர்பாக இப் பிரதேசத்தில் வன்முறைகள் வெடித்தன. இவ்விடயத்தில் சுமூகமான தீர்வு காணப்பட்டு அமைதி நிலவி வந்தது. இப்படியான சூழ்நிலையில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் இந்தக் கபுறடி கட்டடம் அடித்து நொருக்கி சேதமாக்கப்பட்டுள்ளது.

▸▸ வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து கைத்தொலைபேசிகள், மற்றும் கத்திகள் என்பவை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட தேடுதல் ஒன்றின் போது இவை மீட்கப்பட்டதாக தெரிவித்த சிறைச்சாலை அதிகாரி, இவை எவ்வாறு சிறைச்சாலைக்குள் கொண்டு செல்லப்பட்டன என்பது குறித்து தீவிர விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

▸▸ எதிர்வரும் வெள்ளிக்கிழமை 26ம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் தமிழ் ஊடக அறிவியற் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு வைபவம் இடம்பெறவுள்ளது. ஊடக அறிவியலை தமிழ் பேசும் மக்களிடேயே பரவலாக அறிமுகப்படுத்தி தமிழ் ஊடகத்துறையில் வள்ர்ச்சியையும் உயர் நியமத்தையும் கொண்டு வருவதே இக்கல்லூரியின் முக்கிய நோக்கமாக அமையும் என அதன் நிறுவனர்கள் தெரிவித்துள்ளனர்.

▸▸ அம்பாறை - கண்டி வீதி வக்கியல்லவில் 21ம் திகதி மாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 2 பெண்கள் 2 குழந்தைகள் உட்பட 7 பேர் பலியானார்கள். அம்பாறையிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற வான் ஒன்று பாதையை விட்டு விலகி நீரோடைக்குள் விழுந்தமையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் மேலும் இருவர் காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

# மீண்டும் இரு இராணுவ புலனாய்வாளர்களை சிறீலங்கா இழந்தது

(21.11.04)

பொலன்நறுவை கதுறுவெல தொடருந்துக் கடவை அருகே கடந்த வியாழக்கிழமை பிற்பகல் சிறீலங்கா இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த ஒருவரும், உளவாளியொருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். தொடருந்துக் கடவை அருகே இவ்விருவரும் நடந்து சென்று கொண்டிருந்த போது, எதிர்த்திசையிலிருந்து நடந்து வந்த இருவர், இவ்விருவரையும் கைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தில் இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் அஜித் தஸநாயக்க (வசந்த) என்பவர் அந்த இடத்திலே உயிரிழக்க, படுகாயமடைந்த நிலையிலிருந்த இராசநாயகம் பிரபாகரன் என்பவர் பொலநறுவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். கதுறுவெல பகுதியிலுள்ள படை முகாமிலிருந்து இவர்கள் சென்று கொண்டிருந்த போதே பிற்பகல் 2.15 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது.



விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவே இத்தாக்குதலை நடத்தியதாக பொலநறுவைப் பொலிசார் வழமைபோல் தெரிவித்துள்ளனர். சம்பவத்தையடுத்து, அப் பகுதிக்கு விரைந்து வந்த பொலிசாரும் படையினரும் தேடுதல்களை நடத்திய போதும் துப்பாக்கி நபர்கள் தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறீலங்கா தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில், மின்னேரியா இராணுவ முகாமின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் அஜித் தஸநாயக்கவும் பொது மகனான இராசநாயகம் பிரபாகரனும் நேற்று பிற்பகல் மோட்டார் சைக்கிளொன்றில் கதுறுவெல நகருக்கு வந்திருந்தனர். தொலைபேசிக் கட்டணத்தை செலுத்த வந்த இவர்கள் மீது கைத் துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் மிக அருகிலிருந்து இருவர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த லான்ஸ் கோப்ரல் தஸநாயக்க அந்த இடத்திலேயே உயிரிழக்க, மோட்டார் சைக்கிளின் பின்புறமிருந்து வந்த பிரபாகரன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையில் உயிரிழந்தார்.

இதேவேளை, இக்கொலைகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 8 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிக்கேடியர் தயாரட்ன தெரிவித்துள்ளார்.

லான்ஸ் கோப்ரல் அஜித் தசாநாயக்கா, இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவரென சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. அவருடன் அந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த போது கொல்லப்பட்ட செ.பிரபாகரன் என்பவரை பொதுமகன் என்றும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. இவர் கருணா குழுவைச் சேர்ந்த வெள்ளைப் பிரபா எனவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக இவர் தீவிரமாக இயங்கி வந்ததாகவும தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மட்டு நகர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதிராஜாவின் கொலையுடனும் கறுவாக்கேணியில் சுதா என்ற போராளி கொல்லப்பட்ட சம்பவத்துடனும் இந்த வெள்ளைப் பிரபா நேரடியாகச் சம்பந்தப்பட்டவரென்றும் புல்லுமலையில் புலிகளின் காவல் நிலைகள் மீதான தாக்குதலிலும் இவரது பங்களிப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் வடக்கு, கிழக்கிலும் கொழும்பிலும் பிஸ்டல் குழுவால் கொல்லப்படும் எட்டாவது இராணுவப் புலனாய்வாளர் இவர் என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் மிக நீண்ட காலத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு பகுதிக்கு வெளியே இராணுவத்தைச் சேர்ந்த புலனாய்வாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## அரசே நீதிபதியின் கொலைக்கான முழுப்பொறுப்பு – ஐ.தே.க

## கொலைக்கு புலிகள் காரணமல்ல – சட்டத்தரணிகள் சங்கம்

(22.11.04)

படுகொலை செய்யப்பட்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலையை ஐக்கிய தேசிய கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி விடுத்துள்ள அறிக்கையில் இதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் தான் ஏற்க வேண்டும் என் குறிப்பிட்டுள்ளது. சட்டம் அமைதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக தனிப்பட்ட குரோதங்களும் கொலை வெறிகளும் புரையோடிப் போயுள்ளது. கொல்லப்பட்ட நீதிபதியின் மரணம் கவலைக்குரியது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, படுகொலை செய்யப்பட்ட மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை திட்டமிட்ட நடவடிக்கை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் இந்த குற்றத்தை சுமத்திய சட்டத்தரணிகள் சங்கம், ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக இவரது வீட்டு தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்பு பாதுகாப்பும் வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு, முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் இதே பாணியில் தான் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பதற்குரிய வாய்ப்புகள் முற்றாக இல்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருட சிறைத் தண்டனை விதித்த இதே நீதிபதி தான் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தாக்குதல் வழக்கில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 4 பேருக்கு மரண தண்டனை விதித்தார் என்றும் ஊடகவியலாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.


உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் ஆசிரியர் லிங்கம் அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
இடம்: Breitenreinplatz -27, Bern

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
இடம்: Eigerplatz, Bern

தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33

# புலிகளை விட்டுவிட்டு நோர்வே எங்களையே அழுத்துகிறது

## விடைபெற்றுச் செல்லும் ஆர்மிற்றேசிடம் சந்திரிகா முறைப்பாடு



(22.11.04)

விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடாது தங்களுக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்க நோர்வே அனுசரணையாளர்கள் முற்படுவதாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமெரிக்காவிடம் முறைப்பாடு செய்துள்ளார். பதவியிலிருந்து விலகிச் செல்லும் அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் கடந்த வெள்ளிக்கிழமை சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இலங்கை நிலைமைகள் குறித்து உரையாடினார்.

இதன்போதே ஜனாதிபதி இந்தக் குற்றச்சாட்டை ஆர்மிரேஜிடம் தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதில் விடுதலைப் புலிகள் வளைந்து கொடுக்க மறுக்கும் அதேநேரம் அவர்கள் மீது அழுத்தம் கொடுக்காது நோர்வே, எங்கள் மீதே அழுத்தங்களை பிரயோகிக்கின்றது என்று முறைப்பாடு வைத்துள்ளார்.

அண்மையில் இலங்கை வந்தபோதே நோர்வே அனுசரணையாளர்கள் தங்கள் மீது இந்த அழுத்தத்தை பிரயோகித்ததாக சந்திரிகா ஆதங்கப்பட்டுள்ளார். அதேநேரம் விடுதலைப் புலிகள் மீது இது போன்ற அழுத்தத்தை பிரயோகிக்காதது குறித்தும் தனது அதிருப்தியை தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்காக விடுதலைப் புலிகள் முன் வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுகளை ஆரம்பிக்கவும் தான் தயாராயிருந்ததாக ஆர்மிரேஜிடம் தெரிவித்த அவர், விடுதலைப் புலிகளும் அரசின் யோசனை குறித்து பேசவேண்டுமெனவும் கூறியுள்ளார்.

இதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சி தேசிய சமாதான ஆலோசனைப் பேரவையில் கலந்து கொள்ள வேண்டுமென ரிச்சர்ட் ஆர்மிரேஜ், விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார். எனினும் தாங்கள் ஜனாதிபதியின் சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்குவதாகவும் முதலில் ஜனாதிபதி பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் ஆர்மிரேஜிடம் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளதாக தெரியவருகின்றது.



## 30 வருடங்களிற்குப் பிறகு மீண்டும் மரணதண்டனை!

(22.11.04)

கொலை, போதைவஸ்து விற்பனை மற்றும் பாலியல் வல்லுறவு குற்றங்களுக்கு இனிமேல் மரண தண்டனை என சிறீலங்கா அறிவித்துள்ளது. நீதிபதி அம்பேபிட்டியாவின் கொலை தொடர்பாக ஆராய்ந்த சிறீலங்கா ஜனாதிபதி தலைமையிலான உயர்குழு, கொலை - போதைவஸ்து விற்பனை மற்றும் பாலியல் வல்லுறவு போன்ற குற்றங்களுக்கு மரணதண்டனையை அறிவித்துள்ளது.

30 வருடங்களிற்குப் பிறகு தற்போதே மீண்டும் மரண தண்டனை இவ்வாறான குற்றங்களிற்கு அமுலிற்கு வருகிறது. ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான உயர்மட்ட மகாநாட்டில் இதற்கான உத்தரவை சந்திரிகா பிறப்பித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி இந்த உயர்மட்ட மாநாட்டைக் கூட்டி மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை தொடர்பாக ஆராய்ந்த பின்பு இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் வருமாறு, குற்றப் புலனாய்வுத்துறை உடனடியாக மீளாய்வு செய்யப்பட்டு புனரமைக்கப்பட வேண்டும். குற்றவியல் சட்டத்தில் மேலதிக திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இதற்கான அறிக்கையை 4 வார காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற பாதுகாப்பிற்காக விசேட பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டு பொலிஸ் மா அதிபர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் நேரடி கண்காணிப்பில் எதிர் வரும் 26ம் திகதி முதல் செயல்படவேண்டும்.

தமிழர் தாயகப்பிரதேசங்களில் கடந்த காலங்களில் சிறீலங்காப் படையினர் படுகொலைகளையும், பாலியல் வன்முறைகளையும் மிகக் கொடூரமாக மேற்கொண்டிருந்தனர். இவ்வாறான அத்துமீறல்களில் ஈடுபட்ட படையினருக்கும் தண்டனை வழங்கப்படுமா என்ற கேள்வியே தம்முள் எழும்புவதாக, சந்திரிகாவின் இப்புதிய சட்ட நடவடிக்கை அறிவிப்பை கேள்விப்பட்ட ஒருவர், தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

## அரசியல்துறை அலுவலகம் மீது தொடர் தாக்குதல்கள்

### தாக்குதல்களை காரணம்காட்டி படையினர் மீண்டும் சோதனைகளை அதிகரித்தனர்

### போராளிகளுக்கு ஏதாவது நேர்ந்தால் இராணுவத்தினரே பொறுப்பு என கௌசல்யன் அறிவிப்பு

(22.11.04)

விடுதலைப் புலிகளுக்கெதிராக இடம்பெற்று வரும் தாக்குதல்களையடுத்து மட்டு. நகரிலும், அதன் புறநகர்ப் பகுதியிலும் பாதுகாப்பைப் பொலிசாரும், படையினரும் பெருமளவில் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் நகரிலும் சுற்றுப் புறங்களிலும் படையினரும், பொலிசாரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

மட்டு.நகரின் மத்தியில் புளியந்தீவு கோட்டப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீதும் கஜுவாஞ்சிக்குடியில் பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறை அலுவலகம் மீதும் சனிக்கிழமை நள்ளிரவு இனந்தெரியாதோரால் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. கடந்த வாரமும் ஆரையம்பதி மற்றும் அக்கரைப்பற்றுப் பகுதிகளில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன், வாழைச்சேனையில் போராளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிளாஸ்ரிக் கான் ஒன்றுக்குள் `சி4' ரக வெடிமருந்தையும், இரும்புத்துண்டுகள், சைக்கிள் போல்ஸ்களையும் நிரப்பியே இக்குண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்தே தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் செல்கின்றனர். இதேவேளை, கஜுவாஞ்சிக்குடியிலுள்ள பட்டிருப்பு கோட்ட அரசியல் துறை அலுவலகம் மீதும் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குண்டு முன்புறச் சுவரில் பட்டு வெடித்தமையினால் கட்டடம் சிறு சேதத்திற்குள்ளானது. அங்கிருந்தவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. 24 மணிநேரமும் பொலிஸ், விசேட அதிரடி ப்படை மற்றும் இராணுவ கண்காணிப்பிற்கு உட்பட்ட பாதுகாப்புப் பிரதேசங்களிலே இந்த கைக்குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த முறை இராணுவத்துடன் நடைபெற்ற சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் இந்தத் தாக்குதல்கள் குறித்து சுட்டிக் காட்டப்பட்ட அதேநேரம், சனிக்கிழமை இருதரப்புக்குமிடையே நடைபெறவிருந்த சந்திப்பிலும் இவைபற்றிப் விடுதலைப் புலிகள் பிரஸ்தாபிக்க விருந்தபோதிலும், படையினரின் வேண்டுகோளின் பேரில் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று அதிகாலை முதல் படையினரும், பொலிசாரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.



வீதிச்சோதனை நடவடிக்கையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வீதித் தடைகளும் அமைக்கப்பட்டு வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களும் சோதனையிடப்படுகின்றன. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கொள்கலன்களில் அடைக்கப்பட்ட குண்டுகளைப் பயன்படுத்தியே கடந்த சில தினங்களாக விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பொது மக்கள் வீடுகளின் மீதும் நடத்தப்பட்டு வரும் குண்டுத் தாக்குதல்களிலும் சம்பந்தப்பட்டவர்கள் மட்டக்களப்பு நகரில் நடமாடுவதாகத் தமக்குக் கிடைத்த தகவல்களையடுத்தே இந்த வீதிச் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர். நகரின் முக்கிய பல சந்திகளில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசார், பலரையும் உடற்சோதனைகளுக்கும் உட்படுத்தினார்கள்.

இதேவேளை, மட்டக்களப்பு நகரிலும் நகருக்கு வெளியேயுள்ள முகத்துவாரம் வீதி மற்றும் பாலமீன்மடு ஆகிய இடங்களில் சிறீலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் இன்று அதிகாலை 10க்கும் மேற்பட்ட வீடுகளில் தேடுதலை மேற்கொண்டனர். நீதிமன்ற அனுமதி பெற்று தெரிவு செய்யப்பட்ட சில வீடுகளில் இந்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக சிறீலங்கா பொலிசார் தெரிவித்தனர்.

இந்த வீடுகளில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், சந்தேகத்திற்குரிய நபர்களின் நடமாட்டங்கள் காணப்படுவதாகவும் கிடைத்த தகவலின் பேரில் இந்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர். இன்று அதிகாலை 5.00 மணி முதல் காலை 7.30 வரை பொலிசாரும் இராணுவத்தினரும் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து சென்று சமகாலத்தில் இத் தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மாவீரர் தின வாரம் ஆரம்பமாகவிருந்த நேரத்தில் நடைபெற்ற இத் தாக்குதல் சம்பவம் குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிடப்பட்டது. இது குறித்து அவர்கள் சம்பவ இடங்களுக்கு நேரில் சென்று விசாரணையை ஆரம்பித்துள்ளார்கள்.

இதுஇவ்வாறிருக்க, மட்டக்களப்பு நகரிலும் கஜுவாஞ்சிக்குடியிலும் அரசியல்துறை அலுவலகங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

போராளிகளுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமானால் அதற்கான பொறுப்புகளை சிறீலங்கா இராணுவம் தான் ஏற்க வேண்டுமென்றும் அவர் எச்சரித்துள்ளார். இது தொடர்பாக, நேற்று மாலை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்று வரும் இத்தகைய சம்பவங்கள் குறித்து நாங்கள் பலமுறை படைத் தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும், எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றுதான் கருதுகின்றோம். அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றிருக்க மாட்டாது.

மட்டக்களப்பு நகர அலுவலகம் அமைந்துள்ள இடம் இராணுவத்தின் பாதுகாப்பிற்கு உட்பட்ட பிரதேசம். அதுபோல் கஜுவாஞ்சிக்குடி அலுவலகம் அமைந்துள்ள இடம் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பிற்கு உட்பட்ட பிரதேசம். அப்படியிருந்தும் இப்படியான சம்பவங்கள் தொடருகின்றன என்றால், இதற்கு யார் பொறுப்பு?. எமது போராளிகளுக்கு அச்சுறுத்தலை உருவாக்கிய நிகழ்வை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். போராளிகளுக்கு ஏதாவது நடக்குமானால் அதற்கான பொறுப்புகளை இராணுவம் தான் ஏற்க வேண்டும். இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு தெரிவித்துள்ளோம் என்றார்.

# தமிழ் மக்களின் ஆணையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## – சு.ப.தமிழ்ச்செல்வன் –

(20.11.04)

தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய தமிழ் மக்களின் ஆணையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். சிறீலங்கா நாடாளுமன்றத்திற்கான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பிணர்களை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறீலங்கா அரசாங்கமானது தமிழீழ விடுதலைப் புலிகள்தான் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தடையாக உள்ளனர் எனவும், இது இழுபட்டுச் செல்வதற்கு புலிகள்தான் காரணமெனவும் சர்வதேச சமூகத்திற்கு பல வழிகளிலும் பிரச்சாரப்படுத்தி வருகின்றனர். இதில் எந்தவித உண்மையும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக பேச்சுக்களை தொடர்வதற்கும் தமிழ் மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேசுவதற்கு தயாராகவே இருப்பதாக நாங்கள் எப்போதும் தெரிவித்து வந்துள்ளோம்.

இது தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு தொடர்ந்து தெளிவாக்கி வந்துள்ளோம். இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் முழுமையாக செயற்பட்டு வருகின்றனர். தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கக் கூடிய தமிழ் மக்களின் ஆணையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். இந்தியா, ஒரு தலைப்பட்சமாக சிறீலங்கா அரசோடு தமிழர் தாயகப் பகுதியில் எந்தவிதமான ஒப்பந்தங்களையும் செய்து கொள்வதை தமிழ் மக்கள் சார்பாக எவருமே விரும்பவில்லையெனவும் அவர் தெரிவித்தார். இந்தியாவின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி விமான ஓடுதளம் புனரமைப்பு தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கும் இந்திய அரசிற்கும் இடையே ஒரு இடைவெளியை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் ஒரு உத்தியாகவே நாம் இதைப் பார்க்கின்றோம். இது தொடர்பாக தமிழ் மக்கள் கூட தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆகவே தமிழ் மக்களுடைய அபிலாசைகளை அவர்களுடைய நலன்களுக்கு விரோதமாக இந்திய மத்திய அரசாங்கம் சிறீலங்கா அரசாங்கத்துடன் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாதென்பது எங்களுடைய நிலைப்பாடும் எதிர்பார்ப்பும் ஆகுமெனவும் அவர் தெரிவித்தார்.

# சீன விமான விபத்தில் 53 பேர் பலி



(22.11.04)

சீனாவில் உள்ள பொவுடோயு நகரில் இருந்து நேற்று சாங்காய் நகருக்கு புறப்பட்ட பயணிகள் விமானம் சிறிது நேரத்திலேயே நடுவானில் வெடித்து சிதறி அருகில் இருந்த ஏரியில் விழுந்தது. இதன்போது விமானத்தில் பயணம் செய்த 47 பயணிகளும், விமானிகள் உட்பட ஆறு ஊழியர்களும் என 53 பேரும் விபத்தில் பலியாகி விட்டார்கள். விமானம் விழுந்ததில் அங்கிருந்த ஒரு வீடு சேதம் அடைந்தது.

தகவல் அறிந்ததும், தீயணைப்பு படையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். விபத்து நடந்த பகுதியில் கடும் பனிப் பொழிவாக இருந்தது. இதனால் ஏரியில் பனிக்கட்டி உறைந்திருந்தது. அந்த பனிக்கட்டிகளை உடைத்து பலியானவர்கள் உடல்களை மீட்கும் பணி நடந்தது. பல மணி நேர போராட்டத்துக்கு பிறகு 17 பேரின் உடல்களையே தீயணைப்பு படையினர் மீட்டனர். தொடர்ந்து உடல்களை தேடி வருகிறார்கள். பலியானவர்களில் 3 பேர் வெளிநாட்டவர்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதியாக தெரியவில்லை.

# 20 வருடங்களின் பின் மகளைப் பார்த்த மகிழ்ச்சி

## சிறீலங்கா பொலிசாரின் வெறித்தனத்தால் ஒருநொடியில் அழிந்தது

(21.11.04)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பயணிகள் வாகனமொன்றின் மீது அநுராதபுரத்தில் வைத்து ஆயுதபாணிகளினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பயணியொருவர் கொல்லப்பட்டுள்ளார். அநுராதபுரம் யாழ்ப்பாணச் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோப்பாயைச் சேர்ந்த ஆர்.சுப்பிரமணியம் (58) என்பவரே உயிரிழந்தார்.

ஜேர்மனியிலிருந்து கடந்த 20 வருடத்திற்குப் பின் நாடு திரும்பிய மகள், மருமகன் மற்றும் அவர்களது பிள்ளைகளுடன் கடந்த திங்கட்கிழமை இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து இவர் வானொன்றில் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டுள்ளார். வானில், சாரதி உட்பட இவரது குடும்பத்தவர்களும் உறவினர்களுமென 12 பேர் இருந்துள்ளனர். வான் அநுராதபுரம் - யாழ்ப்பாணச் சந்திக்கு அண்மையில் சென்றபோது, அங்கிருந்த வீதிச் சோதனை நிலையத்தில் இவர்களது வான் நிறுத்தப்பட்டு சோதனையின் பின் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. அவ்விடத்திலிருந்து புறப்பட்ட வான் சுமார் 50 மீற்றர் தூரம் சென்றிருந்த போது வானின் பின்புறப் பகுதி நோக்கி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், ஒரு குண்டு வானைத் துளைத்து பின்புறத்திலிருந்த சுப்பிரமணியம் என்பவரை தாக்கியுள்ளது.

எனினும் அச்சம் காரணமாக சாரதி வானை நிறுத்தாது மிக வேகமாகச் செலுத்தி வந்து வவுனியாவிலேயே வானை நிறுத்தியுள்ளார். அவ்வேளையில் அவர், வானுக்குள்ளேயே இறந்துவிட்டார். இது பற்றி வவுனியா பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்களும் வானை வந்து பார்வையிட்டு விசாரணை நடத்தினர். வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியனும் அவ்விடத்திற்கு வந்து விசாரணை நடத்தியதுடன் இது தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

# `வான் கரும்புலிகள்' உருவாகியுள்ளது

## சிறீலங்கா புலனாய்வுத்துறை கூறுகின்றது

(22.11.04)

கரும்புலிகள், கடற்கரும்புலிகள் போன்று, தற்போது வான் கரும்புலிப் படையணியொன்றையும், விடுதலைப் புலிகள் அமைத்து வருவதாக சிறீலங்கா இராணுவ புலனாய்வுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது. தற்போது வன்னிக்காட்டின் ஒரு பகுதியில் வான் கரும்புலிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

தரைக் கரும்புலிகள் படையணிக்கும், கடற்கரும்புலிகள் படையணிக்கும் சமனாக வான் கரும்புலிகள் அணி உருவாக்கப்பட்டு வருகின்றது. தற்போது விடுதலைப் புலிகள் வசமிருப்பதாகக் கூறப்படும் மூன்று அல்லது நான்கு இலகுரக வானூர்திகள் மூலம் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் சில முக்கிய இலக்குகளை தாக்கும் வகையில் தற்போது மண்மூடைகள் அடுக்கப்பட்டும் மாதிரிகள் தயாரிக்கப்பட்டும் வான் கரும்புலிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அரசியல் தலைவர்கள், படைமுகாம்கள் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளும் இதிலடங்கும்.

வான் கரும்புலிகள் தங்கள் உடலில் வெடி குண்டுகளைப் பொருத்தும் அதேநேரம், வானூர்தியிலும் பெருமளவு வெடிமருந்தை நிரப்பிச் சென்று இலக்கு மீது தாக்குவதே இவர்களது திட்டமாகும். பயிற்சி நடவடிக்கை ஒன்றின்போது, பொது நிகழ்வொன்றில் அரசியல்வாதியொருவர் உரையாற்றிக்கொண்டிருக்கும் போது அப்பகுதிக்கு வரும் வான் கரும்புலிகள் அவரை இலக்கு வைப்பது போன்றும் ஒத்திகை பார்க்கப்பட்டுள்ளதாகவும் சிறீலங்காப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

# மாவீரர்களின் பெற்றோர் வரலாற்றில் என்றுமே மதிக்கப்பட வேண்டியவர்கள்

## – மட்டு. அம்பாறை தளபதி ராம்

(22.11.04)

மாவீரர்களின் தியாகத்தின் பெருமையினை நாம் வழிபடுகின்ற தெய்வத்தையும் விட மேலாகக் கருத வேண்டும் இவர்கள் சாகவில்லை, சரித்திரமாகி விட்டார்கள். மீண்டும் இம்மண்ணில் பிறப்பார்கள். இவ்வாறு நேற்று கரடியனாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர்களின் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய மட்டு. அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ராம் தெரிவித்தார்.

தொடர்ந்து கூறுகையில், கடந்த 25 வருட காலமாக இந்தப் போராட்டப் பாதையில் கலந்து கொண்டு வீரச்சாவடைந்த மாவீரர்கள் என்றுமே மகத்தானவர்கள் மாவீரர்களின் நெருப்பில் யாரும் விளையாட முடியாது. இவர்கள் செய்த தியாகம் என்றும் விடுதலையை வென்றெடுப்பதற்கு உறுதியாக இருக்கும் இந்த மாவீரர்களின் பெற்றோர்கள் என்றுமே மதிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் குறிப்பிட்டார்.



மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்

Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்

சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 கரட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்

மோகன் ஜுவல்லர்ஸ்

வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes
என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

MOHAN JEWELLERS & TEXTILES
Elisabethen anlage 25
4051 Basel
Tél - 061 271 41 09
Fax - 061 271 41 17
WWW.mohantextiles.com



ஆயுதங்கள் மட்டும் முக்கியமல்ல, தந்திரங்களும் உபாயங்களும் முக்கியம்.

தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்



# Pulse tele systems

அகவை 50

உலகெங்கும் உள்ள உறவுகளுடன் உரையாடி மகிழ
உங்கள் இதயம் துடிப்பது தெரிகிறது

Pulse Tele Sys
Amplify your Voice

எங்கள் இணைப்பின் மூலம் உலகெங்கும் இலவசமாக இணைந்து பேசுங்கள்.

DSL ,ADSL இணைப்புகொண்ட அனைவரும் எமது சேவையால் பயன்பெறலாம்.

உலகின் எப்பாகத்திற்கும் Pulse ல் இருந்து Pulseக்கு தொடர்பு கொண்டால் இலவசம்

பின்வரும் நாடுகளில் Pulse தொடர்புகளை ஏற்படுத்த அந்தந்த நாடுகளின் தொலைபேசி இலக்கங்களை தந்துள்ளோம்.

இலவசமாக உரையாட உதவுகிறது Pulse

**Partners Country & Phone Numbers : Paris :** 01 48 51 96 07, 06 64 63 34 42
**London:** 00 44 208 66 57 482- 00 44 79 51 91 75 17 - **Holland** : 31 64 61 60 802
**Swiss :** 0041 318 396 255 - **Swiss** : 0041 79 77 52 167 **Canada :** 001416 888 05 10
**India :** 91 44 52 08 34 60 **Germany** :0049 202 70 53 631. Mobi:0049 176 23217085

Pulse இருந்து ஏனைய தொலைபேசிக்கு ஒவ்வொரு நாட்டுக்குமுரிய கட்டணங்கள் பின்வருமாறு



**Pulse tele systems**
*www.pulseurope.Com*



ஐரோப்பா எங்கும் 0,016Cts மட்டுமே - கனடா 0.016 Cts மட்டுமே இந்தியாவிற்கு 0,12Cts, கைத்தொலைபேசிக்கு 0,14 Cts இலங்கை 0,12 Cts, Handyக்கு 0,12 Cts துருக்கி 0,12 Cts Handyக்கு 0,16 Cts.

# A.R.INTERNATIONAL

வங்கக் கடலெங்கும்
எங்கள் தமிழ் காட்டி
பொங்கும் தமிழுக்கோர்
சங்கம் தந்த தலைவனே.....
எங்கள் தேசம்
கங்குல் பகல்பட
உன் - தங்கத்திருவடி
வேண்டும் வேண்டுமென
பொன் விழாக்காணும்
எங்கள்........
புன்னகை அரசனுக்கு
பொன்னான வாழ்த்துக்கள்
முத்தாக மலரட்டும்........



அனைத்துவித சர்வதேச உள்நாட்டு தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு **SFR, Orange Mobile** அட்டைகளும் இங்கே கிடைக்கும்.

M.Mohan
5 Rue Perdonnet, 75010 - Paris
Tél : 06 62 86 03 52

தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியமாய்..

# பூபாளம் பொத்தகசாலை

தாயக வெளியீடுகள், அரசியல், கவிதை, அறிவியல், சார்ந்த நூல்களுக்கு.....



தாயக வெளியீடுகள்,
அரசியல், கவிதை,
அறிவியல், சார்ந்த
நூல்கள்,
தமிழக, கொழும்பு
சஞ்சிகைகள்,
பத்திரிகைகள்.......

இவற்றுடன் மலிவு விலையில்
பல சஞ்சிகைகள் (1.00, 0.50)

22, Rue Perdonnet,
Paris 75010,
France.
-Tél-
01 40 05 95 15
-Fax-
01 40 05 95 16



கடல் உணவு வகைகளின் சுரங்கம்

# ஆராழி

உங்களுக்குத் தேவையான அனைத்து கடல் உணவு வகைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்

தாயகக் கடலின்
சுவையுணவு சுமந்து
புலம் பெயர்ந்து வந்ததோ
இந்த ஆராழி!



D.K.S.R. Asian Suppermarkt
Lostex Plad 8E
Svendborg
5700 Denmark
004562216773

Tiefkuhl Feinkost
Kanal Str 27
67655 Kaisers lautern
Germany
00496313609655
00491776035859
00491797157501

Asia Trade Center-Gmbh
Sumpf Str 24
6300 2UG (CH)
0041417404830
0041764183553 Aschok

Millennium Traders.
47 Bis, BD de la Muette,
95140 Garges les gonesse,
France.
0033134457347
0033660293073.

Norwood Mini Market
31.Station Road
South Norwood
London
SE.25.5AH
Tel. 00442087718585
Mobil 00447958529816 -
00447795386837

Leela லீலா Leela
LEELA EXPORTS & IMPORTS SRILANKA
PROUD TO PRODUCE PLEASURE TO USE
*The Symbol of Quality*
Sole - Agent
K. Mageswaran
Kumarans Limited
Tel : 07739 25 22 23
07801 86 50 31
020 8530 3033



142-144 Hoe Street
Walthamstow
London E17 4QR

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr
www.poobalam.com

குமரன்ஸ் KUMARANS
Imports & Exports, News Agent
Off Licence & Grocery
142-144 Hoe Street
Waltha mstow
London E17 4QR
Tel:020 8521 4955
020 8521 4411
020 8530 3033
Fax :020 8521 9482
020 8530 5655






அகவை 50

மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல, எமது தேச விடுதலையின் ஆன்மீக அறை கூவலாகவே மாவீரர்களது மரணம் திகழ்கின்றது.

**தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்**



வெ டோ ன் ரெ லி கொ ம்

இறப்பிற்கும் பிறப்பிற்கும் பெருமை சேர்த்து
என்றும் எம் இதயங்களில் வாழும் மாவீரருக்கு
எமது வீரவணக்கம்

தமிழ் தாயக மானம் காத்த
தேசிய தலைவருக்கும்
எமது வாழ்த்துகள்

வெக்டோன்
டெலிகொம்
தொலைக்காட்சி

வெ க் டோன் தொ லை க் கா ட் சி

GANAPATHY CASH & CARRY
*For all your Groceries & Seafood*





உங்களுக்கு தேவையான இலங்கை இந்திய உணவுப்பொருட்கள், பழவகைகள், சகலவிதமான உடன்மரக்கறி வகைகள், கடலுணவுப்பொருட்கள், அனைத்துவிதமான மளிகைப்பொருட்கள் ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் நினைவில் என்றும் இருக்கவேண்டிய இடம்...
WINE MART
34-38 Ealing Road, Wembley, Middx Ha0 4TL
Tel - 020 8795 4627 / Fax -020 8903 3185